இறைவழியில்

# இனிய சுகப்பிரசவம்



நூல் ஆசிரியர்:-

டாக்டர்.ஃபஸ்லூர் ரஹ்மான்,
MBBS, DV, MRSH, MD, PhD(Acu)

# உள்ளடக்கம்

1) கருவில் இருக்கும்போது ஸ்கேன் செய்தால் குழந்தையின் மூளை வளர்ச்சி பாதிக்கும்.
2) எங்கள் அறிவுரைக்குப் பிறகுதான் தாம்பத்தியம் வைத்துக் கொள்ள வேண்டும்! ஆங்கில மருத்துவம் எச்சரிக்கை!
3) கர்ப்பிணிகளுக்கு வைட்டமின்களும், இரும்புச் சத்து மாத்திரைகளும் கொடுக்கலாமா?
4) மாரடைப்பு மற்றும் தாய்மார்களுக்கு கர்ப்பப்பை நோய்கள் ஏன் உருவாகிறது?
5) சுகப்பிரசவத்தை சீரழிக்கும் ஆங்கில மருத்துவம்!
6) கருத்தடை ஆபரேஷனால் விளையும் கேடுகள்!
7) உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு எந்த நோயும் வராமல் காப்பாற்ற...!
8) செயற்கை கருவூட்டல் ஒரு கரும வினை!
9) மருந்து, மாத்திரை, மருத்துவமனை - இவைகளுக்கு செல்லாமல் சுகப்பிரசவம் வேண்டுமா?
10) பிரசவத்தின் போது இறப்பைத் தடுக்க...
11) இனிய சுகப்பிரசவத்திற்கு..!
12) ஆறு மாத கர்ப்பிணி சிசுவின் இருதயம் துடிக்கவில்லை! கர்ப்பம் தரித்ததன் முதலாக கால்ஷியம் மருந்துகள் கொடுத்ததன் விளைவு!
13) சில கேள்விகள் ஆங்கில மருத்துவர்களுக்கு ....!
14) பின் இணைப்பு

# முன்னுரை

மனிதனாகப் பிறப்பதும், வளர்வதும், பருவம் அடைவதும், கருத்தரிப்பதும், பிரசவிப்பதும் இயற்கையின் சூழலில் உள்ளவையாகும். மனிதனுடைய வளர்ச்சிப் பருவத்தில் மிக முக்கிய பங்கு வகிப்பது அவனது தேவைகளும், அதன் அடிப்படையில் அவனுக்கு இயற்கையில் பெருகக்கூடிய அறிவின் வளர்ச்சியுமே.

ஒவ்வொரு மனிதனும் அவனவன் தேவையில் – அந்தத் தேவைகளைக் கொண்டு அவனுடைய நெஞ்சத்தில் அவன் நிரப்பமாக நிலைத்திருக்கும் காலமெல்லாம் அவனுடைய அறிவானது அவனுடைய தேவையின் அளவில் உருவாக ஆரம்பித்து, பின்னர் நிலையான வளர்ச்சியில் அந்த அறிவானது உயர்ந்தோங்குகிறது. இறைவன் தன் புறத்திலிருந்து ஒவ்வொருவருடைய பெருமையின் அளவீட்டைக் கொண்டே ஒருவனுக்கு எந்த அளவுக்கு அவனுடைய ஞானங்களிலிருந்து அறிவைக் கொடுக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்கிறான். எவருக்கு பெருமை இல்லையோ, அவருக்கு அறிவின் வளர்ச்சியை அதிகரிக்கின்றான். இன்னும் அந்த வளர்ச்சி நேர்வழியிலும் இருக்கின்றது. அந்த வளர்ச்சியில் அவன் பெருகும் பொழுது, பெருமிதம் கொள்வதில்லை. மாறாக, பணிவும், அடக்கமும் அவனுடைய இறைவனால் அறிவின் வளர்ச்சியோடு அவனுக்குக் கற்பிக்கப்படுகிறது.

ஆனால், எவன் ஒருவனுடைய இருதயத்தில் பெருமையும், அகம்பாவமும் இருக்கிறதோ, அவனுக்கும் அறிவின் வளர்ச்சியை இறைவன் அளிக்கிறான். ஆனாலும், அவன் தன் அறிவை தனக்கே கேடான வழிகளில் பெருமை, அகம்பாவத்தின் காரணமாக மாற்றிக் கொள்கிறான். இதுவே உறுதியான வழிகேட்டிற்கான பாதை. ஆங்கில மருத்துவ அறிவு இந்த வகையைச் சார்ந்தது. ஆங்கில மருத்துவர்களைப் போன்று ஆணவமும், வீண் பெருமையையும், பகட்டும், ஏமாற்றும் கொண்ட மருத்துவம் வேறு எந்த மருத்துவத்திலும் காண முடியாது. இறைவன் கொடுத்த மருத்துவ நல்லறிவு மிகக் கெட்ட மனித இன துரோகமாக மாறியது.

இதன் விளைவாக, 'நாங்கள் கருத்தரிக்கச் செய்வோம்: வளரும் சிசுவுக்கு உறுதியைக் கொடுத்து நாங்கள்தான் படைப்போம்: இன்னும் சிசுவில் ஏற்படும் உடற்கூறுகளின் குறைபாடுகளை சிசுவிலேயே கர்பத்திலேயே கண்டறிந்து அறுவை சிகிச்சை மூலம் அதனை சரிபடுத்தி விடுவோம்; இன்னும் கருவை சிதைக்கவும் செய்வோம்; பிரசவ நேரத்திற்கு முன்பாகவே அறுவை சிகிச்சை செய்து, குழந்தையை எடுத்து விடுவோம்" என்றெல்லாம் கூறிக் கொண்டிருக்கும் ஆங்கில மருத்துவத்தின் ஆணவத்தை இன்று நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



டாக்டர். ஃபஸ்லூர் ரஹ்மான்,
MBBS., MD., DV. Ph.D.

ஒரு குழந்தை இயற்கையான வழியில் பிறந்தால் அதனுடைய இயற்கைத் தன்மை அதனை வாழ வைக்கும். கர்ப்பத்தில் வளரும் பொழுதே, நோய்கள் இல்லாமல், குறைபாடுகள் இல்லாமல் அந்தக் குழந்தையானது வளரக்கூடிய அனைத்து நன்மைகளையும் கொண்டிருக்கும். நோய் எதிர்ப்பு சக்திகளையும், மன உறுதியையும், தெளிவான மனநிலையும் கொண்டு ஒரு மனிதனாக அது வளரும்.

இது எப்பொழுது, யாருக்கு சாத்தியம் என்றால், யார் தன்னை மருந்துகளுக்கும், மாத்திரைகளுக்கும், மருத்துவத்திற்கும் உட்படுத்திக் கொள்ளாமல் பொறுமையைக் கொண்டும், நம்பிக்கையைக் கொண்டும் பாதுகாத்துக் கொள்கிறார்களோ, அவர்களுக்கே சாத்தியம். குறிப்பாக, தன்னுடைய கர்ப்ப காலத்தின் போது எந்தப் பெண், மருத்துவத்தை விட்டும் விலகி, இறைவனுடைய பொறுப்பில் உருவாகிக் கொண்டிருக்கும் அந்தக் கருவை மருத்துவத்தைக் கொண்டு தீட்டுப்படுத்த அனுமதிக்க மாட்டாரோ, அந்தப் பெண்ணுக்கு மேற்படி பாக்கியம் மிக்க குழந்தை நிச்சயமாக உண்டு. அதுவும் சுகப்பிரசவமாகி மடியில் தவழும்; பிரசவத்தின் போது வலியோ, வேதனையோ இருக்காது; எவ்வளவு அழகான பிரசவமாக இருக்கும் என்றால், பிரசவத்தின் போது குழந்தையின் தலை வெளியில் வருவதும் கூட தெரியாது; அது ஒரு சுகமான அனுபவம்; அரை தூக்கத்தில் நிகழக் கூடியது; இன்னும் வீட்டிலேயே நிகழும்; எந்த மருத்துவமோ, மருத்துவரின் உதவியோ அணுவத்தனையும் தேவையில்லை. ஏனென்றால், அது இயற்கையின் ஒரு அழகான நிகழ்வு.

இன்று, சுகமான இவ்வகையிலான பிரசவம் சாத்தியமா? என்பது பொதுவான கேள்வியாக இருக்கும். ஏனெனில், சமீப காலம் வரையில் ஆங்கில மருத்துவத்தின் துணை இல்லாமல் பிரசவம் முடியாது என்பது பொதுமக்கள் மனதில் வலுக்கட்டாயமாக புகுத்தப்பட்டு விட்டது. நிச்சயமாக சாத்தியம்தான்; மருத்துவர்களின் துணை வேண்டாம்; குறிப்பாக ஆங்கில மகப்பேறு மருத்துவத்தை நெருங்கவும் கூடாது என்பதை அறிவிக்க வேண்டி, இந்தப் புத்தகம் கண்கூடான சாட்சியங்களைக் கொண்டும், போதுமான அத்தாட்சிகளைக் கொண்டும், தெளிவான மருத்துவ ஞானங்களுடன் வெளியிடப்படுகிறது. இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் மகத்தான இறை ஞானங்களால் உந்தப்படுவார்கள். இதைப் படிக்கும் எந்தவொரு பெண்ணும் ‘மருத்துவம் வேண்டாம்’ என்ற தெளிவான மனநிலைக்கு வருவார். பிரசவத்தைப் பற்றி கவலையே அவர்களுக்கு இருக்காது; மாறாக, பிரசவம் எப்பொழுது என்ற அழகான தருணத்தை எதிர்நோக்கிக் காத்திருப்பார்கள். குழந்தை பெற்ற பிறகும் அந்த சுகமான அனுபவத்திற்காக மீண்டும் மீண்டும் குழந்தைகள் பெற்றுக் கொள்ளத் தோன்றும்.

தாய்மார்களே, இதில் உள்ள ஒவ்வொன்றும் சத்தியம். நீங்கள் விரும்பக் கூடியது; நீங்கள் அனுபவிக்க இருப்பது. இறைவன் நாடினால், நீங்கள் இவ்விதமாக பிரசவிக்கும் குழந்தைகள் இறை ஞானங்களோடும், நல்லறிவைக் கொண்டும்,

நேர்வழியிலும் அக்குழந்தைகள் பொறுமை என்ற நற்குணத்துடன் வளரும். எனவே, அந்தக் குழந்தைகளை பெரும்பாலும் நோய்கள் தீண்டாது. இயற்கையான நோய் எதிர்ப்பு சக்தியைக் கொண்டும், இன்னும் குணநலன்களின் மேன்மையைக் கொண்டும் தத்தம் நன்மைகள் பெருகும். இறைவன் நாடினால், இந்தப் புத்தகம் உலக மக்களுக்கு ஒரு நற்செய்தியாகவும், அருட்கொடையாகவும் அமையும்.

**டாக்டர். ஃபஸ்லூர் ரஹ்மான், MBBS., MD., DV. Ph.D.,**

# அணிந்துரை

அனைத்துப் புகழும், கண்ணியமும் அகிலங்களின் இறைவன் அவன் ஒருவனுக்கே!

கிட்டத்தட்ட 30 வருடங்களாக பிரசவம் பார்த்து வந்த டாக்டர் என்ற முறையிலும், இப்பொழுது இறைவழியில் இருப்பதாலும் என் கருத்துக்கள் மூலம் உங்கள் அனைவரையும் உண்மை என்ற இறை சத்தியத்தின் பக்கம் திருப்ப ஆசைப்படுகிறேன். நார்மல் டெலிவரி என்ற பெயரில் இதுநாள் வரை நாங்கள் செய்து வந்த கொடுமைகள் எப்படிப்பட்டவை என்று இறைவழி பிரசவங்களின் நிகழ்வுக்குப் பின் அறிகிறேன். மனதளவில் இறைவனிடம் பாவமன்னிப்பிற்கான பிரார்த்தனையுடன் இதனை எழுதுகிறேன்.

மருத்துவமனை ஆரம்பித்த காலங்களில் எல்லா பிரசவங்களும் எப்படி அழகான சுகப்பிரசவங்களாக நிகழ்ந்தன?

காலப்போக்கில் இப்பொழுது நடக்கும் அறுவை சிகிச்சைகளுக்கு எப்படி மாறின? காரணங்கள்:

1. மாதவிடாய் நாட்கள் தள்ளிப் போனவுடனேயே டாக்டர்களிடம் காண்பிப்பதை காட்டாயமாக்கி ஆரம்பித்ததிலிருந்தே அவர்கள் மனதில் பிரசவத்தைப் பற்றிய பயத்தை ஏற்படுத்தி விடுகிறார்கள்.

2. சோதனை என்ற பெயரிலும், ஊட்டச்சத்து மாத்திரைகளாலும் இயற்கையான உயிரோட்டமுள்ள உணவுச் சத்துக்களையும், இறைவனையும் மறக்கடித்து அத்தனை பிரச்சினைகளுக்கும் ஆளாக்குகிறார்கள்.

3. டாக்டர்கள் பொருள் சம்பாதிக்கும் பேராசைக்கும், கட்டாயத்திற்கும் உட்பட்டு பிரசவத்திற்கு வருபவர்களை தேவையில்லாமல் அறுவை சிகிச்சைக்கு ஆளாக்குகிறார்கள்.

ஆரம்பத்திலிருந்தே அவர்கள் கண்காணிப்பில் செக்கப் செய்து கொண்டும், மருந்துகள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் நிலையிலேயே விதவிதமான பெயரில், அதாவது

1. Elderly primi – 35 வயதிற்கு மேல் கருத்தரிப்பது.
2. B.P – உயர் இரத்த அழுத்தம்.
3. Eclampsia – வலிப்புடன் கூடிய உயர் இரத்த அழுத்தம்.
4. APH – பிரசவத்திற்கு முன் ஏற்படும் கட்டுப்படுத்த முடியாத இரத்தப்போக்கு.
5. PPH – பிரசவத்திற்கு பின் ஏற்படும் கட்டுப்படுத்த முடியாத இரத்தப்போக்கு.
6. Breech – முதலில் கால் வருவது.
7. Transverse Lie – குழந்தை குறுக்கே இருப்பது.

Back To Top

டாக்டர். ஃபஸ்லூர் ரஹ்மான்,
MBBS., MD., DV. Ph.D.

8. Placenta previa – நஞ்சு முதலில் வருவது.
9. Disproportionate pelvis – கோணலான இடுப்பு எலும்பு.

என்றும் இதுபோல ஓராயிரம் பெயர்களைக் கூறி எதையும் தடுக்க வகை தெரியாமல் அறுவை சிகிச்சை மூலம் உயிர் காப்பதாகக் கூறி சிசேரியன் ஆபரேஷன் செய்து விடுவார்கள். உங்களையும் பயமுறுத்தி, கட்டாயப்படுத்தி ஆபரேஷனுக்கு ஒத்துக் கொள்ள வைத்து, விளைவுகளுக்கு நீங்களே பொறுப்பு என்றும் கையெழுத்தும் வாங்கி விடுவார்கள்.

நார்மல் டெலிவரி என்ற பெயரில் நாங்கள் பார்க்கும் பிரசவங்கள்! இப்பொழுது நினைத்தால் மனம் பதறி இறைவனின் மன்னிப்பை நாடுகிறது. பிரசவத்தின் போது வலிக்கான மருந்துகளைக் கலந்து drips ஏற்றுவது, பிரசவத்தின் போது பிறப்பு உறுப்பை கட் பண்ணி பிறகு, தையல் போடுவது, குழந்தையின் தலை வந்ததும், அதை இழுத்து வெளியே போடுவது, நஞ்சுக் கொடியை பிடித்து இழுத்து வெளியாக்குவது இவையனைத்தும் கட்டாயமாக நிகழ்த்தப்படும் நிகழ்வுகள். இவ்வளவு தவறுகள் செய்து பிரசவம் பார்த்த பிறகு அதிலே எத்தனை பெருமை! என்னவோ மகத்தான செயல் செய்த மாதிரி! இறைவனால் மட்டுமே எங்கள் பாவங்களை மன்னிக்க முடியும்.

படைப்பாளன் தன்னால் உருவாக்கப்பட்ட அந்த கர்ப்பத்தில் உள்ள கருவின் அனைத்து தேவைகளுக்கும், தாயின் சுகமான பிரசவத்திற்கும் பொறுப்பேற்கிறான். நம்பிக்கை கொண்டவர்களுக்கு முழுமையான பாதுகாப்பும், உத்திரவாதமும் அளிக்கிறான். சுகமான, வலியில்லாத, அழகான, அற்புதமான பிரசவத்திற்கு வாக்களிக்கிறான். இன்னும் ஆயிரக்கணக்கான பிரச்சினைகளையும் இல்லாமலாக்கி அவர்களை தூக்கத்திலேயே பிரசவிக்கச் செய்கிறான்.

நமக்கும், யாவருக்கும் பொறுப்பேற்றுக் கொள்ள இறைவனே போதுமானவன். நம்பிக்கை உடையவர்கள் அவன் மீது பொறுப்பேற்படுத்தட்டும். பொறுப்பேற்படுத்துபவர்களை இறைவன் நேசிக்கிறான்.

“இறைவழியில் இனிய சுகப்பிரசவம்” என்னும் இந்த புத்தகத்தில் தங்களுடைய சுகமான பிரசவ அனுபவங்களை கூறியுள்ள அனைத்து தாய்மார்களும் இறைவழியில் இறைவனால் வழிநடத்தப்பட்டு, இறைவனை உணர்ந்து, தெளிந்து நிலைத்து அவனிடமே முழுமையாக சரணடைந்ததின் காரணமாக, அவனுடைய பேரருட்கொடையாக சுகமான பிரசவத்தையும், சுகமான இவ்வுலக, மறுவுலக வாழ்க்கையையும் வாக்களிக்கப் பெற்றவர்கள்.

இந்த உண்மைகளை எங்களை அறிய வைத்து, எங்களை இறை பாக்கியங்களுக்கு சொந்தமாக்கிய டாக்டர் ஃபஸ்லூர் ரஹ்மான் அவர்களுக்கு எங்களுடைய நன்றியை எப்படி செழுத்தப் போகிறோம்? அவரால் வழிநடத்தப்பட்டு, இறைவன்

பால் திருப்பப்பட்டவர்களின் சுகமான பிரசவ அனுபவங்களைப் படித்து எல்லோரும் மருத்துவமனை என்னும் ‘நரகத்தில்’ நுழையாமல் தங்கள் வீடுகளிலேயே சுகமாக பிரசவிக்கவும், இறைவன் பால் திரும்பி மேன்மையான வாழ்க்கையை வாழவும் எல்லாம் வல்ல சர்வமுமான இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கருணையைக் கடமையாகக் கொண்டவனே! உன்னுடைய மன்னிப்பிலும், பாதுகாப்பிலும் இந்த உலகம் மேன்மையடையட்டும்.

**டாக்டர் திருமதி P. ரேவதி MBBS**
**பாலசுப்பிரமணியம் ஹாஸ்பிடல்**
**மதுக்கூர் – 614 903**

# டாக்டர் கனகசபாபதி MD அவர்களின் அணிந்துரை



ஆங்கில மருத்துவராக பணி புரிந்து கொண்டிருந்த எனக்கு டாக்டர் ஃபஸ்லூர் ரஹ்மான் அவர்கள் இறைவழி மருத்துவத்தை கடந்த 10 ஆண்டுகளாக கற்பித்து வருகிறார்கள். இதைக் கற்றுக் கொள்ளும் சமயம் சுகப்பிரசவம் என்ற ஒரு கருத்தை டாக்டர் ஃபஸ்லூர் ரஹ்மான் அவர்கள் மக்கள் மத்தியில் எடுத்துச் சொல்ல ஆரம்பித்தார்கள். கர்ப்பிணி பெண்கள் குழந்தை உண்டானவுடன் அதை உறுதி செய்ய மகப்பேறு மருத்துவரை அணுகும் பொழுது, அவர்கள் pregnancy test செய்கிறார்கள். அதன்பின் ஸ்கேன் செய்து பார்த்து, குழந்தை இருக்கிறதா? இல்லையா என்று சொல்கிறார்கள்.

அதன்பின் அந்த கர்ப்பிணி பெண் இரத்தத்தில் சர்க்கரை, உப்பு, இன்னும் பல்வேறு நோய்கள் இருக்கிறதா என்று பார்த்து, அதற்கும் பரிசோதனை, நீர் பரிசோதனை, அதில் ஏதேனும் நோய் கண்டுபிடிக்கப்பட்டால் பிரசவமாகும் வரை Antenatal checkup என்ற பெயரில் பரிசோதனைகளையும், மருந்து, மாத்திரைகளும் தொடரும்.ஒவ்வொரு மாதமும் பெண்கள் மகப்பேறு மருத்துவரைப் பார்த்து ஆலோசனை கேட்டு அவர்கள் எழுதும் சத்து மாத்திரைகள், நோய்களுக்கான மாத்திரைகள் உட்கொள்ள வேண்டும்.

கர்ப்பிணி பெண்களுக்கு சர்க்கரை நோய் இருந்தால் இன்சுலின், BP இருந்தால் அதற்கு மாத்திரைகள், உப்பில்லாமல் உணவு, இன்னும் பெண்களுக்கு சளி, இருமல், ஆஸ்த்துமா, காசநோய், காக்காய் வலிப்பு போன்ற எந்த நோய்கள் இருந்தாலும் அனைத்திற்கும் தனித்தனியே வெவ்வேறு விதமான மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மாதமும் பரிசோதனைக்காக கர்ப்பிணிப் பெண்கள் பிரசவம் வரை படும் அவதிகள் ஏராளம். பிரசவ காலத்தில் ஏற்படும் மசக்கை, வாந்தி, அதற்கு நரம்பில் குளுக்கோஸ் ஏற்றப்படுவது, இந்த மசக்கை வாந்தியால் படும் அவஸ்தை அதற்கும் கொடுக்கும் மருந்துகள் எல்லாமே மூளை நரம்புகளை பாதிக்கும் கொடுமையானது. பிரசவம் வரை திரும்பத் திரும்ப ஸ்கேன் எடுத்துப் பார்த்தால் ஸ்கேன் கதிர்வீச்சினால் குழந்தை வளரும் பொழுது அதற்கு ஏற்படும் மூளை நரம்பு மண்டலங்கள் பாதிக்கப்படும் தீமைகள் விவரிக்க முடியாதது.

கர்ப்பிணி பெண்களுக்கு இரத்த சோகை இருக்கிறது என்று அதற்கு கொடுக்கும் இரும்புச் சத்து மாத்திரைகள், இரும்புச் சத்து ஊசிகள், அதனால் உடல் வள, சிறுநீரக பாதிப்புகள் BP க்காக மாத்திரை சாப்பிடும் கர்ப்பிணிகள் பிரசவ நேரம் வரும் பொழுது BP அதிகம் இருக்கிறது. அதனால் பிரசவ நேரத்தில் வலிப்பு வந்து

விடும் என்று சொல்லி, சிசேரியன் ஆபரேஷன் செய்யச் சொல்வது; பிரசவ தேதியைக் குறித்துக் கொடுப்பது; பிரசவ தேதி நெருங்க நெருங்க அதனால் கர்ப்பிணிகளுக்கு ஏற்படும் பயம், இன்னும் 3 நாள், 2 நாள் என்று குடும்பமே பதட்டத்தில் இருக்கும். மகப்பேறு மருத்துவரிடம் கூட்டிச் சென்றால், அவர் "3 நாளில் பிரசவம் ஆக வேண்டும்; பிரசவ வலி வரும்போது கூட்டி வாருங்கள்" என்று சொல்லி அனுப்ப, அந்த தேதியில் வலி வராவிட்டால் தேதி தள்ளிப் போய் விட்டது என்று பயந்து கொண்டிருப்பார்கள். ஒரு வாரம், 10 நாட்கள் தள்ளிப் போய் விட்டால், வேறு வினையே வேண்டாம், குழந்தை அசைகிறதா? இல்லையா? என்ற சந்தேகம் வந்து வயிற்றை அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

மருத்துவமனைக்குச் சென்றால் குழந்தை அசைவு, அல்லது துடிப்பு குறைந்து விட்டது என்று ஆபரேஷன் செய்யச் சொல்வார்கள். பெரும்பாலும் சிசேரியன்தான். கர்ப்பப்பைக்கு இயற்கையான வலி வருவதற்கு முன்பே வலி ஊசியைப் போட்டு, கர்ப்பப்பையை முறையில்லாமல் சுருங்கி இறுகச்செய்து விடுவதால், கர்ப்பப்பையில் இருக்கும் குழந்தைக்கு சிரமம் செயற்கையாக ஏற்படுத்துகிறது. பிறகு, 'குழந்தையின் இருதயத் துடிப்பு குறைந்து விட்டது; கர்ப்பப்பையில் தண்ணீர் குடித்து மூச்சு முட்டி விட்டது' என்று சொல்வார்கள். சிசேரியன் செய்தாலும் பல குழந்தைகளுக்கு உயிருக்கே ஆபத்தும் ஏற்பட்டு விடுகிறது.

பிரசவத்தின் போது குழந்தை வெளியே வர சிறிது தாமதம் ஏற்பட்டாலும் பொறுமை இல்லாமல் உடனே கர்ப்பப்பை வாயிலில் கத்தரித்து வெட்டி குழந்தையை வெளியே Episiotomy எடுப்பார்கள். இது பிற்காலத்தில் கர்ப்பப்பை பலமிழந்து, அடியிறங்குவது என்ற வேதனைக்கு தள்ளப்படுகிறார்கள். பிரசவம் ஆகும் போது தலை வெளியே வர தாமதம் ஆனால், forceps உபயோகிப்பார்கள். அதை குழந்தையின் தலையில் வைத்து அழுத்துவதால், குழந்தையின் தலை நரம்பு பாதிக்கப்பட்டு, மூளைக்குள் இரத்தம் தேங்கி, மூளை பாதிப்புக்கு உள்ளாகிறது. கால், கை முதலில் வெளிவந்து பிரசவமானால், அதற்கும் பொறுமையில்லாமல் பிடித்து, இழுத்து விடுவதால் குழந்தையின் உடலில், இடுப்பில், கால்களில் பாதிப்பு உண்டாகிறது.

பிரசவ நேரத்தில் தண்ணீர் குடம் உடைந்து Amniotic Fluid – Membrane Rupture வெளியே வந்தால் சில மணி நேரத்திற்குள் குழந்தை பிரசவம் ஆகா விட்டால், சிசேரியன் செய்வார்கள். ஆனால், இந்த "இறைவழியில் இனிய சுகப்பிரசவம்" புத்தகத்தில் 15 நாட்கள் கடந்தும் சுகமான பிரசவம் எப்படி ஆனது என்பதைத் தெரிந்து கொள்வீர்கள். மிகக் கடினமான விஷயங்களை எவ்வளவு இலேசாக இறைவன் ஆக்கிக் கொடுக்கிறான் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

குழந்தை பிறந்த பின் தொப்புள் கொடியை உடனே வெட்டி விடுவார்கள். குழந்தையை சுத்தப்படுத்தி அரை மணி நேரம் கழித்துத்தான் தாய்ப்பால் கொடுக்கிறார்கள். இதனால்தான் பெரும்பாலான தாய்மார்களுக்கு குழந்தை பிறந்து பல நாட்களுக்கு தாய்ப்பால் சரிவர சுரப்பதில்லை. பெண் மருத்துவர்கள் தாயைக் குறை சொல்வார்கள். மருத்துவமனைக்குப் போய் பிரசவம் பார்த்தால்தான் தாய்க்கும், சேய்க்கும் பாதுகாப்பு என்று அங்கே செல்கிறார்கள். ஆங்கில மருத்துவத்தின் பாதகங்களை அறியாமையின் காரணமாக மேற்சொன்ன பல்வேறு விதமான இன்னல்களை அவர்களும், அவர்கள் சந்ததியினரும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் மருத்துவமனையில் பிறக்கும் எல்லா குழந்தைகளுமே தாய் வயிற்றில் இருக்கும் பொழுதே மருந்தை ஆரம்பித்து, அவர்கள் பிறந்த பின்பும் மருந்துகளையே சார்ந்து வாழ்ந்து எண்ணற்ற நோய்கள்,

உதாரணம்; சர்க்கரை வியாதி, இரத்தக் கொதிப்பு, தலைவலி, கண்களில் கண்ணாடி மாட்டிக் கொண்டும், பல தோல் வியாதிகளை அனுபவித்துக் கொண்டும், உடல் வலி, கால் வலி, தலை வலி என்று பல்வேறு கஷ்டங்களை இன்றைய தலைமுறையினர் அனுபவித்து வருவதற்கும் காரணம் இந்த ஆங்கில மருத்துவத்தின் அநியாயமான கொடுமைகளை விளைவிக்கும் விஷங்களான மருந்துகள்தாம்.

முதல் குழந்தை சிசேரியன் செய்து பிறந்தால், அடுத்த குழந்தையும் சிசேரியன் மூலமாகத்தான் பிறக்கும் என்ற ஆங்கில மருத்துவத்தின் அறியாமையை இந்த இறைவழியில் இனிய சுகப்பிரசவம் புத்தகம் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தில் உள்ள கட்டுரைகள் ஒவ்வொரு தாயும் அவர்கள் இறைவழியில் எப்படி சுகமான பிரசவத்தை பெற முடியும் என்பதற்கு மேலான வழிகாட்டியாக உள்ளது.

இறைவனால் மனிதர்களுக்கு அருளப்பட்டது, டாக்டர் ஃபஸ்லூர் ரஹ்மான் அவர்கள் மூலமாக மனிதர்களுக்கு ஒரு தூதுச் செய்தியைப் போன்று நல்லுபதேசமாக வந்து சேருகிறது. டாக்டர் அவர்கள் பிரசவத்தின் போது ஏற்படக்கூடிய அனைத்து ஞானங்களைக் கொண்டும் இறைவழியில் எளிதான காரியமாகக் கற்பித்து வருகிறார்கள். இருளில் இருக்கும் கர்ப்பமுற்ற பெண்களுக்கு ஒளிவிளக்காகத்தான் டாக்டர் அவர்களின் உபதேசங்களும், எப்படி இறைவனிடம், ‘சுகமான பிரசவமாக்கிக் கொடு’ என்று பணிவாகவும், அந்தரங்கமாகவும் பிரார்த்தனை செய்து கேட்கும் போது, இறைவனும் பிரசவ காலத்தில் அவர்களுடைய காரியங்களை தன் பொறுப்பில் ஏற்று அவர்களை

அனைத்துத் துன்பங்களிருந்தும் ஈடேற்றுகிறான் என்பதையும் அறிய முடியும்.

இந்த அறிய பொக்கிஷமான புத்தகம் பல தாய்மார்களுக்கு பேரருளாக அமையும்.

நல்லதொரு, டாக்டர்கள் தீட்டுப்படாத குழந்தைகளைக் கொண்டுள்ள புத்தம் புதிய சமுதாயத்தை இறைவன் உருவாக்குவான்; நம் எல்லோரையும் நல்லதொரு சமுதாயத்துடன் சேர்ந்தும் வாழ வைப்பானாக...

**டாக்டர் கனகசபாபதி MD.**
**பீச் – சென்னை ஹாஸ்பிடல்,**
**4, L.IG. காலனி, கிராஸ் ரோடு,**
**புதுவண்ணாரப்பேட்டை,**
**சென்னை – 600 081**

# 1) கருவில் இருக்கும்போது ஸ்கேன் செய்தால் குழந்தையின் மூளை வளர்ச்சி பாதிக்கும்.

கருவுற்றிருக்கும் தாய்மார்கள், தங்கள் குழந்தைகளின் வளர்ச்சியைப் பார்க்கிறோம் என்ற கருத்தில் 'ஸ்கேன்' செய்வது மிகவும் பரவலாக ஆகிக் கொண்டிருக்கிறது. மகப்பேறு மருத்துவ நிபுணர்கள் எந்தக் கவலையும் இல்லாமல் நினைத்த போது ஸ்கேன் செய்வதும், பிரசவ நேரம் நெருங்கும் போது இன்னும் அதிகமாக சிசுவின் தலையை ஸ்கேன் எனும் அணுக்கதிர்களுக்கு உட்படுத்துவதும் மிகவும் வேதனைக்குரிய விஷயமாகும்.

ஸ்கேன் செய்யும் போது அணுக்கதிர்கள் கர்ப்பத்தில் வளர்ந்து வரும் சிசுவின் மூளையையும், நரம்பு மண்டலங்களையும் வெகுவாகத் தாக்குகிறது. இதன் விளைவு பிற்காலத்தில் மூளைச் சோர்வையும், நரம்பு மண்டலத்தின் பலவீனத்தையும் உருவாக்குவதோடு நினைவாற்றலை இழக்கும் தன்மையையும் ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. அணுக்கதிர்களைப் பாய்ச்சி ஸ்கேன் செய்வது அல்லது எக்ஸ்ரே எடுப்பது தவறு என்று தெரிந்திருந்து, அதைப் பற்றி எந்தக் கவலையும் இல்லாமல் தொடர்ந்து செய்து வருவது வேதனைக்குரியதாகும். இந்த அணுக்கதிர்களால் இரத்த அணுக்களும் முறையாக உற்பத்தியாவது பாதிக்கும். இது மூளையின் இயக்கத் தன்மையின் குறைபாட்டை நாளடைவில் அதிகரிக்கும்.

தாய்மார்களே! ஸ்கேன் செய்வது குழந்தையின் கல்வி கற்கும் திறனை அடியோடு அழித்து விடலாம் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். எனவே, இன்று முதல் ஸ்கேன் செய்து குழந்தையின் வளர்ச்சியைப் பார்க்கும் நீங்கள் இதன் காரணமாக குழந்தையின் மூளை வளர்ச்சியை அழிக்கிறீர்கள் என்பதை உணர்ந்து அறிந்தவர்களாக அதன் பக்கம் செல்வதினின்றும் உங்களையும் காத்துக் கொள்ளுங்கள்; பிறக்கப் போகும் உங்கள் குழந்தையையும் காத்துக் கொள்ளுங்கள்.

உங்களுடைய மகப்பேறு மருத்துவ நிபுணரிடம் இந்த உண்மையைக் கேளுங்கள். மேற்சொன்ன விஷயத்தை அவர்களால் மறுக்க முடியாது. மறுக்கவும் மாட்டார்கள்.

தாய்மார்களே! உங்கள் கர்ப்பப்பையையும், உங்கள் கருவில் வளரும் குழந்தையையும் பாதுகாத்துக் கொள்வது எப்படி..?

இப்பொழுதெல்லாம் கர்ப்பம் தரித்த உடனேயே ஆங்கில மருத்துவத்திடம் ஓடிச் சென்று தஞ்சம் அடைந்து விட வேண்டும் என்ற உணர்ச்சிகளைக் கற்பித்து விட்டார்கள். மாதாமாதம் ஆங்கில மருத்துவம் கொடுக்கும் விஷங்களை ஊட்டச்சத்து என்ற பெயரிலும், குழந்தைக்கு நல்லது என்ற மாயையிலும் மீள முடியாத வகைக்கு சிக்க வைக்கப்பட்டு விட்டார்கள்.

தாய்மார்கள் அறிந்து கொள்ள வேண்டும். 10 மாதங்களும் உங்களை கவனிக்கும் ஆங்கில மகப்பேறு மருத்துவம் சுகப்பிரசவத்திற்கு உத்திரவாதம் அளிக்குமா என்றால் அளிக்காது என்றே கூறுவார்கள். ஒரு பிரசவத்தை சுகமாக நடத்துவதற்கு கூட உபயோகமற்ற ஆங்கில மருத்துவத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? ஆங்கில மருத்துவம் கருவுற்ற நாளிலிருந்து கர்ப்பப்பையை பாதுகாக்க வேண்டும்; அதன் திறனை உறுதிப்படுத்தவும் வேண்டும் இல்லையா? கர்ப்பப்பை கருத்தரித்தும் குழந்தையை சுமந்து, வளர்க்கும் பொறுப்பைக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல, முழுமையான குழந்தையாக வளரச் செய்து, அதை சுகப்பிரசவமாக்கும் பொறுப்பையும் கொண்டிருக்கிறது. கர்ப்பப்பை சுகமாகவும், வளமாகவும் இருக்குமானால், அதனுள் வளரும் குழந்தையும் முழுமையான வளர்ச்சியைப் பெற்று பிறக்கும் இல்லையா?

“கர்ப்பப்பையைப் பற்றி கவலைப்பட வேண்டாம். கர்ப்பப்பையின் எந்தவிதமான நோயையும் எங்களால் குணப்படுத்த முடியாது. அது வெள்ளைப்படுதலாகட்டும்; அல்லது அதிகமான உதிரப் போக்காகட்டும்; அல்லது கர்ப்பப்பையில் ஏற்படும் புண்கள்; கட்டிகள் ஆகட்டும் உங்களுக்கு கஷ்டமாக இருந்தால், அதை நாங்கள் வெட்டி எடுத்து விடுவோம். மற்றபடி கர்ப்பப்பையில் ஏற்படும் எந்தவொரு நோயையும் எங்களுக்கு குணப்படுத்தத் தெரியாது.” இது ஆங்கில மகப்பேறு மருத்துவ நிபுணத்துவத்தின் உச்சக்கட்டமாகும்.

குழந்தை ஆரோக்கியமாக கர்ப்பப்பையினுள் வளர்வதற்கு கர்ப்பப்பையின் ஆரோக்கியம் முக்கியம் இல்லையா? கர்ப்பப்பையின் எந்தவொரு நோயையும் குணப்படுத்தும் கல்வியற்ற ஆங்கில மருத்துவத்தை எப்படி நம்பி, கர்ப்பப்பையில் வளரும் உங்கள் குழந்தையை அந்த மருத்துவத்திடம் ஒப்படைப்பீர்கள்? அவர்கள் கூறுகிறார்களே, குழந்தை நல்ல முறையில் வளர்வதற்கு நாங்கள் மருந்து கொடுக்கிறோம் என்று, உங்களால் எப்படி அது சீரிய வார்த்தை என்று ஏற்றுக் கொள்ள முடிகிறது?

உங்களுடைய பொது அறிவை ஏன் ஆங்கில மருத்துவத்திற்கு தாரை வார்த்து விட்டீர்கள்? கர்ப்பப்பை இல்லாமல் குழந்தை இருக்கிறதா? கர்ப்பப்பையை ஆரோக்கியமாக வைக்கத் தெரியாத ஆங்கில மருத்துவமா அதனுள் வளரும் குழந்தையை பாதுகாத்து விடும்? எப்படி நீங்கள் நம்பினீர்கள்? இன்று குழந்தைகளிடையே இருக்கக்கூடிய அனைத்து நோய்களுக்கும் காரணம் ஆங்கில ஆங்கில மருத்துவம் அந்த 10 மாதங்களும் கொடுத்த விஷத் தன்மை கொண்ட மருந்துகள்தான் என்பதை நீங்கள் அறிவீர்களா? நீங்கள் அறிவிப்பீர்களானால், இனியாவது தாய்மார்களே, உங்கள் கர்ப்பப்பைகளையும், உங்கள் கருவில் வளரும் குழந்தைகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். ஆங்கில மருத்துவத்தின் பக்கம் பேறு காலம் வரை திரும்பி விட வேண்டாம். அதுவரையில் நெருங்கவும் வேண்டாம்.



டாக்டர். ஃபஸ்லூர் ரஹ்மான்,
MBBS., MD., DV. Ph.D.

நன்றாக இடுப்பு வலி ஏற்பட்டு, அது தொடர்ச்சியாக நிலைக்கும் வரையில் மருத்துவமனைக்குச் சென்று விடவும் வேண்டாம். நன்றாக வலி ஏற்படும் வரை பொறுப்பீர்களானால், மருத்துவமனை செல்லும் வழியிலேயே கூட அழகான முறையில் சுகப்பிரசவம் ஆகி விடும். அது மிகவும் சுகமான பிரசவமாகும். ஆகவேதான், அதற்கு பெயர் சுகப்பிரசவம். சுகமான இந்த சுகப்பிரசவத்திற்கு முன்பும் சரி, பின்பும் சரி அது சம்பந்தமான எந்த விதமான பின் விளைவுகளும், கஷ்டங்களும் தாயையோ, பிள்ளையோ தொடராது.

இந்த சுகப்பிரசவத்தை நீங்கள் விரும்புவீர்களானால், 10 மாதங்களும் விஷங்கள் என்ற பெயரில் மருந்து, மாத்திரைகள் சாப்பிடுவதை விட்டும் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். இப்பொழுதெல்லாம் வலி வருவதற்கு முன்பாகவே சிசேரியன் ஆபரேஷன் என்று பல தாய்மார்களுக்கு முடிவே செய்து விடுகிறார்கள். இன்னும் பலருக்கு இந்த தேதியில் பிரசவம் ஏற்பட வேண்டும்; அவ்வாறு ஏற்படவில்லையென்றால், ஆபரேஷன் செய்து விட வேண்டும் என்றும் தெரிவித்து விடுகிறார்கள். அவர்கள் குறிப்பிடும் தேதிக்கு ஒருநாள், இரண்டு நாள் கூட அவகாசம் அளித்தாலும் பெரும் மனச் சுமையை ஏற்படுத்தி விடுகிறார்கள். குழந்தைக்கு ஆபத்து என்ற பயத்தையும் கூடவே கொடுத்து விடுகிறார்கள். தாய்க்கு கூட ஆபத்து ஏற்படலாம் என்று மனக் கலவரத்தை அதிகரித்ததும் விடுகிறார்கள். இனி, இப்படிப்பட்ட மனநிலையில் சுகப்பிரசவம் நிகழ நிச்சயமாக வாய்ப்பே இல்லை.

ஆகவே, சிசேரியன் என்பது சர்வ சாதாரணமாக இன்று நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஒரு ஆய்வில் கண்டுபிடித்த புள்ளி விபரங்களின் படி 10 – 15 சதவீதத்திற்குள்ளாகத்தான் அறுவை சிகிச்சை செய்து, குழந்தையை வெளியே எடுக்கும் சூழ்நிலை இருக்கிறது. ஆனால், இந்தத் தேவைக்கு மாறாக 80 சதவிகிதம் தாய்மார்கள் அறுவை சிகிச்சைக்கு நிர்பந்திக்கப்பட்டு விடுகிறார்கள். இந்த நிர்பந்தத்திற்காக அவர்கள் கூறுவதெல்லாம், “தாமதித்தால் குழந்தைக்கு ஆபத்து” என்பதுதான். உண்மையான காரணம் சிசேரியன் ஆபரேஷன் செய்தால்தான் கொழுத்த வருமானம் என்பது மட்டும்தான். சுகப்பிரவத்தை பெரும்பாலான மகப்பேறு மருத்துவர்கள் விரும்புவதும் இல்லை; அவர்களுடைய நேரத்தை வீணடிக்க விரும்பவில்லை. “காலம் பொன் காசு போன்றது”.

## 2) எங்கள் அறிவுரைக்குப் பிறகுதான் தாம்பத்தியம் வைத்துக் கொள்ள வேண்டும்! ஆங்கில மருத்துவம் எச்சரிக்கை!

பெண்களே, உங்களுக்கு நன்மையைச் செய்ய நாங்கள் காத்திருக்கிறோம். "உங்கள் நலன் மீது எங்களின் அக்கறை எவ்வளவு மகத்தானதாக இருக்கிறது பாருங்கள்!" என்று ஆங்கில மருத்துவம் உங்களுக்கு உதவ முன்வருகிறது. அதாவது, உங்களுக்கு கருத்தரிக்கப் போகும் குழந்தை நல்ல மாதிரி கருத்தரிக்க வேண்டும் இல்லையா? அதற்காக புதிய புதிய டெஸ்ட்டுகள் எல்லாம் கண்டுபிடித்தாகி விட்டது. உங்களுக்காக whole body checkup போன்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

நீங்கள் எப்போது உடலுறவு கொள்ள வேண்டும்; எப்படி உறவு கொள்ள வேண்டும் என்பதை நாங்களே சொல்லித் தருவோம். உங்களில் இருவரும் உடலுறவு கொள்வதற்கு தகுதி படைத்து விட்டீர்களா என்பதையும் உங்களுக்கு அறிவிப்போம். உங்கள் இருவரையும் தனித்தனியாக பரிசோதிப்போம்.

வாசகர்களே! இந்த முறை பரிசோதனைகள் அமெரிக்காவில் தலையெடுக்க ஆரம்பித்து விட்டன. முதலில் பெண்களை பரிசோதிப்பார்கள்; தனிப்பட்ட முறையிலும் நோய்களின் அடிப்படையிலும், குடும்ப அடிப்படையிலும் செய்திகள் சேகரிப்பார்கள். அதாவது, திருமணத்திற்கு முன்பு பெண்களுடைய உடலுறவு முறைகள் எந்த அளவுக்கு திருப்தியாக இருந்தது; எத்தனை முறை கருத்தரித்திருக்கிறார்கள்; எத்தனை முறை கருச்சிதைவு செய்திருக்கிறார்கள். இந்த காலகட்டங்களில் அவர்களுக்கு ஏதாவது மாதவிடாய் கோளாறுகள் இருந்திருக்கின்றனவா? திருமணத்திற்கு முன்பாக பாலியல் நோய்கள் ஏற்பட்டிருக்கின்றனவா? அதற்காக என்னென்ன வைத்தியம் எடுத்திருக்கிறீர்கள்? போன்ற கேள்விகள் முதல்படி பரிசோதனையாகும். ஆண்களிடத்திலும் அவர்கள் உடலுறவு சம்பந்தப்பட்ட அனைத்து கேள்விகளையும் கேட்டறிவார்கள்.

அடுத்ததாக, அவர்களுடைய குடும்பத்தினர்களிடத்தில் உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய், புத்தி சுவாதீனக் கோளாறுகள், பிரசவக் கோளாறுகள் மற்றும் பரம்பரை நோய்கள் என்னென்ன இருக்கிறது என்பதைக் கேட்டறிந்து கொள்வார்கள். இனி, அனைத்து நோய்களுக்கும் கணவன், மனைவி இருவர் மீதும் பரிசோதனைகளையும், தனித்தனியாக முறையாக செய்து ஏதேனும் நோய் தொற்றிக் கொண்டிருக்கிறதா என்று பார்ப்பார்களாம்!

பெண்களுக்கு கர்ப்பப்பையில் ஏதேனும் கட்டிகள் இருக்கிறதா? தொந்தரவுகள் இருக்கிறதா என்று முழுமையாக செக்கப் செய்து பின்னர் மார்பு தொந்தரவுகள் சம்பந்தமாகவும் அனைத்துப் பரிசோதனைகளுக்கும் உட்படுத்துவார்கள்.

இவையெல்லாம் பார்த்த பிறகு அவர்கள் என்னென்ன உணவு உட்கொள்ள வேண்டும்? எடை அதிகமாக இருந்தால் கர்ப்ப காலத்தில் டயாபடீஸ் நோய் வந்து விடுமாம்! அதற்காக எடையெல்லாம் சரி பார்த்து டாக்டர்கள் முதலிரவை ஏற்பாடு செய்வார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், திருமணம் ஆன கையோடு ஆஸ்பத்திரியில் சென்று விட வேண்டும். ஒவ்வொரு நாளும் இரத்தம், மலம், சிறுநீர், ஸ்கேன் என்றும் உணவுக் கட்டுப்பாடு மருந்துகள், மாத்திரைகள் என்றும் கர்ப்பம் தரித்து 3 மாதங்கள் வரை ஆஸ்பத்திரிலேயே தங்க வைத்து விட வேண்டும் என்ற சூழ்ச்சியில் இறங்கியிருக்கிறது ஆங்கில மருத்துவம்.

தாய்மார்களே! ஆங்கில மருத்துவத்தை கடவுளுக்கு அடுத்தபடியாக எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய துர்பாக்கிய நிலையில் இருக்கும் நமக்கு கூடிய சீக்கிரம் மேற்சொன்ன அனாச்சாரங்கள் நம் மீது திணிக்கப்படக் கூடியதாக இருக்கிறது. இப்பொழுது நீங்கள் விழிப்புணர்வு அடைய வேண்டியது அவசியம். இதே அடிப்படையில்தான் மாதாமாதம் 10 மாதங்கள் முடிய கர்ப்பம் தரித்ததிலிருந்து பிரசவம் வரையில் தங்களிடம் வைத்தியம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று ஆரம்பித்து, இப்பொழுது ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் கட்டாயப்படுத்த ஆரம்பித்து விட்டார்கள். மாதாமாதம் செக்கப் செய்த டாக்டர்களின் ரிப்போர்ட் இல்லாமல் பிரசவம் கூடப் பார்க்க மாட்டோம் என்னும் அளவுக்கு இன்று ஆகிவிட்டது.

கருமுட்டை உற்பத்தியாகும் பொழுது உடலுறவு கொண்டால் குழந்தை கருத்தரிக்கும் சாத்தியக்கூறுகள் அதிகமாம்! எனவே, அதற்கென்று ஒரு டெஸ்ட் இருக்கிறது. ஒரு தெர்மா மீட்டரை வாங்கிக் கொள்ளுங்கள். அதை பெண்கள் தங்கள் பிறப்புறுப்பில் ஒவ்வொரு நாளும் ஒரு நிமிடம் வைத்து உடல் உஷ்ணத்தைப் பார்க்க வேண்டும். இதை விடியற்காலையில் தான் பார்க்க வேண்டும். கண் விழித்து அரை மணி நேரத்திற்குள்ளாக! எப்பொழுது கருமுட்டை வெளியாகிறதோ, அப்பொழுது 1 டிகிரி வெப்பம் அதிகமாகி விடுமாம்! அப்பொழுது உடலுறவு கொண்டு விட்டால் குழந்தை பிறந்து விடும். இன்னும் ஒரு குறிப்பு சொல்கிறார்கள். தெர்மா மீட்டரை பிறப்புறுப்பில்தான் வைத்துப் பார்க்க வேண்டும் என்பதில்லை, வாயிலும் வைக்கலாம்; மல வாயிலும் வைக்கலாமாம்! தாய்மார்களே, இந்த அசிங்கங்கள் எல்லாம் உங்களுக்கு விரசமாகத் தோன்றவில்லையா?

இப்பொழுதே உஷாராகுங்கள்! மேற்சொன்ன நடைமுறை உங்கள் மீது திணிக்கப்படுவதற்கு முன்பாக உங்களுக்கு நேர இருக்கும் மிகப்பெரும் பித்தலாட்டத்தை இப்பொழுதே எச்சரித்து விட்டோம்.

## 3) கர்ப்பிணிகளுக்கு வைட்டமின்களும், இரும்புச் சத்து மாத்திரைகளும் கொடுக்கலாமா?

நிச்சயமாக கூடவே கூடாது. பொதுவாக இரும்புச் சத்து மாத்திரைகளும், கால்ஷியம் மாத்திரைகளும், Folic Acid மாத்திரைகளும் கர்ப்பிணி பெண்களுக்கு கொடுப்பது வழக்கமாகி விட்டது. இந்த மாத்திரைகளைப் பற்றி தாய்மார்கள் அறிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், இவையனைத்தும் இரசாயன விஷங்கள், எவ்வாறு பூமிக்கு இரசாயன எருவை இட்டு இன்று பூமியை மலட்டு பூமியாக ஆக்கி விட்டார்களோ, அவ்விதமே கர்ப்பப்பை இந்த மாத்திரைகளால் மலட்டுத்தன்மை நிச்சயமாக அடையும்.

கர்ப்பப்பை மலட்டுத்தன்மையை அடையும் பொழுது, நீங்காத உதிரப்போக்கும், வெள்ளைப்படுதலும் கட்டுங்கடங்காது. கர்ப்பப்பைக் கட்டிகளும், ஹார்மோன்கள் கட்டுப்பாடற்று சுரப்பதன் காரணமாகவும், பெரும் சங்கடங்கள் ஏற்பட ஏதுவாகின்றன. மாதவிடாய்க்கு முன்பாகவும், மாதவிடாயைத் தொடர்ந்தும் உடல் உஷ்ணமாகி உடல் சோர்வையும், மூளைச் சோர்வையும் ஒருசேர ஏற்படுத்தும். மேற்சொன்ன பி.காம்ப்ளக்ஸ், இரும்புச் சத்து மாத்திரைகள், Folic Acid மாத்திரைகள் போன்றவற்றை உபயோகிப்பதன் காரணமாக சிறுநீரகங்களில் அந்த இரசாயனங்களின் படிவங்கள் படிந்து சிறுநீரகங்களை செயலற்று விடச் செய்கிறது. இந்த சிறுநீரகச் செயலிழப்பு Kidney failure உடனடியாகவும் நிகழலாம்; காலம் தாழ்த்தியும் வாழ்க்கையின் எந்தத் தருணத்திலும் உருவாகலாம்.

இன்று பெரும்பாலான நோயாளிகள் சிறுநீரகச் செயலிழப்பின் Kidney failure காரணமாக பெரும் அவதியுற்றுக் கொண்டிருக்கும் நிலையில் சிறப்பு மருத்துவ நிபுணர்கள் சிறுநீரகங்களை மாற்றி விட்டால் போகின்றது என்ற நிலையில் பெருமை கொண்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறார்கள். நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்னவெனில், ஒரு மனிதனுடைய சிறுநீரகம் அவருக்கு மிகவும் பொருத்தமானதாகும். இவ்வளவு பொருத்தமான ஒரு சிறுநீரகம் பழுதடைவதை தடுத்து நிறுத்த வழியில்லாமல் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கும் இந்த ஸ்பெஷலிஸ்டுகள் வேறு ஒருவருடைய சிறுநீரகத்தையா பொருத்தி அதனைக் காப்பாற்றி விட முடியும்? மாறாக பிறருடைய சிறுநீரகங்கங்கள் நிச்சயமாக ஒரு மனிதனுடைய உடலால் நிராகரிக்கப்படும். அந்த சிறுநீரகம் உடலுக்கு ஒவ்வாமையின் காரணமாகவே இன்னும் உடல் உபாதைகளையும், கஷ்டங்களையும் அதிகரிக்கும். இறுதியில் மாற்றப்பட்ட சிறுநீரகங்கங்கள் பழுதடையும். நோயாளிகள் இறப்பார்கள். இது மறுக்க முடியாத உண்மை. இந்த மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சையின் காரணமாக வாழ்வுக்கும், சாவுக்கும் இடையே அவர்களுடைய வாழ்க்கை நரக வாழ்க்கை! அது ஒரு மரண போராட்டம்.

எனவே தாய்மார்களே, உங்களுடைய பிள்ளைகளுக்கு கர்ப்ப காலத்தின் போது ஒருபோதும் நீங்கள் மேற்சொன்ன இரசாயன மாத்திரைகளை மறந்தும் கொடுத்து விடாதீர்கள்.

## 4) மாரடைப்பு மற்றும் தாய்மார்களுக்கு கர்ப்பப்பை நோய்கள் ஏன் உருவாகிறது?

நீரிழிவு நோய் இருக்கிறது என்று நீரிழிவு சிறப்பு மருத்துவர்கள் கண்டுபிடிக்கிறார்கள். இனி, நீங்கள் அந்த நோயிலிருந்து அவர்களுடைய மருந்துகளைக் கொண்டு நீரிழிவு நோயை மரணம் வரையில் குணப்படுத்திக் கொள்ளப் போவதில்லை. ஒவ்வொரு நாளும் நீரிழிவு நோயின் வீரியம் அதிகரிக்கும். அதன் விளைவுகளையும் நீங்கள் அனுபவிக்க வேண்டியிருக்கும். அதாவது, கை கால்களில் எரிச்சல், மரத்துப் போதல், வலி, உடல் இளைப்பு, கண்பார்வை மங்குதல், இருதய நோய்கள், சிறுநீரக செயலிழப்புகள், மார்புச் சளி தொந்தரவுகள், அஜீரணம் இன்னும் என்னென்ன நோய்களை நீங்கள் கற்பனை செய்ய முடியுமோ, அவ்வளவு நோய்களும் உருவாக இருக்கிறது.

நீரிழிவு நோய் படிப்படியாக மோசம் அடையும் பொழுது, இன்சுலின் என்ற மருந்தை ஊசி மூலமாக உபயோகிப்பார்கள். இந்த இன்சுலின் என்ற மருந்து உடலில் சுரக்கும் அட்ரீனலின் என்ற சுரப்பு நீரை சுரக்க விடாமல் தடுத்து விடுகிறது. அட்ரினல் சுரப்பு நீர் சுரப்பு சுரப்பது குறைந்து விட்டாலோ, அல்லது அதன் இயக்கத்தை தடுத்து விட்டாலோ, உடல் நோய் எதிர்ப்பு சக்தியின் அளவில் வெகுவாகக் குறைந்து விடுகிறது. எனவேதான் உங்களால் என்னென்ன நோய்களை கற்பனை செய்ய முடியுமோ, அதில் எது வேண்டுமானாலும் உருவாகும். உங்களுக்கு ஒரு நோயைப் பற்றிய அச்சமும், கவலையும் ஏற்பட்டால், அந்த நோயும் தொற்றிக் கொள்ளும்.

ஒருவருடைய மனதின் உறுதிதான் அவருடைய வாழ்க்கையில் நோய் நொடியிலிருந்தும் பாதுகாப்பதாக இருக்கிறது. அந்த மனஉறுதிக்குக் காரணம் அட்ரினல் சுரப்பு நீராகும். உடல் உறுதிக்கும், மன உறுதிக்கும் உறுதுணையாக இருக்கக்கூடிய அட்ரினலின் இயக்கம் தடைப்படுத்தப்படுமானால், எய்ட்ஸ் முதலாக எந்த நோயும் உயிரை பலி வாங்கி விடும். எய்ட்ஸைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அந்த நோய் உங்களுடைய நோய் எதிர்ப்பு சக்தியை குறைத்து விடும். அதைப் போன்றே இன்சுலின் மருந்து உள்ளுக்குள் இருக்கும் பொழுது, அட்ரினலின் சுரப்பு நீர் தடுக்கப்படுவதன் காரணமாக, நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து விடுகிறது.

இப்பொழுது உங்களுக்குப் புரிந்திருக்க வேண்டும் எய்ட்ஸ் நோயும், இன்சுலின் ஊசியும் ஒன்றுதான் என்று. உலகம் முழுமையிலும் எய்ட்ஸ் என்ற மாயை நோய் பரவியதன் காரணம், மரண பயத்தை நோயாளிகளிடத்தே உருவாக்கி, பரப்பப்பட்ட விதம்தான். இன்று வரையிலும் எய்ட்ஸ் நோய் என்ற குணப்படுத்த முடியாத நோயை அநியாயமாக பரப்பி வருகிறார்கள் என்பதையும் நாம் பார்த்துக்

கொண்டிருக்கிறோம்.

அட்ரீனலின் சுரப்பு நீர் இன்சுலின் ஊசி காரணமாக அதன் இயக்கத்தில் தடைபடும் பொழுது ஏற்படும் தொந்தரவுகளில் சிலவற்றை இப்பொழுது பார்ப்போம். வாசகர்களே, உங்களுக்கு கொடுக்கும் முக்கியமான செய்தி, இன்சுலின் ஊசி போடும் பொழுது, உடலின் பாதுகாப்புக்கும், நோய் எதிர்ப்பு சக்திக்கும் மிகவும் உறுதுணையான அட்ரீனலின் சுரப்பு நீர், அதை சுரப்பதிலிருந்தும் தடுப்பது மட்டுமல்லாமல், அதன் இயக்கத்தையும் தடுத்து விடுகின்றது என்பதேயாகும்.

அட்ரீனலின் என்ற சுரப்பு நீர் இருதயம் பய உணர்ச்சிக்கு உள்ளாகும் பொழுது, அதனைக் காப்பதற்காக அதனுடைய இயக்கத்தை துரிதப்படுத்துகிறது. அட்ரீனலின் சுரப்பு நீரின் இந்தச் செயல், பயத்தின் காரணமாக இருதயம் நின்று விடுவதிலிருந்தும் cardiac arrest பாதுகாக்கிறது. இவ்விதமாக அட்ரீனலின் சுரப்பு நீர் உயிர் பாதுகாக்கும் ஒரு ஹார்மோன் ஆகும்.

உயிர் பாதுகாக்கும் பொறுப்பு அட்ரீனலின் என்ற ஹார்மோனுக்கு இருக்கிறது என்றால், இன்னும் என்னென்ன மன நிலைகளிலிருந்து இந்த அட்ரீனலின் நம்மைப் பாதுகாக்கிறது என்பதை சிந்தித்து உணர்ந்து கொள்ள முடியும். பயத்தைப் போன்றே கவலை என்ற உணர்ச்சி நம்மை அலைக்கழிக்கும் பொழுதும், பெருமகிழ்ச்சி என்று பெருமையில் நாம் திளைக்கும் பொழுதும் நமக்கு மாரடைப்பு cardiac arrest, cardiac failure என்ற இருதய செயலிழப்பு நிகழ்வதை தடுக்க முடியாது. இந்த மனநிலைகளின் போது, இருதயம் இரத்தத்தை உடலெங்கும் துரிதமாகவும், உறுதியாகவும் சுற்றுப் பெறச் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, இருதயத் துடிப்பு கணிசமாக உயர வேண்டும். இருதயத்தின் துடிப்பின் போது, அது அழுந்தும், உறுதியும் அதிகரிக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே, இரத்த அழுத்தம் உயர வேண்டியது அவசியம். அத்துடன் இருதயத் துடிப்பின் அளவும் அதிகரிக்க வேண்டும். இப்பொழுது நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும், உங்கள் கவலையும், பயமும், பெருமகிழ்ச்சியின் விளைவின் காரணமாகவும் உங்களைப் பாதுகாக்கவே இரத்த அழுத்தமும், இருதயத் துடிப்பும் அதிகமாகிறது. ஆனால், உணர்ந்து அறிய முடியாத ஆங்கில மருத்துவர்கள், “இரத்த அழுத்தம் அதிகமாகி விட்டது; இருதயம் நின்று போகும்” என்று இன்னும் உங்களை அதிகமாக பயமுறுத்துவார்கள். இந்த பயத்தின் விளைவுதான் நீங்கள் மாரடைப்பின் காரணமாக இறந்து விடுவதற்கு காரணமே தவிர, டாக்டர்களைப் பார்த்த பின்னர், ஏற்பட்ட பயமும், கவலையும் தான் உண்மையிலேயே கேடான இரத்த அழுத்தமாகும்.

இந்த தருணத்தில் ஒரு விஷயத்தை உறுதியாக அறிந்து கொள்வோம். உங்களுடைய மனநிலைக்கு ஒரு பயம் ஏற்படும் பொழுது, அதற்கான காரணத்தை நீங்கள் அறிய முற்படுவீர்கள். அதை எவ்விதம் தீர்க்க முடியும் என்ற

வகையில் உங்களுடைய சிந்தனையை நீங்கள் தொடருவீர்கள். சிந்தனை என்பது மனிதர்களை உதவிக்காக அழைக்க முடியாத நிலையில்தான் ஏற்படுகிறது. மனிதர்களை ஏன் உதவிக்கு அழைக்க முடியாது என்றால், நம்முடைய பயத்திற்கு காரணம், நாம் செய்த தவறுகள்தான். அந்த தவறுகளை நம்மைச் சார்ந்த உறவினர்களிடமோ, கூட்டாளிகளிடமோ சொல்ல முடியாத ஒரு துர்பாக்கியமான நிலையே ஆகும். எனவே, மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் நம்முடைய துன்பத்தில் நாம் ஆகி விடுகிறோம். ஒவ்வொருவரும் இந்தச் சூழ்நிலையில்தான் கவலைகளிலிருந்தும், பயத்திலிருந்தும் விடுபட முடியாத நிலையில் சிந்திக்க ஆரம்பிக்கிறார்கள். இந்த சிந்தனைதான் ஒரு மனிதனுக்கு திருப்புமுனையாகும். சிந்தனையின் போது, நம்மை அறியாமலேயே நாம் மறைவாகப் பகிர்ந்து கொள்கிறோமே, அது, நாம் நம்முடைய நிலைமையை நம்முடைய மனதுடன்தான் பகிர்ந்து கொள்கிறோம் என்பதை இப்பொழுது உணருங்கள். நம் மனதில் நாம் பகிர்ந்து கொள்ளும் விஷயத்தை மனசாட்சியத்துடன் நாம் பேசுகிறோம் என்பதையும் கருத்தில் கொள்ளுங்கள்.

இவ்வாறு சிந்தனையில் நாம் ஆகி விடும் பொழுது, அது மனசாட்சியத்துடன் நம்முடைய கேடுகளை விட்டும் விடுபட்டு விடக் கூடிய வழியை நாம் விரும்புகிறோம் என்பதும் உண்மையாகும். மனசாட்சியத்துடன் நாம் வாழ்கிறோம் என்றால் அதுவே சிந்தனை உணர்வாகும். எனவே சிந்தனையில் இருப்பவர்கள் வெகு சீக்கிரம் தெளிவான மனநிலையும், உறுதியான நேர்வழியையும் அடைவார்கள். இத்தகையவர்களே தங்களுடைய தவறுகளை திருத்திக் கொள்கிறார்களோ, இன்னும் தன் தவறுதல்களுக்காகவும், தவறுகளுக்காகவும் மனமும் வருந்துகிறார்களோ அவர்களை இறைவன் நேசிக்கிறான். இனி அவர்களுக்கு வழிகாட்ட இறைவன் போதுமானவன். எனவே, மனிதர்கள் அறியாத புறத்திலிருந்து உயர்வான வாழ்க்கை வழிமுறை ஞானங்களாக அவர்களுக்குள் உதயமாக இருக்கிறது. அதில் இவர்கள் எந்த கஷ்டத்தில், அல்லது சூழ்நிலையில் சிக்கிக் கொண்டார்களோ, அதிலிருந்து அழகான முறையில் வெளியேறுவதற்கான தெளிவான பாதையில் மன நிம்மதியுடன் திரும்புவார்கள். இது, மனம் திருந்துதலின் காரணமாக ஏற்பட்ட சிந்தனை வாயிலான திருப்புமுனையாகும். எனவே, அவர்களுடைய பயமும், கவலையும் அவர்களை விட்டு நீங்குகிறது. அவர்களுடைய இரத்த அழுத்தம் குறைகிறது. இருதய துடிப்பும் சீரடைகிறது.

ஆனால், எப்பொழுது நாம் பொது அறிவே இல்லாத, சிந்தனை செரிவற்ற, மமதையைக் கொண்ட ஆங்கில மருத்துவத்திடம் செல்கிறோமோ, அப்பொழுது நீங்கள் உணர வேண்டும், மேற்சொன்ன பாக்கியங்களிலிருந்து நீங்கள் விலகி, முழுமையான தவறான பாதையை மேற்கொண்டு விட்டீர்கள் என்பதை. உங்களுடைய மனசாட்சியத்தை நீங்கள் விரும்பவில்லை.
உங்களுடைய தவறான போக்குகளிலிருந்து மனம் திருந்துதலையும், மனம் திரும்புதலையும் நீங்கள் நாடவில்லை; இறைவன் உங்களை பாதுகாக்கவும்

வேண்டாம்; உங்களை நேர்வழியில் செலுத்தவும் வேண்டாம்; அதன் காரணமாக, நீங்கள் இறைவனிடமிருந்து உதவியும் புரியப்பட வேண்டாம் என்று நீங்கள் உங்களை கேடான வழிகளில் அதிகரித்து கொண்டீர்கள். எனவே, நீங்கள் மீள வழியில்லை. ஏனெனில், தெளிவான காரண காரியம் உங்களுடைய மனநிலையில் இருக்க, அதைத் திருத்திக் கொள்வதை நீங்கள் வெறுக்கிறீர்கள். டாக்டர்கள் உங்களுக்கு உதவுவார்கள் என்றும் நம்புகிறீர்கள்.

உங்களுக்கு உண்மை நிலை தெரியுமா? உங்களுக்கு இரத்த அழுத்தம் அதிகமாக இருக்கிறது என்று கூறுவார்களே தவிர, அதற்கான காரணம் அவர்களுக்குத் தெரியாது. ஏனெனில், அதற்கான காரணத்தை அறிந்திருக்கும் ஒரே மனிதன் நீங்களும், உங்களைப் படைத்த அந்த இறைவனும்தான். நீங்கள் எப்பொழுது திருந்த விரும்புகிறீர்களோ, அப்பொழுது இறைவன் நேர்வழியை உங்களுக்கு அறிவிக்கிறான். நீங்களும் தவறான பாதைகளிலிருந்து நேர்வழியை பெறுகிறீர்கள்.

நீங்கள் டாக்டர்களிடம் செல்லும் பொழுது, ஒன்றை உணர்ந்து கொள்ளுங்கள், உங்களுக்குக் கேடாகவே நீங்கள் அவர்களிடம் “என் இரத்த அழுத்தத்திற்கு காரணம் என்ன?” என்று கேட்பீர்கள். இதன் விளைவு மேலும் மேலும் சிக்கலில் நீங்கள் சீரழிவதுதான். அதை கண்கூடாக உங்களைச் சுற்றிலும் உலகம் பூராவும் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். உலகத்தில் இப்பொழுது அத்தனை பேரும் இருதயத்தின் அழுத்தத்தால் பாதிக்கப்பட்டு விட்டார்கள். இதற்குப் பெயர் வைத்து விட்டார்கள். மன அழுத்தம் stress syndrome என்று. எனினும் அவர்கள் உங்களுடைய மனநிலையை குணப்படுத்த சக்தி பெற மாட்டார்கள். உங்களுடைய மனநிலையை விரும்பினால், நீங்கள் திருந்த விரும்பினால், நீங்கள் திருத்திக் கொள்வீர்களானால் நிச்சயமாக உங்கள் இறைவன், உங்களுக்கு, உங்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவான்.

உங்கள் இருதயத்தைக் காப்பாற்றிக் கொள்ளக் கூடிய உங்களுடைய மனநிலை உங்களுடைய விருப்பத்தைக் கொண்டு மாறுவதற்காகக் காத்திருக்க, நீங்களோ, அழகான இந்த வாழ்க்கையை வெறுத்து, டாக்டர்களிடம் கூட்டாளிகளாக ஆகி விட்டீர்கள். இனி, நீங்கள் சாகும் வரையில் அந்தக் கூட்டாளிகள் உங்களை விட்டு பிரியவே மாட்டார்கள். இது இறைவனின் சாபக்கேடாகும். உங்களுடைய மனசாட்சியின் விரோதப் போக்குக்கு உங்கள் மனசாட்சி, அதன் இறைவனின் அனுமதியைக் கொண்டு உங்களுக்கு அளிக்கும் தண்டனையாகும். அதுவே மன வேதனை, மன பயம், மனக் கவலை, மன அழுத்தம் ஆகியவை ஆகும். நீங்கள் திருந்திக் கொள்ளவில்லையென்றால், கூடிய சீக்கிரத்தில் மன உளைச்சலுக்கு ஆளாகி தூக்கத்தை இழப்பீர்கள். தூக்கம் கெடுதல் என்பது நீங்கள் உங்கள் இருதய அழுத்தத்திற்காக மருந்து, மாத்திரைகளை உட்கொள்ளும் பொழுது, தவிர்க்க முடியாத சாபமாக ஆகி விடுகிறது. எந்தவொரு இருதய நோயாளியும் டாக்டர்களை நம்பியதின் விளைவாக தூக்கமின்மையால் அவதிப்படுவார்கள்.

அதற்காக தூக்க மாத்திரைகளையும் டாக்டர்கள் தவறாமல் கொடுப்பார்கள்.

அதில் உங்களுக்கு தூக்கத்தில் நிம்மதியும் கிடையாது; அடித்துப் போட்ட மயக்கத்திலிருந்து விழித்தது போன்றுதான் இருக்கும். அது தூக்கமே இல்லை. மன நிம்மதி கெடும். இறுதியான நிலை, பைத்தியத்திற்கு சமீபமான மனநிலை தடுமாற்றம்தான். இதுவே ஆங்கில மருந்துகளின் விளைவாக, அல்லது எந்த மருத்துவத்தின் விளைவாகவும் நீங்கள் அடையக்கூடிய கடைசி நிலையாகும்.

இப்பொழுது மீண்டும் அறிவு கெட்ட மருத்துவத்திற்குத் திரும்புவோம். மன உளைச்சலின் காரணமாகவும், அழுத்தத்தின் காரணமாகவும் மார்புப் பகுதியை இறுக்கத்திற்கு உள்ளாக்குகிறது. மூச்சுக் குழாய் வெகுவாக சுருங்கவும் செய்கிறது. இதன் காரணமாக, மூச்சு விடவும் முடியாத கஷ்டத்திற்கும் ஆளாகிறோம். இதன் காரணமாக, ஆஸ்த்துமா நோயும் ஏற்படும். அறிந்து கொள்ளுங்கள், ஆஸ்த்துமா நோய்க்கு மூலகாரணமே மன இறுக்கம்தான். ஆகவே, மூச்சின் இறுக்கமும் அதிகமாகும். ஏற்கெனவே நாம் அறிந்திருக்கிறோம், அட்ரீனலின் ஹார்மோன் உயிர் காக்கக் கூடிய செயலைச் செய்கிறது. மூச்சுக் குழாயில் அட்ரீலினுடைய வேலை என்னவென்றால், மூச்சுக் குழாயின் இறுக்கத்தைத் தவிர்த்து, அதனை விரிவாக்கச் செய்வதாகும்.

இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டிருக்கும் ஒவ்வொருவரும் மீண்டும் நினைவு கூர வேண்டியது இந்த உண்மையைத்தான். அதாவது, இன்சுலின் அட்ரீனலின் சுரப்பை நிறுத்தி விடும். அதன் இயக்கத்தையும் தடுத்து விடும். இனி இந்த நோயாளிகள் பய உணர்ச்சியிலும், மன இறுக்கத்திலும்தான் வாழ வழிவகுக்கிறது. எந்த சமயத்திலும் இவர்களின் மூச்சின் இறுக்கம் அதிகமாகி விடலாம். டயாபடீஸ் என்ற மனநிலை முற்றும் பொழுது, மூச்சு அடைப்பின் காரணமாக, திடீரென மரணம் ஏற்படும் நிலைமையையும் பற்றி அலட்சியமாக இருக்க வேண்டாம். மன இறுக்கத்திலிருந்து நீங்கள் மீள வேண்டியது உங்கள் மனம் திருந்துதலில் இருக்கிறது. இதுவன்றி நீங்கள் முயற்சிக்கும் மருத்துவங்கள் ஒவ்வொன்றும் உங்களுக்கு பாதகமாகி விடுகிறது. நீங்கள் உணர்ந்தே ஆக வேண்டும்; திரும்பியும் ஆகத்தான் வேண்டும்.

இன்னும் பெண்களுக்காகவும், தாய்மார்களுக்காகவும் ஒரு எச்சரிக்கை:

நீங்கள் போட்டுக் கொண்டிருக்கும் இன்சுலின் உங்களுடைய மன இறுக்கத்தையும், இருதய அழுத்தத்தையும், இரத்த ஓட்டத்தையும் வெகுவாக பாதிக்கும். எனவே வளரும் காலங்களில் பருவம் எய்தும் பொழுதும், அதன் பின்னரும் கர்ப்பப்பையில் நிவர்த்திக்க முடியாத கேடுகளை உருவாக்குகிறது. இரத்த ஓட்டம் தடைபடும். எனவே, கர்ப்பப்பைகளும் வலுவிழந்து, பலவீனத்தின் காரணமாக, அந்த உறுப்பின் சம்பந்தமான ஒவ்வொரு நோயும் கர்ப்பப்பையில் உருவாக இருக்கிறது. நீங்கள் உணர்ந்து நேர்வழி பெறுவீர்களானால், உங்கள் ஆரோக்கியமான வாழ்க்கை

உங்களுக்கு இருக்கிறது. எனவே, ஆரோக்கியமான மனநிலைக்கு வாருங்கள். அது ஒன்றே உடல் ஆரோக்கியத்திற்கு வழி. மருந்துகளைக் கொண்டு உடல் ஆரோக்கியத்தைப் பெற்று விடலாம் என்று கனவிலும் காண்பதைக் கூட வெறுத்து விடுங்கள். ஏனெனில், அதில் எள்ளளவும் உண்மையும் இல்லை; நன்மையும் இல்லை.

கர்ப்பப்பை இன்சுலின் காரணமாக எப்பொழுதும் தளர்ந்த நிலையில் விரிவடைந்த நிலையிலேயே இருக்கிறது. இது மாதப்போக்கை தள்ளிப் போகச் செய்கிறது. மாதப்போக்கு ஏற்பட்டு விட்டால், தொடர்ச்சியான இரத்தப்போக்கும் இதன் காரணமாக ஏற்படுகிறது. கர்ப்பம் தரித்து விட்டால், உறுதியான கர்ப்பப்பையாக அது இருக்க வேண்டும். உள்ளே வளரும் குழந்தையையும் உறுதியாக கட்டுக்கோப்பாக இருக்கும். ஆனால், இன்சுலின் காரணமாக கர்ப்பப்பை தளர்ந்திருக்கும் பொழுது, உள்ளே வளரும் குழந்தையும் பொல பொலவென்று உறுதியில்லாமல், கட்டுக்கோப்பில்லாமல் பெருத்த உடம்பாக இருக்கும்; எடை கூடுதலாகவும் இருக்கும். அந்த குழந்தை கருவிலும் ஆரோக்கியமாக இல்லை; பிறந்த பின்பும் ஆரோக்கியமாக இருக்காது.

அடுத்து பிரசவத்தின் போது, கர்ப்பப்பை சுருங்க வேண்டும் இல்லையா? அப்பொழுதுதான் குழந்தை சுகப்பிரசவமாகும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் கர்ப்பப்பை இன்னும் விரிவாகி பிரசவத்தின் போது குழந்தையும் வெளிவராமல் கர்ப்பப்பையும் உள்ளேயே வெடித்து விடும் நிலைக்கும் தள்ளப்படும். பெரும்பாலும் ஒவ்வொரு பெண்ணுக்கும் குழந்தைப் பேற்றின் போது சுகப்பிரசவம் ஆகுமா? ஆகாதா என்பது பெரும் கேள்விக்குறியாக இருக்கிறது. மகப்பேறு மருத்துவ நிபுணர் என்று தன்னைக் கூறிக் கொள்வார்கள். ஆனால், அவர்களிடம் சுகப்பிரசவத்திற்கு வழியில்லை. பத்து மாதங்களும் நீங்கள் தொடர்ச்சியாக மாதம் தவறாமல் குழந்தை நன்றாக பிறக்க வேண்டுமே என்று செக்கப் செய்து வருவீர்கள். ஆனால் குழந்தை சுகப்பிரசவம் ஆகும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது. இதற்குக் காரணம் என்ன தெரியுமா? அவர்கள் கொடுக்கும் வைட்டமின் மாத்திரைகள்.

கால்ஷியம் சத்து என்று கொடுக்கும் அநியாயத்தை உங்கள் உடலில் விளைவிக்கும் மாத்திரைகள். மேலும், கடைசி 3 மாதங்களில் அவர்கள் ஒரு அனுமானத்தில் போடும் தடுப்பூசிகள் இவையனைத்தும் கர்ப்பப்பையின் உறுதியான செயலிழப்புக்குக் காரணமாக அமைகிறது. ஏனெனில் எந்தவொரு மருந்தும் உயிரோட்டம் BIOLOGICAL உள்ளவை அல்ல. மாறாக, விஷத் தன்மை கொண்ட CHEMICAL இரசாயனங்கள் ஆகும். இவையிரண்டும் சமம் அல்ல. இரசாயனங்கள் ஒவ்வொன்றும் உயிரைக் குடிப்பவை ஆகும். நீங்கள் அதை 10 மாதங்களும் ஒவ்வொரு நாட்களும் உட்கொள்வீர்களானால், குழந்தை என்ன கதி ஆகும் என்பதை ஏன் சிந்தித்துப் பார்க்கவில்லை? குழந்தைக்கு மட்டுமல்ல,

எப்பொழுது குறை பிரசவம் ஆகி விடுமோ என்ற பயந்த நிலையில்தான் நீங்கள் இருக்க வேண்டும். அல்லது சுகப்பிரசவம் ஆகுமா என்ற கவலையிலும் நீங்கள் இருக்க நேரிடும். இந்த இரண்டும் இல்லாமல் சுகமான மனநிலை ஆரோக்கியமான தேக நிலை ஆங்கில மருத்துவத்தில் நிச்சயமாக இல்லை.

பெரும்பாலும் குழந்தையே சிசேரியன் ஆபரேஷன் செய்தே எடுத்து விடுகிறார்கள். இதன் பின்னர் கர்ப்பப்பை பழைய நிலையை விட மோசமாக விரிவடைந்தே இருக்கும். சுருங்கக் கூடிய உறுதியான நிலையை அடையாது. வயிறு பெருத்து விடும். இடுப்பைச் சுற்றியும், தொடையிலும் சதை போட ஆரம்பிக்கும். பொதுவாகவே உடம்பு பெருத்து விடும். இத்துடன் நிச்சயமாக இடுப்பு வலி, அடி முதுகு வலி, முழங்கால் மூட்டுக்களில் வலியும் ஆரம்பமாகி விடும்.

இந்த நிலையில் உங்களுக்கு தைராய்டு நோய் ஆரம்பமாகி இருக்கிறது என்றும் மருத்துவ பரிசோதனை ரிப்போர்ட்டுகளைக் கொண்டு வருவார்கள். பெரும்பாலும் இந்த நிலை யாருக்கு ஏற்படுகிறது என்றால், டயாபடீஸ் நோயின் காரணமாக அட்ரீனலின் ஹார்மோன் எப்பொழுது தடைப்படுத்தப்படுகிறதோ, அவர்கள் நிச்சயமாக மன இறுக்கத்தாலும், மன உளைச்சலாலும் மனம் தளர்ந்திருப்பார்கள். இவர்கள் உடல் சோகையிலும் ஆகி விடுவார்கள். இப்பொழுது இரத்த அழுத்தத்தை அதிகரிப்பதற்காக அட்ரீனலை இயக்கக்கூடிய தைராய்டு சுரப்பிகள் அதிகப்படியாக இயங்க வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளாக்கப்படுகிறது. இதன் காரணமாக தைராய்டு சுரப்பிகள் வீக்கமடையும். இப்பொழுதும் உங்களை விட மாட்டார்கள். தைராய்டு சுரப்பிகள் ஏன் வீங்குகின்றன என்பதற்கான காரணமும் தெரியாது. தைராய்டு சுரப்பிகள் போதுமான அளவுக்கு சுரப்பு நீரை சுரக்கவில்லை என்று தைராய்டு மாத்திரைகளைத் தருவார்கள். இப்பொழுதும் உணர்ந்து கொள்ளுங்கள். தைராய்டு ஹார்மோன் உடலில் சுரக்கும் பொழுது, அது உயிரோட்டம் BIOLOGICAL உள்ளதாகும். ஆனால், டாக்டர்கள் கொடுக்கும் தைராய்டு மாத்திரைகள் உயிரை வாங்கக் கூடிய CHEMICAL தன்மை கொண்ட இரசாயனங்கள் ஆகும்.

தைராய்டு மாத்திரைகளை எப்பொழுது நீங்கள் எடுக்க ஆரம்பித்தீர்களோ, அப்பொழுது தைராய்டு சுரப்பி உறுப்பும் தன் நிலை தளர்ந்து விடுகின்றது. நாளடைவில் அதன் சுறுசுறுப்பான இயக்கம் குறைந்து விடும். ஏனெனில், CHEMICAL தைராய்டு உடலில் சுற்றுப் பெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, BIOLOGICAL தைராய்டு சுரக்காது. ஏனென்றால், விஷத்துடன் உயிரோட்டம் கலக்காது. பிற்காலத்தில் தைராய்டு புற்றுநோய், கர்ப்பப்பை புற்றுநோய், இருதய செயலிழப்பு, மாரடைப்பு போன்ற எந்தவொரு காரணத்தாலும் மரணம் அடைய நேரிடும். உங்களுடைய மன உளைச்சலும், மன இறுக்கமும்தான் இறுதியான மரணத்திற்குக் காரணமாக அமையும்.

வாசகர்களே, உங்களுடைய மனநிலையின் ஆரோக்கியத்திற்கு நீங்கள் மனம்

திருந்துவதைத் தவிர எந்த வழியும் இல்லை என்பதை இன்று உணருங்கள். டாக்டர்களின் கொடுமைகளிலிருந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள். மருந்துகளின் விளைவுகளின் சித்திரைவதைகளிலிருந்தும் இன்று நீங்கள் தப்பிப் பிழைக்க வேண்டுமென்றால், உங்கள் மனதை நன்மையான பாதையின் பக்கம் திருப்புங்கள். இறைவனைத் தவிர உங்களுக்கு உண்மையான திருந்துதலை ஏற்பவன் எவனும் இல்லை. பெரும்பாலான நோய்கள் இன்று உங்களை விட்டும் நீங்க இருக்கின்றன. எனவே, திரும்புங்கள். நமக்கு இறைவன் போதுமானவன்.



**டாக்டர். ஃபஸ்லூர் ரஹ்மான்,**
**MBBS., MD., DV. Ph.D.**

# 5) சுகப்பிரசவத்தை சீரழிக்கும் ஆங்கில மருத்துவம்!

தாய்மார்களே, பெண்கள் கருவுறாத நிலையில் அவர்களுக்கு கர்ப்பத்தை ஏற்படுத்தக் கூடிய எந்தவிதமான வைத்தியமுறையும் ஆங்கில மருத்துவத்தில் கிடையாது. இருந்தாலும், வைத்தியம் என்ற பெயரில் ஹார்மோன்களையும், வைட்டமின்களையும் கொடுத்து அவர்களுடைய இயற்கையையே பாழடித்து விடுகிறார்கள்.

இந்த மருந்துகள் அனைத்தும் இரத்தத்திலும், திசுக்களிலும், பல்வேறு உறுப்புக்களிலும் தங்கி விடுகின்றன. முக்கியமாக கல்லீரல் உறுப்பில் தேக்கம் அடையும் பொழுது, அதனுடைய மிகவும் பாதகமான விளைவுகளில் முக்கியமானது அனைத்து உடல் உறுப்புக்களின் தசை நார்களும் சோர்ந்து விடுகின்றன. தங்களுடைய இயக்கங்களில் முழு ஆரோக்கியத்துடன் ஒருக்காலும் அவை இயங்க முடியாது. வயிறு, மண்ணீரல் முதற்கொண்டு சிறுநீரகங்கள், குடல்கள், நுரையீரல்கள் ஆகியவற்றின் இயக்கம் வரை அனைத்துமே உறுதியிழந்து விடுகின்றன. வயிறு, அதன் தசைநார்கள் இயக்கக் குறைவின் காரணமாக வழுவிழந்த நிலையில் இருக்கும் பொழுது, முறையற்ற ஜீரணம் உருவாகிறது. வயிற்றில் ஏற்படக்கூடிய ஜீரணத்தின் பயன் என்னவென்றால், உடனடியான சக்தி உணவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, மண்ணீரல் வழியாக இரத்தத்துடன் கலக்கச் செய்யப்படுகிறது. இதுதான் பல நாட்கள் பட்டினி கிடந்த ஒருவர் சாப்பிட்டதும் தனக்கு உயிரே வந்தது போன்று உணரக்கூடிய ஒரு தெம்பு.

இந்த உண்மை ஆங்கில மருத்துவத்திற்கு தெரியாது. ஆங்கில மருத்துவத்தின் படி ஒரு உணவை உட்கொண்டதும் வயிறு அதனை ஜீரணிப்பதற்கு குறைந்தது 3 மணி நேரங்கள் ஆகும். பின்னர் அது குடலுக்குள் இறங்கி, இன்னொரு 3 மணி நேரம் ஜீரணித்த பிறகு தான் உணவின் சத்துக்கள் இரத்தத்தில் கலக்கின்றன. எனவே அது உடலுக்குத் தேவையான கலோரி (CALORIE) சக்தியைக் கொடுக்கிறது என்று ஆங்கில மருத்துவம் கூறுகிறது. இவர்களிடம் நாம் கேட்கும் கேள்வி, “அப்படியானால் சாப்பிட்டதும் உடனடியாக சக்தி கிடைக்கிறதே, அது எங்கிருந்து?” நிச்சயமாக ஆங்கில மருத்துவர்கள் வாயை திறக்கவோ, பதில் அறியவோ வழியறிய மாட்டார்கள். எனவே, தாய்மார்களே உணர்ந்து கொள்ளுங்கள். இவர்களுக்கு உடல் எவ்வாறு இயங்குகிறது என்பதைப் பற்றிய அடிப்படை அறிவும் கிடையாது.

ஒரு பெண்ணுடைய வயிறு எந்த அளவுக்கு இயக்கக் குறைபாடுடன் இருக்கிறதோ, அந்த அளவுக்கு அவளுடைய மண்ணீரல் பாதிப்படையும் பொழுது இரத்தம் சுத்தமாக இருக்காது. இரத்த ஓட்டத்தின் பலவீனம் காணப்படும். இரத்த அணுக்கள்

பலவீனமாக இருக்கும். இரத்த சிகப்பணுக்களும், வெள்ளையணுக்களும் இரத்தம் உறையும் அணுக்களும் மிக மோசமான நிலையிலிருக்கும். இதனுடைய விளைவு என்ன தெரியமா? பசியிருக்காது, அல்லது அபரிதமான பசியைக் கொடுக்கும்.

எந்தச் சூழ்நிலையில் பசியிருக்காது? எந்தச் சூழ்நிலையில் அபரிதமான பசியிருக்கும்?

இளம் பெண்ணாக இருக்கும் பட்சத்தில் அவளுடைய கல்லீரல் மருந்துகளால் அதிகமாகத் தாக்கப்படாத வரையில் இழந்த சக்தியை மீட்பதற்காக வயிறானது போராடுகிறது. பசியுணர்வு அதிகமாக இருக்கிறது. ஆனாலும் ஜீரணிக்கும் திறன் இல்லை. சாப்பிட்ட உணவிலிருந்து சிறிதளவே சக்தியை கிரகிக்கக் கூடிய நிலையை வயிறு கொண்டிருப்பதால், அதிகமாக சாப்பிடுவார்கள். மீதமுள்ள உணவின் சக்தி உபயோகப்படுத்தப்படாமல் ஊளைச் சதையாக வயிற்று பாகத்திலும், இடுப்பிலும், தொடையிலும் தங்கி விடும். வேகமாக உடல் பருமன் அடைவார்கள். பசியையும் கட்டுப்படுத்த முடியாது. உடல் உடல் இளைக்க ஆங்கில மருத்துவத்தை நாடுவார்கள். ஆங்கில மருத்துவமோ அறிவு என்பது சுத்தமாக இல்லாத நிலையில் சாப்பாட்டைக் குறைக்கச் சொல்வார்கள். நிச்சயமாக இளம் வயதில் இருக்கக்கூடிய பெண்களால் ஒருபோதும் இதனை கடைப்பிடிக்க முடியாது. இன்னும் பசி அதிகமாகும். பட்டினி கிடந்தாலும் உடல் இளைக்காது. இந்த நிலையில் அவர்களுடைய வாழ்க்கை பரிதாபத்திற்குரியதாக காணப்படும். ஒரு நாளைக்கு ஒரு இட்லி சாப்பிட்டாலும் அதற்குறிய 'வெயிட்' போட்டு விடும்.

இந்த ஆங்கில மருத்துவம் தன்னுடைய அறியாமையைக் கொண்டு மேலும் அறிவுறுத்தும், அவர்கள் உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்று. ஆனால், நாம் அறிவோம், அவர்களுக்கு உடற்பயிற்சி செய்ய முடியாது. ஏனென்றால், அவர்களுடைய இயக்க சக்தியானது மிகவும் ஆரோக்கியமற்றதாகவும், பலவீனமாகவும் இருக்கிறது. எனவே, உடற்பயிற்சியின் காரணமாக, உடல் நிலை மேலும் மோசமடையும். இன்னும் அதிகமாக பசிக்கும். பத்து, பதினைந்து நாட்களுக்குக் கூட அவர்களால் தாங்க முடியாது. மீண்டும் அதிகமாகச் சாப்பிடுவார்கள். எடை மேலும் கூடும்.

இவர்கள் பருவ வயதை அடையும் பொழுது, உறுதியற்ற கர்ப்பப்பையைக் கொண்டிருப்பார்கள். கர்ப்பப்பையின் தசைநார்கள் பலமின்றி இருக்கும். எனவே, சீக்கிரமாகவே பருவமடைந்து விடுவார்கள். அதாவது, பிஞ்சிலேயே ஆரம்பமாகும் வயோகதத் தனம். இவர்களுக்கு முறையாக மூன்று நான்கு மாதங்களுக்கு ஒருமுறை என்று, முன்னும் பின்னுமாக முறையில்லாமல் ஏற்படும். மாதப்போக்கு ஏற்பட்டால், நிற்காமல் பல வாரங்களுக்கும் தொடரும்; அல்லது, பட்டும் படாமலும் நின்று விடும். இவர்களுக்கு ஹார்மோன் மாத்திரைகளை ஆங்கில மருத்துவம் கொடுக்கும். உண்மையில் நீங்கள் அறிவீர்களானால், இந்த மருந்துகளை கொடுக்கவே கூடாது. ஆங்கில மகப்பேறு மருத்துவர்களை

நெருங்கவும் கூடாது. அறிவற்ற ஆங்கில மருத்துவம் ஒரு பெண்ணுடைய இயக்கத்தை அறிய மாட்டார்கள். அதன் பலவீனத்தை அறிய மாட்டார்கள். அதன் பலவீனத்தை, அது ஏன் ஏற்பட்டது? என்பதையும் உணர்ந்ததறிய வகையில்லாதவர்கள்.

முதன்முறையாக ஒரு பெண் வயதிற்கு வரும் பொழுது, குறைந்தது 2 வருடங்களுக்கு அவளுக்கு மாதப்போக்கு ஏற்பட்டாலும் சரி, ஏற்படாவிட்டாலும் சரி அதிகமாக போக்கு இருந்தாலும் சரி, குறைவாக இருந்தாலும் சரி எந்த விதத்திலும் மருந்துகளைக் கொண்டோ, மாத்திரைகளைக் கொண்டோ அந்தப் பெண்ணைத் தீண்டக்கூடாது. அவ்விதமாயின் ஒரு வருடத்திற்குள்ளாக முறையான மாதப்போக்கு தானே சீராகி விடும். அத்துடன் அந்தப் பெண்களுடைய கெட்ட சக்திகள் அனைத்தும் மாதப்போக்கின் மூலமாக நீக்கப்பட்டு உடல் தசைநார்களில் தங்கியிருக்கும் மருந்துகளின் கழிவுகள் அகற்றப்பட்டு அவர்கள் தூய்மையடையக் கூடிய அழகான அத்தருணங்களைப் பேணிக் கொள்ளுங்கள். வெகு சீக்கிரம் தங்களுடைய உடல் ஆரோக்கியம் அதிகரித்து வருவதை அப்பெண்கள் உணருவார்கள். பசியும் குறையும். உடல் இயக்கங்களும் சுறுசுறுப்படையும். எனவே உடல் மெலிவுற்று, இயற்கையான தன்மை அடையும்.

தாய்மார்களே நீங்கள் கவனித்திருப்பீர்கள், உங்கள் பெண் குழந்தைகளுக்கு மாதப்போக்கு எவ்வளவு நாள் சென்றாலும், அதன் காரணமாக அவர்கள் நிச்சயமாக ஒருபோதும் பலவீனம் அடைவதில்லை. இதற்குக் காரணத்தையும் இப்பொழுது நீங்கள் தெரிந்து கொண்டீர்கள். உடலில் தேக்கம் கொண்டுள்ள மருந்துகளின் கழிவுகள், கேடுகள் மாதப்போக்கின் மூலமாக ஒரு கழிவாக நீக்கப்படுகிறது. அந்தக் குழந்தை பிறந்தது முதலாக கொடுக்கப்பட்ட மருந்துகளின் விஷங்கள் தாம் இதுவரையில் வாழ்க்கையின் மிகப்பெரும் போராட்டமாக அக்குழந்தைகளுக்கு இருந்து வந்தது. பூப்படைந்த நிலையில் அந்தப் பெண்களுக்கு ஏற்படும் மாதப்போக்குகள் மூலமாக அவ்வளவு நச்சுக்களும் நிச்சயமாக உடலை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றன. எனவே, அக்குழந்தைகள் பலவீனமாக உணரவே மாட்டார்கள். மாறாக, உடல் ஆரோக்கியத்துடன் இருப்பார்கள்.

ஆனால், பத்திரிக்கைகளிலும், தொலைக்காட்சிகளிலும் ஆங்கில மருத்துவத்திற்கு அளிக்கப்படும் விளம்பரத்தைப் பார்த்துவிட்டு, இவர்கள் தான் மருத்துவர்கள் என்று தவறான எண்ணத்துடன் 7 நாட்களுக்கும் மேலாக மாதப்போக்கு கூடாது என்று தங்கள் மதியை இழந்து, அச்சம் கொண்டவர்களாக மகப்பேறு மருத்துவ நிபுணர்களிடம் ஓடுகிறார்கள். அங்குக் கொடுக்கப்படும் மருந்துகளும், ஹார்மோன் மாத்திரைகளும் அப்பெண் குழந்தைகளின் வருங்காலத்தின் கொடுமையான வாழ்க்கைக்கு வித்தாகின்றன. இவர்களுக்கு திருமண வயது நெருங்குகிறது. மாதப்போக்கு முறையாக செயல்படவில்லை என்பதை அறிந்திருந்தும் எந்த அடிப்படையில் திருமணத்தை நீங்கள் நடத்துகிறீர்கள்? மாத்திரைகளைப் போட்டுக்

கொண்டு மாதப்போக்கை வரவழைத்துக் கொண்டா? அவர்கள் திருமண வயதை அடைந்திருக்கலாம். ஆனால், நிச்சயமாக கர்ப்பம் தரிக்கும் பருவத்தை இதன் காரணமாக இன்னமும் அடையவில்லை என்பதை நீங்கள் எவ்விதம் அறியத் தவறினீர்கள்?

அறிந்து கொள்ளுங்கள், ஆங்கில மருத்துவத்தை நீங்கள் நிறுத்த வேண்டும். அவற்றை நீங்கள் உங்கள் பெண் குழந்தைகளுக்குக் கொடுக்கக் கூடாது. நிச்சயமாக ஒன்று இரண்டு வருடங்களுக்குள்ளாக மாதப்போக்கு சீரடையும். உடல் பருமன் குறையும். இயற்கையான தேக அமைப்பைப் பெறுவார்கள். பசி இயற்கையான நிலையை அடையும். உடல் சுறுசுறுப்பும், ஆரோக்கியமும் நிச்சயமாக அவர்களுடைய செயல்களில் வெளிப்படும். இப்பொழுது அவர்கள் திருமணப் பக்குவத்தைஅடைந்திருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பம்தான் அவர்களுடைய கர்ப்பம் முறையானதாக இருக்கும்.

மாறாக, இந்த நிலையான, உறுதியான சூழ்நிலைக்கு வருவதற்கு முன்பாக திருமணம் செய்து வைத்தால், என்ன நிகழும் என்பதைப் பாருங்கள்.

ஆணுடைய விந்தானது, ஒருமுறை உடலுறவின் போது, எட்டு கோடி உயிரணுக்களை கர்ப்பப்பையினுள் செலுத்துகிறது. அந்தப் பெண்ணின் கருமுட்டைக்குப் பொருத்தமானதாகும். எனவே, பெண்ணின் சினைப்பையில் இருக்கும் முட்டையினுடைய பிரித்தறிந்து ஈர்க்கும் ஆற்றல் எத்தகையதாக இருக்க வேண்டுமெனில், எட்டு கோடி விந்தணுக்களிலிருந்து தனக்கு பொருத்தமான ஒன்றே ஒன்றை மட்டும் தேர்ந்தெடுக்கக் கூடிய சக்தியைப் பெற்றிருக்க வேண்டும். இந்த சக்தி இல்லாத நிலையில் கீழ்காணும் நிகழ்ச்சிகள் நிகழ்கின்றன:

1. கரு உருவாமலே போகும். எனவே, பிள்ளைப்பேறு பல வருடங்களுக்கு இல்லை என்றாகி விடும். இதற்கு ஒரே வழி, இனிமேலாவது மருந்து, மாத்திரைகளை விட்டு விட்டு உடலின் கழிவுகள் மாதப்போக்கின் மூலமாக நீங்கும் வரை பொறுத்திருக்க வேண்டும் தானே கர்ப்பம் தரிக்கும் வரை.

2. சினை முட்டை பலவீனமாக இருப்பதால், தன்னுடைய முட்டைக்குப் பொருத்தமான ஒரு விந்தணுவை பிரித்தறிய இயலாத நிலையில் தன்னுள் ஊடுருவி கர்ப்பம் தரிக்க விட்டு விட்டால், பலவீனமான கர்ப்பமாக வளருகிறது. எனவே, கர்ப்பம் தரித்ததிலிருந்து இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள்ளாக கருச்சிதைவு நிகழ்ந்து விடும். இது தொடர்ச்சியாக நிகழும் நிகழ்ச்சியாகவும் ஆகிவிடும்.

3. அடுத்ததாக தன் இயல்புக்கு உரியதாக இல்லாத ஆண் அணுவை பெண் முட்டை அனுமதிக்கும் பொழுது, வளரக்கூடிய சிசு பலமற்றதாக பாதிப்புக்குள்ளாகக் கூடியதாக வளருகிறது. அந்தக் குழந்தையின் வளர்ச்சியின்

எந்தத் தருணத்திலும் கருச்சிதைவு ஏற்படலாம். அல்லது, குழந்தை நிறைமாதம் ஆன பின்பும் இயற்கையாக சுகப்பிரசவத்திற்காக கீழிறங்கக் கூடிய சக்தியும் பெறாமல் அமையலாம். அல்லது, வளரும் பலவீனத்தின் போதே பிறவிக் குறைகளோடு பிறக்கலாம்.

4. சினைப்பையில் பெண் முட்டையின் பலவீனத்தின் காரணமாக பிரித்தறிந்து ஒன்றை மட்டுமே ஈர்க்கக்கூடிய சக்தி குறைவின் காரணமாக ஒன்றுக்கும் மேற்பட்ட ஆணணுவை அனுமதித்து விடலாம். பெண் முட்டையிலும் ஒன்று மட்டுமே வளர்ந்து உறுதியடைவதற்கு பதிலாக, ஒன்றுக்கு மேற்பட்ட முட்டைகள் தொற்றிக் கொண்டிருக்கலாம். இதன் காரணமாக ஒட்டிப் பிறக்கும் இரட்டைக் குழந்தைகள் முதலாக, தனித்தனியே ஒன்றுக்கும் மேற்பட்ட சிசுக்கள் கொண்ட கர்ப்பமாகவும் அமையும்.

5. சினைப்பையின் பலவீனத்தின் காரணமாகவும், கர்ப்பப்பையின் பலவீனத்தின் காரணமாகவும் வளரும் சிசுக்கள் கெட்ட நச்சுக்களின் சக்திகளால் பாதிக்கப்படாமல் இருக்க உடல் இயற்கை கெட்ட சக்திகளை எதிர்க்கிறது. இதன் விளைவாக சக்தி திரட்சிகள் குமட்டலாகவும், வாந்தியாகவும் வெளியேறுகிறது. இந்தக் கெட்ட சக்தி முழுமையாக வெளியேற்றப்பட்டு, உடல் தூய்மையாக்கப்படும் வரையில் தொடர்ச்சியான மசக்கையும், வாந்தியும் இருந்து கொண்டேயிருக்கும். ஒன்று, கெட்ட சக்திகள் நீக்கப்பட வேண்டும். அல்லது, பாதிக்கப்பட்ட நிலையில் சிசுக்கள் குழந்தைகளாக உருவாவது தடுக்கப்பட வேண்டும்.

இந்த நிலையில் பெரும்பாலும் டாக்டரிடம் சென்று மகப்பேறு நிபுணர்களை அணுகி, வாந்தியை நிறுத்துவதற்கான மருந்துகளைச் சாப்பிடுவார்கள். அந்த கெட்ட சக்தி வெளியேறுவது இவ்விதமாக தடுக்கப்படும் பொழுது, எந்தவொரு கேடும் குழந்தைக்கு உருவாகலாம்.

6. குழந்தை பிறந்ததும் கர்ப்பப்பை சுருங்காது. அதிகப்படியான இரத்த ஓட்டம் தாய்க்கு ஆபத்தாக முடியும். அல்லது, பிரசவத்திற்கு பின்னர் மிகவும் பலவீனமடைந்து, இடுப்பு, கை, கால் வலிகளால் எந்த வேலையும் செய்ய இயலாத நிலையில் வெகு விரைவில் பெரும் நோயாளிகளாக ஆகி விடுவார்கள்.

7. இவ்வகையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மண்ணீரலின் இயக்கமும், கணையத்தின் சுரப்புத் தன்மை குறைந்து விடும். எனவே, கர்ப்ப காலத்தில் அல்லது பிரசவத்திற்குப் பின்னர் கணையம் செயலிழப்பிற்கு ஆளாவார்கள். இது டயாபடீஸ் எனும் நீரிழிவு நோய்க்கு ஆரம்பமாகும்.

8. நீரிழிவு நோயும், இருதய நோயும் எப்பொழுதும் இணைந்தே இருக்கும். இவ்விரண்டு நோய்களில் ஒன்று சற்று முன்னதாகவும், மற்றது அதைத் தொடர்ந்தும் ஏற்படும். இவற்றுக்கென தனித்தனி முறையே நீரிழிவு சிறப்பு

நிபுணரும், இருதய சிறப்பு நிபுணரும் வைத்தியம் பார்ப்பார்கள். இருவருமே இவ்விரண்டு நோய்களையும் குணப்படுத்த இயலாதவர்கள் தான். இந்த இயலாமை பட்டியலில் முதலிடம் வகிப்பவர் மகப்பேறு மருத்துவ நிபுணர் ஆவார். அவர் கொடுத்த மருந்துகளால் வந்த வினைகள் தான் இவ்வளவும்.

எந்தப் பெண்களுக்கு பசி அறவே இருக்காதோ, அவர்களுடைய உடல்வாகு முன்பு சொல்லப்பட்ட பெண்ணின் உதாரணத்திற்கு நேர்மாறானதாக இருக்கும். இவர்களுக்கு எப்பொழுதும் சோர்வும், தூக்கக் கலக்கமும், சோம்பேறித்தனமும் அதிகமாக இருக்கும். எப்பொழுதும் இருமல், சளியினால் பாதிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள். கல்லீரலில் மிகுதியாக ஆங்கில மருந்துகளின் தீய சக்திகள் நிறைந்திருப்பதால் உணவைப் பார்த்தாலே பிடிக்காது. தலைச் சுற்றலும், மயக்கமும், தலை வலியும், கண் வலியும் ஆரம்பகால அறிகுறிகளாக பல ஆண்டுகள் வரை நீடித்திருக்கும். மலச்சிக்கலும், மலம் கழித்த பிறகு எரிச்சலும் ஒரு பிரச்சினையாகவே இருந்து கொண்டிருக்கும். அடிக்கடி கோபத்துடன் எரிந்து விழக் கூடிய மனப்பான்மையுடன் இருப்பார்கள். கண் எரிச்சலும், கண் பார்வைக் குறைவும் சிறு வயதிலிருந்தே ஆரம்பமாகும்.

மருந்துகளின் நச்சுக்கள் பெரும்பாலும் கல்லீரலிலும், தசைநார்களிலும் சேர்ந்திருக்கும் பொழுது, படிப்படியாக அவை உடலை விட்டும் வெளியேற்றப்படும். மேலும், நச்சுக்கள் அதிகமாக இரத்தத்தில் கலக்கும் பொழுது, அவற்றின் நச்சுக்களை நீக்கி வெளியேற்றக்கூடிய சக்தியின்றி கல்லீரல் சோர்வுற்றிருப்பதனால் அந்த நச்சுக்கள் நச்சுத் தன்மை நீக்கப்படாமலேயே சிறுநீரகங்களை அடைகின்றன. அங்கு அது விஷமாகவே பிரிக்கப்பட்டு, சிறுநீரகங்களின் திசுக்களை அடைகிறது.

கல்லீரலில் பொதுவாக விஷத் தன்மை நீக்கப்பட்டு, ஜீரணிக்கப்பட்டு பின்பே கழிவாக சிறுநீரகங்களை பொதுவாக அடையும். இது ஆரோக்கியமானது. ஆனால், கல்லீரலால் விஷத் தன்மை நீக்கப்படாமல், விஷமாகவே சிறுநீரகங்களை அந்நச்சுக்கள் அடையும் பொழுது, சிறுநீரகங்கள் செயலிழக்கின்றன. நீர் பிரிதலில் கஷ்டம் ஏற்படுகிறது. கால்களிலும், முகங்களிலும் வீக்கம் அதிகரிக்கும். வயிற்றிலும் நச்சுத் தன்மை கலந்து வீக்கம் உண்டாகி, விக்கலும், கெட்ட வாசனையையும் வெப்பக் காற்றாகவும், ஏப்பமாகவும் வெளியேறும். சாப்பாட்டைப் பார்த்தாலே குமட்டலும், வாந்தியும் ஏற்படும். கூடவே மயக்கமும், தலைச் சுற்றலும் இன்னும் அதிகமாகும்.

இவ்வகை பெண்களின் கர்ப்பப்பை, சினைப்பை இவ்விரண்டிலுமே கெட்ட சக்தி நிறைந்திருக்கும். இவர்களுக்குரிய சினை முட்டை அதிலும் நச்சுத் தன்மை இருக்கும். தனக்குரிய ஆண் விந்தணுவை அந்த கெட்ட சக்தியே தேர்ந்தெடுக்கும். இது நன்மையான பலன்களைக் கொண்டிருக்கக்கூடிய சிசுவாக வளராது. இத்தகைய தருணத்தில் இயற்கையாகவே நிச்சயமாக அந்த கர்ப்பம் கலையும்.

இந்தக் கருச்சிதைவு பெரும்பாலும் 8 அல்லது 9வது மாத கர்ப்ப காலத்தில் ஏற்பட வாய்ப்புண்டு. கை கால்களெல்லாம் வீங்கி, வயிறும் வீங்கி, முகம் கண், இமைகளெல்லாம் வீங்கி விடும். அடைக்கப்பட்ட தண்ணீர்ப்பை போன்று காட்சியளிப்பார்கள். விஷத் தன்மையின் தாக்கம் உடல் முழுமையும் பரவி, பல சமயங்களில் கை கால் வலிப்பும் ஏற்பட்டு, கரு கலைந்து, உயிருக்கே பாதகமாக அமைந்து விடும். இதனை விஷ கர்ப்பம் என்றும் கூறுவார்கள். இந்த நிலையில் ஆங்கில மருத்துவர்கள் கை விரித்து விடுவார்கள். நிறைமாத குழந்தையை கொன்று தாயை காப்பாற்ற வேண்டும் என்று மகப்பேறு சிறப்பு மருத்துவர் கூறுவார். இவர்கள் தாம் குழந்தையையும், தாயையும் பிறந்த பிறகு காப்பாற்றுபவர்கள்.

கர்ப்பமுற்ற 5 அல்லது 6வது மாதத்தில் இரத்த அழுத்தம் அதிகமாகி விட்டது என்று மருந்துகளைக் கொடுத்து, இருதயத்தைப் பாழாக்குவார்கள். பின்னர் வாழ்நாள் முழுவதும் இருதய நோயாளிகளாகவே வாழ்ந்து மடிய வேண்டியதிருக்கும்.

மருந்துகளையும், டாக்டர்களையும் விட்டு விலகி யார் காப்பாற்றப்பட்டார்களோ, அப்பெண்களும், அப்பெண்களுடைய குழந்தைகளும் விஷத் தன்மை நீக்கப்பட்டவர்களாகவும், உறுதியான மனப் பக்குவத்துடனும், தேக ஆரோக்கியத்துடனும் வாழ்வார்கள்.

தாய்மார்களே, இப்பொழுது மேற்சொன்ன அனைத்துக் குறைகளிலிருந்தும் நீங்கள் எந்த நிலையிலும் சுகம் பெற விரும்புவீர்களானால், கீழ்காணும் முறையைக் கையாளுங்கள்.

அக்குபங்சர் தத்துவப்படி வயிறும், மண்ணீரலும் நிலம் மூலப்பொருள் சம்பந்தப்பட்ட உறுப்புக்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

கல்லீரல், பித்தப்பை ஆகிய இவ்விரண்டும் மரம் மூலப்பொருள் சம்பந்தப்பட்ட உறுப்புக்கள் ஆகும்.

இவ்விரண்டு மூலப்பொருட்களும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. எவ்வாறெனில், மரம் வளரும் பொழுது நிலத்தினுடைய நீரையும், வளத்தையும் உறிஞ்சுகிறது. இன்னும், நிலத்தை பிளந்து கொண்டு அதனுடைய வேர்கள் இறங்குகின்றன.


அடுத்ததாக நீர் மூலப் பொருளை பொறுத்தவரையில் மரம் செடியாக இருக்கும் பொழுது, நீர் மூலப் பொருளினுடைய அளவின் அதிகம் மரத்தைப் பழுதடையச் செய்து விடுகிறது. அளவோடு நீர் இருக்குமானால், மரத்தின் வளமைக்கும், நிலத்தினுடைய இயற்கை செழிப்பிற்கும் பாதிப்பு இருக்காது; இன்னும் எந்தக் குறையும் இருக்காது.

மேற்சொன்ன இரண்டு நோய்த் தன்மைகளில் ஒன்று நிலம் மூலப்பொருள் சம்பந்தப்பட்ட உறுப்புக்களான வயிறு, மண்ணீரல் சார்புடையதாகும். இவர்கள் குண்டாக இருப்பார்கள். அதிகமாகப் பசியுடன் இருப்பார்கள். இன்னும், மேற்சொன்ன அனைத்து நோய்களின் குணாதிசயங்களும் அவர்களிடம் இருக்கும். இத்தகைய நோய்த் தன்மை உடையவர்களுக்கு எந்த அகுபங்சர் புள்ளியைத் தேர்ந்தெடுக்கலாம் என்பதை இப்பொழுது தெளிவாக அறிய முடியும்.

நிலம் மரம் மூலப் பொருளின் உறுப்புக்களில் ஒன்றான கல்லீரல் சோர்வால் பாதிக்கப்படுகிறது. நீர் மூலப்பொருள் மரம் மூலப்பொருள் சார்ந்த கல்லீரலுக்கு மிகவும் வளத்தையும், இயற்கைச் செழிப்பையும் கொடுக்கிறது. மேலும் நீரின்மையின் காரணமாக நிலத்தினுள் ஆழமாக வேர் பாய்ந்து, நிலத்தை பாதிக்கிறது. அதாவது, கல்லீரல் வயிறு, மண்ணீரல் ஆகியவற்றின் இயக்கத்தைப் பாதிக்கிறது. அவற்றின் தசை நார்களையும் சோர்வடையச் செய்து, வலுவிழக்கச் செய்கிறது.

எனவே, நிலத்திற்கு (வயிறு, மண்ணீரலுக்கு) நீர் மூலப் பொருளைக் கொண்டு வந்தால், மரத்தினுடைய (கல்லீரல், பித்தநீர்) வேர்கள் ஆழமாகப் பாய்ந்து, நிலத்தை பாதிக்க வேண்டிய அவசியமிருக்காது. மேலும், நிலத்தில் உள்ள நீர் மரம் மூலப்பொருள் சார்ந்த உறுப்புக்களினுடைய செழிப்பிற்கும், பசுமையான இயக்கத்திற்கும் போதுமானதாக இருக்கும். எனவே, நிலமும், மரமும் இவை சார்ந்த உறுப்புக்களான வயிறு, மண்ணீரல், கல்லீரல், பித்தநீர்ப்பை ஆகிய அனைத்தின் இயக்கங்களும் உடலின் ஆரோக்கியத்திற்கு தகுதியான விதங்களில் செயல்படும். மேற்சொன்ன அனைத்து நோய்களிலிருந்தும் இப்பொழுது நாம் பார்க்க இருக்கும் ஒரு புள்ளி போதுமான நற்பலனைக் கொடுக்கும்.

வாசகர்களே, நமக்கு இப்பொழுது தேவையானது, நிலம் மூலப்பொருளான மண்ணீரலுக்கும், வயிற்றுக்கும் நீர் மூலப்பொருளை கொண்டு வர வேண்டும். எனவே, நிலம் மூலப் பொருளின் உறுப்புக்கள் இரண்டில் மிக முக்கியமான மண்ணீரல் உறுப்பின் சக்தி நாளைத்தைத் தேர்ந்தெடுக்கிறோம். இந்த மண்ணீரல் சக்தி நாளத்தில் நீர் வரத்தைக் கொண்டு வரக் கூடிய, நீர் மூலப் பொருளுடன் தொடர்பு கொண்டுள்ள புள்ளி, 9வது அகுபங்சர் புள்ளியாகும். இந்த புள்ளி எங்கு அமையப் பெற்றிருக்கிறது என்பதைப் படத்தில் பாருங்கள்.




வாசகர்களே, இந்தப் புள்ளி எப்படித் தூண்டப்பட வேண்டும் என்பதை கீழே விரிவாகக் கொடுத்திருக்கின்றோம். கவனமாகப் படித்து, எந்த அளவுக்கு நீங்கள் புரிந்து கொண்டீர்களோ, அதன்படி செயல்படுங்கள். நாம் செய்வது சரிதானா என்ற

தயக்கமோ, சந்தேகமோ வேண்டவே வேண்டாம். உணர்ந்த விதத்தில் செயல்படுங்கள். எவரிடமும் சரியா? தவறா என்று கேட்கவும் வேண்டாம். நிச்சயமாக உங்களுடைய நம்பிக்கையை இறைவன் அளவில் நிறுத்துங்கள். அவன் உதவியையே நாடுங்கள். அவனுக்கே அஞ்சுங்கள். நிச்சயமாக உங்கள் முயற்சிக்கும், செயலுக்கும் உரிய நற்பலன் இருக்கிறது.

ஒரு புள்ளியைத் தேர்வு செய்யும் பொழுது, ஏன் இதை தேர்வு செய்கிறோம் என்ற அந்த சிந்தனையின் அடிப்படை தான் அந்தப் புள்ளியை இயக்குகிறதே தவிர, உங்களுடைய கை விரல் நுனிகள் அந்தப் புள்ளியைப் பற்றித் திருப்தியடைந்தால் மட்டுமே மேற்சொன்ன விதத்தில் அந்தப் புள்ளிக்கு வைத்தியம் அளிக்க முடியும். உங்கள் விரல் நுனி அந்தப் புள்ளியை இயக்கவில்லை. உங்களுடைய மனதின் தீர்மானம் உங்களுடைய விரல் நுனிகளில் இயங்குகிறது என்பதை அறிந்து கொள்ளுங்கள். எனவே, எப்பொழுதுமே சுயமான உங்களுடைய சிந்தனையின் பக்கம் நில்லுங்கள். புள்ளிகளைத் தேர்வு செய்யுங்கள். வெற்றியுடன் உங்களுடைய சுகத்தை அனுபவியுங்கள்.

புதிய அகுபங்சர் மேற்சொன்ன சிந்தனையையும், ஞானத்தையும் தானே உங்களுக்கு ஊட்டும். ஒவ்வொரு வரியையும் சிந்தனையுடன் படியுங்கள். இது எந்த விதத்திலும், இதனுடைய எந்தப் பகுதியையும் இதுவரையில் உலகம் அறிந்திராதது. ஏனெனில், இந்தப் புதிய அகுபங்சர் இறை ஞானங்களிலிருந்து உள்ளதாகும்.

# 6) கருத்தடை ஆபரேஷனால் விளையும் கேடுகள்!

இரத்தத்திலிருந்து கழிவுகள் சிறுநீரகங்கள் வழியாக நீக்கப்படுகின்றன. இரத்தம் சுத்தமாகிறது. இது பொருள் அளவில் ஏற்படக்கூடிய சுத்திகரிப்பு. இரத்த ஓட்டத்தை உடல் முழுவதிலும் இயக்கிக்கொண்டிருப்பது உயிரோட்டமாகும். உயிர்ச் சக்தியும் தூய்மையாக்கப்பட வேண்டும். இந்த உயிர்ச் சக்தியும் தூய்மையாக்கப்படுதல் என்பது மனதில் நிகழக்கூடிய நிகழ்வு. சிறுநீரகங்களிலும், மனதிலும் ஏற்படக்கூடிய இந்த மகத்தான மாற்றங்கள் புது உயிரை உருவாக்கக் கூடிய பெண் கருவாகவும், ஆண் விந்து அணுவாகவும் மாறுகின்றன.

மனம் இருதயத்தில் அமைந்திருக்கிறது. மனம் தூய்மையாகும் பொழுது, அந்த இருதயத்தில் மனதில் உள்ள அமைதி குடி கொள்கிறது; இருதயம் சீராக இயங்குகிறது. அந்த இருதயத்தில் பதட்டமோ, மற்ற குணநலன்களின் கேடோ கிடையாது. இருதய நோய்கள் உருவாக, இயலாத நிலை மட்டும் இல்லை இது; இருக்கக்கூடிய இருதய நோய்களும் நீங்கக்கூடிய சூழ்நிலையாகவும் இது அமைந்திருக்கிறது. இருதயத்தின் கேடு குணநலனின் கேடு ஆகும்; உடலின் கேடு இரத்தத்தில், உடல் உள்ளுறுப்புகளில் தேக்கம் கொண்டுள்ள கழிவுகளின் கேடு ஆகும். இருதயத்தின் குணம் பாதுகாக்கப்படும் பொழுது, இந்த உள்ளகத்தின் சுகம் உடல் உள்ளுறுப்புகளை மிக நேர்த்தியாக இயக்குகிறது. இதன் காரணமாக, சிறுநீரகங்கள் எந்தப் பட்டத்திற்கும் உள்ளாக்கப்பட்டால், தானும் ஆரோக்கியத்துடன் இயங்கி, கழிவுகளை முழுமையாக உடலை விட்டும், இன்னும் இரத்தத்திலிருந்து நீக்கி, தூய்மைப்படுத்துகிறது. இவ்விதமாக உடலும், உள்ளமும் தூய்மையாக இருக்கக்கூடிய நிலையில் ஆண் அணுக்களும், பெண் கருவும் உண்டாகின்றன. இது இயற்கையின் நிகழ்வாகும்.

நமது இருதயத்தினுள், மனதில் எப்பொழுதும் எண்ணங்கள் உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை அனைத்துமே அழகான உணர்வுகளாகும். நாளைய வாழ்க்கையின் அத்தியாவசியத் தேவைகளாகும். மிகவும் விரும்பி, ஏற்கக் கூடிய, மனதிற்கு விருப்பங்களாகும். அகிலங்களின் இயற்கைச் சக்தி இறைவனுடைய அனுமதியைக் கொண்டு, எண்ணங்களை நம் மனதில் தோற்றுவிக்கின்றன. இந்த எண்ணங்கள் தான் நாளைய வாழ்க்கையை நோக்கி நம்மை வழிநடத்துகின்றன. வாழக்கூடிய விருப்பத்தையும் இந்த எண்ணங்களே ஏற்படுத்துகின்றன. எண்ணங்கள் படைக்கப்படுவதும், அந்த எண்ணங்களில் உங்களுடைய நாளைய வாழ்க்கையினுடைய தேவைகளும், விருப்பங்களும் இருதயத்திற்கு ஒரு விதமான சுகத்தையும், ஆதரவையும், ஆறுதலையும் அளிக்கின்றன. யார் இருதயத்தில் அறிவிக்கப்படும் இத்தகைய வாழ்க்கையை ‘அது நிறைவேறும்; இன்னும்

நிறைவேற்றப்படும்' என்று நம்பிக்கை கொள்கிறார்களோ, அத்தகைய இருதயங்களுக்கு இது ஒரு நம்பிக்கை உயிரோட்டம் ஆகும். இதுவே குணத்தின் அடிப்படை. இந்த குணத்தின் அடிப்படையில் விளையக் கூடியதுதான் உடல் நலன்கள் ஆகும். ஆக, மனதில் நம்பிக்கை வேண்டும், உடல் சுகம் உங்களுக்கு வேண்டும் என்றால்.

உள்ளத்தின் சுகமே உடல் சுகம். உள்ளத்தில் விளையக் கூடிய, வாழ்க்கைக்கு அத்தியாவசியமான நன்மைகள் – அவை எண்ணங்கள் அளவில் உருவாக்கப்படும் பொழுது, இவை இறைவன் வகுக்கும் வழிகளாகும். நம்பிக்கை கொள்வோருக்கு வழிகள் ஏற்கெனவே இறைவனால் அமைக்கப்பட்டு விட்டது. யார் நம்பிக்கை கொள்ளவில்லையோ, அவர்கள் தங்களுக்குக் கேடாகவே நன்மைகளை மறுக்கிறார்கள்; வெறுக்கவும் செய்கிறார்கள். இவர்களே பகிரங்கமான வழிகேட்டில் இருப்பவர்கள்; இவர்களுடைய உள்ளம் கெட்டது; குணங்கள் பாழடைகின்றன. உடல் நன்மைகள் குறைபட்டு, நோய்களாக உருவெடுக்க ஆரம்பிக்கும். எந்தவொரு நோயும் இதயத்திலிருந்து உருவாகின்றன என்பதை சந்தேகத்திற்கு இடமில்லாமல் இப்பொழுது உணருவோம். மனதில் ஏற்படக்கூடிய நலன்களை நம்பும் பொழுது, உருவாகும் நோய்களும் விலக்கப்படுகின்றன. அறியாமையின் காரணமாகவும், 'நான் படித்தவன்' என்ற எண்ணத்தில், பெருமையின் போதையில் ஒருவன் தன்னுடைய உள்ளத்தில் இறைவன் விதித்த எண்ணத்தை 'அது சாத்தியமில்லை' என்று அகம்பாவத்துடன் தனக்கே கேடான எண்ணத்துடன் எதிர்க்கிறான். இதனுடைய விளைவுகள் எவ்வளவு பெரிய நஷ்டம் என்பதை இப்பொழுது காண இருக்கிறோம்.

இதயத்தினுள் மனதில் எண்ணங்கள் உங்களுடைய விருப்பங்களாக உருவாகின்றன. உங்களுடைய அறிவைக் கொண்டு 'அது சாத்தியமில்லை' என்று எதிர்க்கிறீர்கள். இருந்தாலும், விருப்பங்கள் நீங்காது. நீங்கள் 'எது இயலாது?' என்று நினைக்கிறீர்களோ, அந்த நினைப்பை விட்டும் உங்களால் நீங்கி விட இயலாது. எதிரும் – புதிருமான எண்ணங்கள் உங்களுடைய இருதயத்தை ஆக்கிரமிக்கின்றன. இது இதயத்தில் குழப்பத்தைத் தோற்றுவிக்கிறது. இங்குதான் இந்தக் குழப்பத்தில் சிந்தனைத் திறன் குறைகிறது. நாளைய வாழ்க்கைக்குரிய வழிகள் மூடப்படுகின்றன. மனிதனுடைய அறிவை அதனுடைய தகுதிக்கு மேலாக உயர்த்தப்பட்டு, அதனை நம்பும் பொழுது, மனிதன் நிலை கீழிறங்க ஆரம்பிக்கிறது. நாளைய வாழ்க்கையில் நம்பிக்கையற்றுப் போகிறது. பயம் கலந்த வாழ்க்கையில் வாழ ஆரம்பிக்கிறான்.

மனதில் குழப்பம், பயம் இந்த இரண்டும் ஏன் தோன்றின என்பது இப்பொழுது உங்களுக்குத் தெரிய வேண்டும். இறைவன் விதித்த ஒரு வாழ்க்கையை உங்கள் அறிவைக் கொண்டு நீங்கள் 'அது இயலாத காரியம்' என்று மறுத்தீர்கள். உதாரணமாக, மனிதர்களுக்கு மிகப்பெரும் பாக்கியமான குழந்தைச் செல்வம்

வேண்டும் என்று மிக அழகான விருப்பத்தை உங்களுடைய மனதில் இறைவன் ஆக்கினான். நீங்களும் விரும்பினீர்கள். செல்வம் என்பது பெருக வேண்டும்; குழந்தைச் செல்வமும் அப்படித்தான். பெருகக் கூடியதுதான் செல்வமே தவிர, 'அது வேண்டாம்' என்று கூறுவது தரித்திரம் ஆகும்.

'ஒரு குழந்தைக்குப் பிறகு அடுத்தக் குழந்தை வேண்டாம்' என்று நீங்கள் உங்கள் மனதில் கொள்வது மனதின் இயற்கைக்குப் புறம்பான, புறம்போக்குத் தனம். உண்மைக்குப் புறம்பாக நீங்கள் ஏற்றுக்கொண்ட துரதிஷ்டம். இப்பொழுதும், சிந்தனை என்ற மகத்தான பாக்கியம் இதன் காரணமாக மிகப்பெரும் பாதிப்புக்குள்ளாகிறது. மனதில் குழப்பங்களும், பயமும் உருவாகின்றன. குழப்பங்களும், பயமும் எப்பொழுதெல்லாம் ஏற்படுகிறதோ, அது நமக்கு அறிவிப்பது என்னவென்றால், இறைவன் ஒரு நன்மையை நம்முடைய மனதில் விதிக்கும் பொழுது, அதனை 'தான்தான் நடத்த வேண்டும்' என்று நீங்கள் உங்களை இறைவனுக்கு நிகரான சக்தி உள்ளவன் என்று வீண் பிரமையில் ஆகி, பிறகு அந்த நன்மைகள் 'தனக்கு நிகழ்த்த சாத்தியமில்லை' என்று ஆகும் பொழுது, மறைமுகமாகவோ, நேரடியாகவோ இறைவனுடைய ஆற்றலையும் நிராகரிக்கிறீர்கள். உங்களோடு சேர்த்து இறைவனையும் நிராகரிக்கிறீர்கள்.

இந்த நிலையில், ஒரு குழந்தைக்குப் பிறகு நீங்கள் கவலையில் ஆகி விடுகிறீர்கள், 'அடுத்த குழந்தை வேண்டாம்' என்று மனதில் உள்ள இறை விதிக்கு மீறி நீங்கள் நினைக்கின்றீர்கள். எனவே, குழப்பம் உருவாகி விட்டது. ஏற்கெனவே பயம் இருக்கிறது. அந்த பயத்திற்குக் காரணம் இறைவன் விதித்த நல்ல எண்ணங்களுக்கு மீறி அதற்கு எதிராக நாம் கொண்ட எண்ணமே. இது இறை குற்றம்; அல்லது தெய்வ குற்றம். இதற்கான தண்டனை மனதில் குழப்பம்; அதைத் தொடர்ந்து பயம் என்ற திடுக்கம். குழப்பமும், பயமும் ஒன்றோடு ஒன்று இணைந்த இரு தீய குணங்களாகும். இதுவே இருதயத்தின் குணக் கேடு.

குழப்பமும், பயமும் ஆகிய குண நலனின் கேடுகள் தாம், உடல் நலக் கேடுகளுக்குக் காரணமாகிறது. சிந்தனைச் சக்தி கெட்டு, யோசனைகள் உலக மக்களின் அறிவின் அளவில் செயல்படுகின்றது. இது கேட்டிற்கு மேல் கேடு. ஏனெனில், உலக மக்களில் பெரும்பாலோனோர் சிந்தனைச் செல்வத்தை இவ்வகையில் தவற விட்ட குழப்பவாதிகள். இறைவன் விதித்த தெளிவான நன்மைகளை நம்பிக்கை கொள்ளத் தவறியதன் விளைவு குழப்பங்களில் நம்மை ஆக்கிக் கொண்டோம். குழப்பம் கொலையை விடக் கொடியது; தற்கொலையை விட மோசமானது. நரக வேதனையில் இனி நாம் வாழவும் முடியாது; சாகவும் முடியாது.

உலக மக்களில் ஒரு தரப்பினர் டாக்டர்கள். இவர்கள் 'குழந்தைச் செல்வம் வேண்டாம்' என்று கூறுபவர்களை அழைத்து, கருத்தடை என்ற அறிவு கெட்ட செயலை அவர்கள் மீது நிகழ்த்துவார்கள். இவர்களும் கருத்தடை செய்து

கொண்டு, டாக்டர்களையும் பெருமைப்படுத்துவார்கள். ஆனால், இவர்கள் அறிய இயலாத ஒன்று தங்கள் சிந்தனைத் திறனை இவர்கள் இழந்து விட்டார்கள் என்பதுதான். இதன் காரணமாக ஏற்பட்டு விட்ட குழப்பத்தையும், பயத்தையும் அவர்கள் இருதயத்தை விட்டும் ஒருக்காலும் இவர்களால், இந்த டாக்டர்களால் நீக்க முடியாது.

மனிதர்கள் நாளைய வாழ்க்கையைப் பற்றிய பயத்தைக் கொண்டிருக்கும் பொழுது, அவர்கள் உணர வேண்டும், ‘இறைவனை, இறை நியதியை, இறைவன் விதித்த விதியை நிராகரித்தும், எதிர்த்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்’ என்பதை. ஒருபோதும் நாம் இறைவனை நமக்கு எதிராக இயலாமல் ஆக்கி விட முடியாது என்பதை அதிகமாக அச்சம் கொள்ள வேண்டும்.

இப்பொழுது மனதில் குழப்பமும், பயமும் இருக்கக்கூடிய நிலையில் உடல் இயற்கையில் உள்ள ஹார்மோன்களின் இயக்கங்கள் முதலில் பாதிக்கப்படுகின்றன. முதலாவதாக அட்ரீனலின் அதிகமாக அளவுக்கு மீறி சுரக்க ஆரம்பிக்கும். இது மார்பு படபடப்பு, அதிக வியர்வை, உடல் நடுக்கம் போன்றவற்றை ஏற்படுத்தும். இரத்தக் கொதிப்பும், உயர் இரத்த அழுத்தமும் தவிர்க்க முடியாத விளைவுகளாக உருவெடுக்கும். டாக்டர்கள் இவற்றை குணப்படுத்த முடியாது.

இதைத் தொடர்ந்து, மனதில் இருக்கக்கூடிய குழப்பமும், பயமும் இன்சுலின் சுரப்பில் குறைகள் ஏற்படும். குழந்தை கருத்தரிக்கும் பொழுதே டயாபடீஸ் நோய் தோன்றும். இதனை ‘கர்ப்ப காலத்து டயாபடீஸ்’ என்று பெயர் வைப்பார்கள். அவ்வளவுதான். எந்த டயாபடீஸாக இருந்தாலும், ஆங்கில டாக்டர்களால், அல்லது எந்த மருத்துவத்தாலும் குணப்படுத்த முடியாது. இருதயத்தில் உள்ள குழப்பம் நீங்கினால் தவிர, மருந்துகள் குழப்பத்தை நீக்காது. காரணம், மருந்துகள் மனதைத் தீண்டவே முடியாது.

இதைத் தொடர்ந்து தைராய்டு சுரப்பியின் இயக்கத்தில் குளறுபடிகளும், குழப்பங்களும் உருவாகும். இதன் விளைவாக உடல் முழுமையிலும் உஷ்ணம் பரவும்; மார்பகங்கள் வீங்கும்; தொண்டைக் குரல் மாறும். பெண்களுக்கு மீசை, தாடிகள் முளைக்க ஆரம்பிக்கும். எப்பொழுதும் பரபரப்பாக இருப்பார்கள். கண்கள் பெரிதாகி, வெளியில் தள்ளும். அடிக்கடி வியர்வையும், நடுக்கங்களும் ஏற்படும். மார்பு படபடப்பின் காரணமாக மயக்கமும் ஏற்படும். எந்த வேலையிலும் ஈடுபட விருப்பமே இருக்காது; உடலும் ஒத்துழைக்காது. மனதில் வாழ்க்கையின் மீது விரக்தியும் ஏற்படும்.

இது பெண்களுக்கான நிலை. யார் கருத்தடை சாதனங்களை உபயோக்கிக்கிறார்களோ, அவர்களுக்கு இவற்றுக்கெல்லாம் மேலாக இடுப்பு வலி, கால்கள் வலி, கழித்து வலி, முதுகு வலி போன்றவையும் பாடாய்படுத்தும்.

கருத்தடை ஆபரேஷனுக்கு நிகராக மோசமானது அபார்ஷன் ஆகும். இப்பொழுது ‘கருத்தரித்த 6 மாதங்களுக்குப் பிறகும் அபார்ஷன் செய்வோம்’ என்கிறார்கள். இறைவன் விதித்த குழந்தைச் செல்வத்தை உலகம் முழுவதிலும் உள்ள நாடுகள் ஒட்டுமொத்தமாக இறைவனுக்கு எதிரான நடவடிக்கையில் பகிரங்கமான இறை நிராகரிப்பவர்களாக தெய்வ குற்றத்திற்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். நாடுகள் இறை சாபக் கேட்டிற்கு ஒட்டுமொத்தமாக சமுதாயமாக உள்ளாகிக் கொண்டிருக்கின்றன என்பதை அறியாத நிலையில், குழந்தைக் கட்டுப்பாடு என்ற அகம்பாவத்தில் வெகு வேகமாக சென்று கொண்டிருக்கின்றன.

நல்லறிவு படைத்தவரே நாட்டைத் திருத்த முடியாது. குறைந்தபட்சம் நீங்கள் தெய்வ குற்றத்திற்கு ஆளாகி விடாமல், உங்களை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இறை நிராகரிப்பிலிருந்து விலகி, நம்பிக்கை கொண்ட மக்களாக உலக மக்களுக்கு அழகான முன்மாதிரிகளாக இறைவனின் அனுமதியைக் கொண்டு நீங்கள் திகழ இருக்கின்றீர்கள். குழப்பங்களும், பயமும் உங்களையும், உங்களுடைய சந்ததியையும் விட்டும் நீங்கும். இதுவே இறையருளான பேரருட்கொடை.

## 7) உங்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு எந்த நோயும் வராமல் காப்பாற்ற...!

புதிய உயிர்க் கொல்லி மயக்க மருந்து!
ஆங்கில மருத்துவத்தின் போலி விளம்பரம்!

MOC etomidate என்ற புதிய மயக்க மருந்து தயாரிக்கப்பட்டிருப்பதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிற இந்த மருந்து இதுவரையில் ஆபரேஷன்களுக்காக உபயோகப்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய சாதாரண etomidate மருந்தை விட பாதுகாப்பானது என்று கூறுகிறார்கள்.

இப்பொழுது இந்த மருந்துகள் எலிகளிடம் பரிசோதனையில் உள்ளது. இன்னும் அதனுடைய பரிசோதனைகள் நிறைய இருக்கின்றன. அதற்குள்ளாகவே விளம்பரங்கள் ஆங்கில மருத்துவத்திற்கு செய்தித் தாள்களில் வர ஆரம்பித்து விட்டன. இரண்டு வருடங்களுக்குள் முழுமையாக இந்த விளம்பரமானது நம்பத் தகுந்ததாக ஆகி விடும். இதில் உள்ள கேடுகளை இப்பொழுது சொல்ல மாட்டார்கள்; தெரிவிக்கவும் மாட்டார்கள். ஆனால், இதனுடைய கேடுகளை இப்பொழுது நாம் அறிந்தே ஆக வேண்டும். ஆபரேஷன்களின் போது உபயோகப்படுத்தக் கூடிய இந்த மயக்க மருந்து நிச்சயமாக நரம்பு மண்டலங்களை பாதிக்கும். கண்களில் பாதிப்பை ஏற்படுத்தி, பார்வைக் குறைபாடுகள், கண் வலிகள் போன்றவற்றை நாளடைவில் ஏற்படுத்தும். பல காலங்கள் கழித்து இந்த நிலை ஏற்படுவதன் காரணமாக பொதுமக்கள் பெரும்பாலோனோர் இதனை ஆபரேஷனுக்காக செலுத்திய மயக்க மருந்தை ஒப்பிட்டுப் பார்க்க சக்தி பெற மாட்டார்கள்.

ஆங்கில மருத்துவர்களுடைய நிலையும் அதுதான். அவர்களால் அவர்களுடைய மயக்க மருந்துகளுக்கும், கண்களுக்கும் இடையே உள்ள தொடர்பை ஒருபோதும் அறிய மாட்டார்கள். அப்படியே அதை அறிவதற்குள்ளாக 30, 40 வருடங்கள் ஆகி விடும். அதன் பிறகும், அதனை மனிதர்களிடம் தெரிவிக்கவும் மாட்டார்கள். அப்பொழுது வேறு மாத்திரைகளை தயாரிக்கும் வேலையில் ஈடுபடுவார்கள். இப்பொழுது இருக்கும் மயக்க மருந்துகளுக்கு மாற்றமாக வேறு மாத்திரைகளை கண்டு பிடிக்கும் வரையில் இப்பொழுது தயாரிக்கக் கூடிய மருந்தின் கேடுகளைப் பற்றி மூச்சே விட மாட்டார்கள். அதன் காரணமாக எத்தனை பேருடைய கண்கள் கெட்டாலும் சரி, உலகம் முழுவதும் ஆபரேஷன் செய்யப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்படும் மருந்தின் காரணமாக குருடர்களானாலும் சரி, அதைப்பற்றி கவலைப்படவும் மாட்டார்கள்.

ஆனால், மாற்று மருந்து ஒன்றை ஏற்பாடு செய்து கொண்டிருப்பார்கள். மறைமுகமாகவே. அதனையும் எலிகளுக்குக் கொடுப்பார்கள். அப்பொழுதே திரும்பவும் இப்பொழுது நடப்பது போன்றே விளம்பரங்கள் ஆரம்பமாகி விடும் – புதிய கண்டுபிடிப்பு என்று.

இப்பொழுது நாங்கள் புதிய கண்டுபிடிப்பைக் கொண்டு வந்து விட்டோம் என்று கூறக்கூடிய MOC etomidate என்ற மயக்க மருந்தின் கேடுகள் மேற்சொன்ன விதத்தில் அமைய வேண்டியிருக்க, இதுவரையில் உபயோகப்படுத்திக் கொண்டிருக்கக்கூடிய etomidate என்ற மருந்தினுடைய கேடான விளைவுகளை மிகவும் யோக்கியர்கள் போன்று இப்பொழுது சொல்ல ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்குக் காரணம் மாற்று மருந்து கைவசம் வந்துவிட்டது என்பதுதான்.

தற்போது உபயோகித்துக் கொண்டிருக்கக்கூடிய etomidate ன் விபரீதமான விளைவுகளாவன:

இரத்த அழுத்தம் திடீரென குறைந்து, நோயாளி கோமாவில் ஆகி விடுவார். ஆபரேஷனுக்குப் பிறகு எழுந்திருக்க மாட்டார். பெரும்பாலும் இது ஆபரேஷனுக்குப் பிறகு நடக்கும். இதற்காகத்தான் நோயாளிகளின் உறவினர்களிடமிருந்து கையெழுத்து வாங்கி விடுவார்கள். மற்றபடி உறுப்புக்களை வெட்டி விடுவதன் காரணமாக நோயாளிகள் இறப்பது வெகு குறைவு. ஆங்கில மருத்துவம் மேற்கொள்ளக் கூடிய ஆபரேஷன்களில் மிகவும் விசேஷமானது விபத்துக்குள்ளாகி இருப்பவர்களுக்கு செய்யக்கூடியதாகும். நூறு பேர் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப் படுவார்களானால், பெரும்பாலும் அவ்வளவு பேருக்கும் ஆபரேஷன் அவசியம் என்று கூறி விடுவார்கள். உடனே மூளை ஆபரேஷன் செய்து, மீண்டும் வார்டுக்கு கொண்டு வந்து விடுவார்கள். அவர்கள் ஆபரேஷனிலிருந்து பிழைத்து வந்தால்தான் இந்த நிலை. ஆனால், பெரும்பாலும் ஆபரேஷனுக்குப் பிறகு அவசர சிகிச்சைப் பிரிவில்தான் அவர்கள் பல காலம் தங்கி இருக்க வேண்டும். பெரும்பாலும் ஓரளவு மூளையில் பாதிப்பின் காரணமாக நிரந்தரமாக அந்த நோயாளிகள் தொல்லைக்குள்ளாவார்கள். அந்த அளவுக்கு மோசமான நிலையை ஏற்படுத்தக் கூடியதுதான் இன்று இருக்கக்கூடிய ஆபரேஷன் மயக்க மருந்து.

Etomidate மருந்து ஹார்மோன் சுரப்பிகளையும் பாதிக்கும். குறிப்பாக, உயிர் காக்கக் கூடிய அட்ரீனலின் சுரப்பு நீரை சுரக்கக் கூடிய அட்ரீனல் உறுப்புக்கள் செயலிழக்கும். ஆபரேஷனுக்காக மருந்து செலுத்தப்பட்ட அந்த நிமிடத்திலிருந்து பல வருடங்களுக்கும் உயிரைக் காக்கக் கூடிய அட்ரீனல் உறுப்பு செயலிழந்திருக்கலாம். அவ்வளவு காலங்களிலும் எந்த நேரத்திலும் உயிருக்கு பாதகம் ஏற்படலாம்; அல்லது விபரீத விளைவுகள் உருவாகலாம். ஆபரேஷனுக்கு சில காலங்களுக்குப் பிறகு, ஏற்படக்கூடிய இந்த விபரீத விளைவுகளை பெரும்பாலும் பெண்களிடத்தே நாம் காண முடியும். அட்ரீனல் உறுப்பு

பாதிக்கப்படும் பொழுது, மற்ற ஹார்மோன்களும், அதனை சுரக்கும் உறுப்புக்களும் பாதிக்கப்படும்.

பெண்களுக்கே இந்த பாதிப்புக்கள் அதிகமாக இருப்பதைப் பார்க்க முடிகிறது. ஏனென்றால், அளவுக்கதிகமான ஹார்மோன் மாத்திரைகளை சாப்பிடுவது பெண்கள் தான். இதன் காரணமாகவே, அவர்களுடைய அட்ரீனல் உறுப்புக்கள் ஏற்கனவே செயலிழந்த நிலையிலும் அரைகுறையான இயக்கங்களுடன்தான் இருக்கின்றன. மாதவிடாய்க்காக சாப்பிடக்கூடிய மாத்திரைகள் estrigen - progesterone, மற்ற ஹார்மோன் சுரக்கும் உறுப்புக்களை பெருமளவு பாழடித்து விடும். பிறகு, கர்ப்ப காலத்தின் போது அவர்கள் சாப்பிடக்கூடிய மாத்திரைகள்; இறுதியாக பிரசவத்தின் போது கொடுக்கப்படும் ஹார்மோன்களுக்கு – இணையான oxytocin நரம்பு மருந்துகள் ஆகிய இவை அனைத்துமே பெண்களின் ஹார்மோன்களை செயலிழக்கச் செய்கின்றன. எனவே, ஒருக்காலும் இவர்களுக்கு சுகப்பிரசவம் ஆகாது. இதை அடிப்படையாகக் கொண்டு நாம் அறிய வேண்டிய உண்மைகள் உள்ளன.

பெண்கள் வயதுக்கு வந்த காலத்திலிருந்து மாதவிடாய் கோளாறுகள் என்று கூறி, ஹார்மோன்களை ஆங்கில மருத்துவர்கள் கொடுப்பார்கள். இது மிகப்பெரும் தவறு ஆகும். பொதுவாக, பூப்பெய்தும் காலத்திலிருந்து குறைந்தது 2 வருடங்கள் பூர்த்தியாகும் பொழுது தான் மாதப்போக்கு சீர்படும். அதுவரையில் 3 மாதங்களுக்கு ஒருமுறை, அல்லது 6 மாதங்களுக்கு ஒருமுறை என்றுதான் மாதப்போக்கு நிகழும். இன்னும், மாதப்போக்கு ஏற்பட்டால், பல குழந்தைகளுக்கு அந்த மாதப்போக்கு சீர்படும் வரையில் 15 நாள், 20 நாள் என்றும், இன்னும் 30 நாள் கூட தொடர்ச்சியாக இரத்தப் போக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும். இதைப் பார்த்து பயப்பட வேண்டிய அவசியமே இல்லை. இதுவும் இயற்கையாகும். ஒரு அணுவளவு கூட இதன் காரணமாக அக்குழந்தைகள் பாதிக்கப்படவே மாட்டார்கள். வெகு சீக்கிரம் அவர்களுடைய மாதப்போக்கினுடைய ஒருசில குளறுபடிகள் நீங்குவதற்காக ஏற்படக்கூடிய மாதப்போக்கே இவை.

நாளைய வாழ்க்கையில் அவர்களுடைய கர்ப்பப்பையின் இயங்கும் திறனும், சுமக்கும் சக்தியும் உறுதியான நிலையை அடைய வேண்டுவதற்காக வேண்டியே நிகழக்கூடிய நிகழ்ச்சியாகும் இது. ஆனால், ஆங்கில மருத்துவர்களிடம் குறிப்பாக மகப்பேறு மருத்துவத்தின் அறியாமையின் காரணமாக அவர்களுடைய பயமுறுத்தலினால் ஹார்மோன் மருந்துகளை உட்கொள்கிறார்கள். பிறகு, மாதப்போக்கு சரியாகி விட்டது என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் பல சந்தர்ப்பங்களில் முறையாக மாதப்போக்கு நிகழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு சில வைபவங்களின் காரணமாக மாதப்போக்கை தள்ளிப் போடுவதற்காக ஹார்மோன் மாத்திரைகளை பயன்படுத்துகிறார்கள். இவையும் பெண்களின் ஹார்மோன்களை, குறிப்பாக அட்ரீனலின் ஹார்மோன்களை பாதிக்கும்.

அட்ரீனல் ஹார்மோன்கள் பாதிக்கப்படும் பொழுது, மார்பு படபடப்பும், முன் கோபமும், பய உணர்வுகளும் அவர்களுடைய கேடான மனநிலையாக இருக்கும். இவை ஹார்மோன்களின் விளைவுகள். ஒவ்வொரு மாதப்போக்கின் முன்பும், மாதப்போக்கிற்குப் பிறகும், மாதப்போக்கின் போதும் இந்த மனநிலைகளால் அவர்கள் பல்வேறு நிலைகளில் பெரும் அவதிக்குள்ளாகி இருப்பார்கள். இவ்விதமாக ஒரு மாதத்தில் அவர்கள் படாத பாடுபடும் பொழுது, குறைந்த பட்சம் மாதத்தில் 10 நாட்கள் கூட அந்தப் பெண் குழந்தைகள் சீரான மனநிலையைக் கொண்டிருக்க மாட்டார்கள். இதுவே அவர்களுடைய வாழ்க்கை பூராவும் தொடரும். பெண் குழந்தைகளுக்கு இவ்விதமான மாதப்போக்குத் தொந்தரவுக்குக் காரணம், அவர்கள் தங்கள் தாய்மார்களின் கர்ப்பங்களில் வளர்ந்த காலத்தில் அந்தத் தாய்மார்களுக்குக் கொடுக்கப்பட்ட ஹார்மோன் மாத்திரைகளும், அவர்களுடைய தாய்மார்களுக்கு பிரசவத்தின் போது கொடுக்கப்பட்ட மயக்க மருந்துகளும், அறுவை சிகிச்சையும்தான் என்பதை இப்பொழுது நீங்கள் தெளிவாக அறிய வேண்டும்.

இன்று பெரும்பாலான குழந்தைகள் கண்ணாடி அணிந்திருக்கின்றன. இன்னும் கண் வலியுடனும், பெரும் பார்வைக் குறைபாடுகளுடனும் அவதியுறுகின்றன. இதற்குக் காரணமும் சிசேரியன் ஆபரேஷனின் போது கொடுக்கப்பட்ட ETOMIDATE மயக்க மருந்துகள்தாம். இப்பொழுது இவர்கள் தயாரித்து வைத்திருக்கக் கூடிய MOC ETOMIDATE என்ற புதிய மயக்க மருந்து இப்பொழுது இருக்கக்கூடிய மயக்க மருந்தைவிடக் கொடுமையானது என்பதை எந்த சந்தேகமும் இல்லாமல் உணர்ந்து கொள்ளுங்கள்.

எந்தவொரு ஹார்மோன் சுரப்பை, அதன் இயக்கத்தை மீறக்கூடிய ரசாயன ஆங்கில மருந்துகளை நீங்கள் உபயோகித்தாலும் சரி, நிச்சயமாக அது பெண்களாக இருந்தால் தைராய்டு சுரப்பியை பாதிக்கும்; ஆண்களாக இருந்தால் அவர்களுடைய prostate gland சுரப்பியை பாதிக்கும். இது prostate gland சுரப்பியின் புற்றுநோய்க்குக் காரணமாக அமையும். (சர்க்கரை நோயாளிகள் இன்சுலின் சுரக்க மருந்துகள் எடுக்கும்போது கல்லீரல், சிறுநீரக புற்றுநோய் ஏற்படுவதும் இவ்விதம்தான்) பெண்களாக இருக்கும் பட்சத்தில் கர்ப்பப்பை புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் ஆகியவற்றுக்கு வழிவகுக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும் பெண்கள் ஆங்கில மருத்துவத்தின் பக்கம் செல்லவே கூடாது; குறிப்பாக மகப்பேறு மருத்துவர்களை நெருங்கவே கூடாது என்பதற்கு இந்தக் கட்டுரை பெண்களுக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

சிசேரியன் ஆபரேஷன் என்ற பேச்சே பெண்களுடைய மனதில் இருக்கக் கூடாது. அனைத்துமே சுகப்பிரசவமாகத்தான் அமைய வேண்டும்; அதுவும் வீட்டிலேயே நிகழ வேண்டும்.

சிசேரியன் ஆபரேஷன் என்ற கேடுகளிலிருந்து நீங்களும், உங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் உயர் இரத்த அழுத்தம், ஹார்மோன் கேடுகள், தைராய்டு சுரப்பின் கேடுகள், புற்றுநோய்கள், கண்பார்வைக் கோளாறுகள், இன்னும் எண்ணற்ற தீமைகளிலிருந்து இன்று நீங்கள் உங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய கட்டாயச் சூழ்நிலையும், இக்கட்டான காலகட்டமும் ஆகும் இது.

# 8) செயற்கை கருவூட்டல் ஒரு கரும வினை!

ஆண் குழந்தை, பெண் குழந்தை எவ்வாறு உருவாகிறது?

செயற்கை கருவூட்டல் என்பது ஆணணுவையும், பெண்ணணுவையும் கர்ப்பப்பைக்கு வெளியே இணைய வைத்து, பிறகு பெண்ணின் கர்ப்பப்பைக்குள் வைத்து கருவை சிசுவாக வளரச் செய்வது ஆகும். இதனை டெஸ்ட் டியூப் கருவூட்டல் என்றும் அலங்காரமாகக் கூறுவார்கள்.

செயற்கையாக கருவூட்டலில் இன்னொரு முறையும் உண்டு. ஆணணுவை எடுத்து நேரடியாக சினை முட்டை கர்ப்பப்பைக்குள் வரக்கூடிய அந்தக் குழாயினுள் செலுத்தி கருவுண்டாக்குவது. இந்த இரண்டு வகைகளுமே கேடானது. தாய்க்கும், சேய்க்கும் இவ்விருவருக்குமே கேடானது.

சினைப்பையிலிருந்து முட்டைக் கரு உற்பத்தியாக வேண்டும். அந்த முட்டைக் கருவானது ஆணணுவை ஈர்க்கக்கூடிய சக்தி வாய்ந்ததாகவும், பின்னர் அதனுடன் இணைந்து சிசுவாக வளரக்கூடிய தன்மை படைத்ததாகவும் இருக்க வேண்டும். இவ்வகையான தன்மையைக் கருமுட்டை கொண்டிருக்குமானால் கர்ப்பப்பையின் வாயினுள் செலுத்தப்பட்ட விந்துவிலிருந்து ஆண் அணுவை நிச்சயமாக அந்தப் பெண் கருமுட்டை கிரகிக்கும். எனவே, கர்ப்பப்பையின் வாயிலிருந்து ஆண் அணுக்களானது கிரகிக்கப்பட்டு கர்ப்பப்பையினுள் ஈர்க்கப்படுகிறது. பின்னர், அங்கிருந்து ஆண் அணுக்கள் மேல் நோக்கி நகர்ந்து சினைப்பைக் குழாயினுள் நுழைகின்றன. அங்கு சினைப்பைக் குழாயினுள் இருக்கக்கூடிய கருமுட்டையை நோக்கி நகர்கின்றன. உடலுறவுக்குப் பின் இரண்டு நாட்களுக்குள் இது நிகழ வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் கருமுட்டையும், ஆண் அணுக்களும் திறன் குறைந்து செயலற்று விடுகின்றன. சினைப்பைக் குழாயினுள் நுழையக்கூடிய ஆண் அணுக்களில் ஒரேயொரு ஆண் அணு மட்டும்தான் அந்தக் குறிப்பிட்ட கருமுட்டைக்கு ஏதுவாக இருக்கக் கூடியதாகும். அந்த அணுவை தேர்வு செய்வது கருமுட்டையினுடைய வேலை. தன் பெண் கருமுட்டையை அறிந்து, தேர்வு செய்து அதனைக் கருத்தரிக்கச் செய்வது ஆண் அணுவினுடைய திறனைப் பொறுத்ததாகவும் இருக்கிறது.

இவ்விரண்டு அணுக்களின் திறனில் எது மிகைக்கிறதோ அந்த வகையிலான குழந்தை உருவாக ஆரம்பிக்கிறது. பெண் கருமுட்டையானது தனக்குரிய அந்த ஆண் அணுவைத் தேர்வு செய்து ஈர்க்குமானால் அது பெண் குழந்தையாக உருவாக ஆரம்பிக்கிறது. மாறாக, ஆண் அணு தன் பெண் கருமுட்டையை அறிந்து முந்துமானால் அதன் காரணமாகக் கருவுறும் பொழுது அது ஆண் குழந்தையாக

உருவாக ஆரம்பிக்கிறது. இவ்விரண்டில் எது நடந்தாலும் அது இயற்கையாக நிகழும் நிகழ்ச்சியாகும். இதுவே இயற்கையான கருத்தரிப்பாகும்.

இப்பொழுது செயற்கை கருத்தரிப்பைப் பாருங்கள். ஆண் அணுவிலிருந்து ஏதோ ஒன்றை தாறுமாறாகப் பொறுக்கி எடுக்கிறார்கள். அதில் ஒன்று மட்டும் இருப்பதில்லை. இன்னும் பல ஆண் அணுக்களும் சேர்ந்தே இருக்கின்றன. இந்த மகப்பேறு மருத்துவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், ஒன்றிரண்டு ஆண் அணுக்கள் அதிகமாக இருந்தாலும் ஒன்று மட்டும்தானே கருத்தரிக்கப் போகிறது என்று. அவ்வாறல்ல, இயற்கையாக கருத்தரித்தல் நிகழ்ந்தால் மட்டும்தான் அது சாத்தியம்.

அவ்வாறு இல்லையென்றால் நிச்சயமாக ஒரேயொரு அணுவை மட்டும்தான் சினைப்பைக் குழாய்க்குள் செலுத்த வேண்டும். இல்லையெனில் ஒன்றுக்கு மேற்பட்ட அனைத்து ஆண் அணுக்களுமே ஒரு கருமுட்டையை பதம் பார்த்து விடும். இது ஒரு கெட்ட செயல். ஒருவனுக்கு ஒருத்திதான் என்ற அந்த ஒழுக்கத்திற்குக் கேடானது, இந்த செயற்கை மூலமாக கருவூட்டும் முறை. பெரும்பாலும் மகப்பேறு மருத்துவ நிபுணர்கள் இவ்விதமாக பெருமைப்பட்டுக் கொள்வார்கள்; “ஒரு குழந்தை கூடப் பெற முடியாத தம்பதியினருக்கு ஒரே பிரசவத்தில் எத்தனைக் குழந்தைகளைக் கொடுத்து விட்டோம் பார்த்தீர்களா? இதுதான் ஆங்கில மருத்துவத்தின் மகத்துவம்” என்று. அவர்கள் அறிய மாட்டார்கள்.

இது ஒழுக்கக் கேடானது மட்டுமல்ல, இன்னும் அந்தக் குழந்தைகள் மனதளவிலும், உடல் அளவிலும் பலவீனமானவை என்று. அவர்கள் வாழ்க்கையில் மனமும், உடலும் ஒருமுகப்பட்டவர்களாக செயல்பட முடியாது. மனதின் போதாத் தன்மைக்கும், உடல்நலனில் நிலையில்லாத தன்மைக்கும் இடையே மிகுந்த சிரமத்துடன்தான் அவர்கள் வாழ நேரிடும். ஆங்கில மருத்துவத்திற்கு மனதைப் பற்றி எந்தவொரு உண்மையும் புரியாது. அந்த மருத்துவத்திற்கும் மனதிற்கும் சம்பந்தமேயில்லை. மூக்கும் முழியுமாக குழந்தை பிறந்து விட்டால் போதும், குழந்தைப் பேற்றைக் கொடுத்து விட்டோம் என்பார்கள்.

சினைப்பையினுள் செலுத்தப்படும் ஆண் அணுவானது பெண் கருமுட்டை தானாக தன் இணையை ஈர்த்து கருத்தரிக்குமே அதுபோன்றதல்ல. அதைப் போன்று இயற்கையாக கர்ப்பப்பை வாயினுள் செலுத்தப்பட்ட கணக்கில்லாத ஆண் அணுக்களிலிருந்து தகுந்த வீரியமுடைய அணுவானது தன்னுடைய கருமுட்டையை அறிந்து கர்ப்பப்பை மூலமாக நீந்திச் சென்று சினைப்பைக் குழாயில் நுழைந்து கருமுட்டையை கருத்தரிக்கச் செய்யுமே அந்த அளவுக்கு நேர்த்தியான ஆண் குழந்தையாக உருவாகுமே அதைப் போன்றதுமல்ல, செயற்கை கருவூட்டல். இன்னும் சொல்லப்போனால் செயற்கை கருவூட்டல் மூலமாக பிறக்கும் குழந்தை பெற்றோர் இருவருடைய இயற்கைக்குமே பொருந்தாததும்,

புறம்பானதுமாகத்தான் இருக்கும். தாய்மார்களே நீங்கள் அறிய வேண்டிய சத்தியமான உண்மை. இதுமட்டுமல்ல, குழந்தையின் உள்ளுறுப்புக்களும் பலவீனமாக இருக்கும். அவை ஒன்றுக்கொன்று இணைந்து இயங்கக்கூடிய ஒத்துழைப்பிலும் பெரும்பாலும் தன்னிச்சையாகவே இருக்கும். இதனை ஆங்கில மருத்துவத்தால் பிரித்தறிந்து பார்க்க முடியாது. ஏதோ ஒரு குழந்தை வளர்ந்து கொண்டிருக்கிறது அவ்வளவுதான். அந்தக் குழந்தையே வளர்ந்து வரும் பொழுது, தன்னுடைய கஷ்டநஷ்டங்களை உணர்ந்து தெரியப்படுத்தும் அளவுக்கும் தெளிவு பெற்றதாக இருக்காது. இது எவ்வளவு பெரிய கொடுமை?

தாய்மார்களே, நீங்கள் கொஞ்சம் பொறுமையோடு இருப்பீர்களானால், இறைவன் புறத்திலிருந்து இயற்கையாக உங்களுக்கு நிகழக்கூடிய நிகழ்வு, பெண்மைக்குரிய பாக்கியம் நிகழ்ந்தே தீரும் என்பதை எவ்வாறு நம்பிக்கை கொள்ளத் தவறினீர்கள்? நீங்கள் பிற்காலத்தில் எந்தவிதமான இன்னலுக்கும் ஆளாகக் கூடாது. அதுவும் குழந்தையின் காரணமாக அவர்களுடைய உடல் மனநிலை சுகவீனத்தின் காரணமாக ஏற்பட இருக்கக்கூடிய துன்பம் அறவே கூடாது என்று நீங்கள் மனதார விரும்புவீர்களானால், இந்த செயற்கை கருவூட்டல் அல்லது, டெஸ்ட் டியூப் மூலமாக கருவூட்டல் போன்ற அசிங்கங்களின் பால் நீங்கள் ஈடுபட வேண்டாம். அறிந்தே ஆங்கிலேய மகப்பேறு மருத்துவம் என்ற பாழும் கிணற்றுக்குள் விழ வேண்டாம்.

செயற்கை கருவூட்டல் மூலமாகப் பிறக்கும் குழந்தைகளுக்கு அங்கஹீனம் ஏற்பட்டு அது வெளிப்படையாகவும் தெரியலாம். இந்த அங்கஹீனம் உங்களுக்குள்ளும் உள்ளுறுப்புகளிலும் நிகழலாம். அல்லது, உள்ளுறுப்புக்கள் எல்லாம் வெளிப்பார்வைக்கு நன்றாக இருக்கும். ஆனால் அவற்றின் இயற்கைத் தன்மை பாழ்பட்டுப் போயிருக்கலாம். அவை ஒன்றுக்கொன்று இணங்கி செயல்படாத சூழ்நிலையை ஒருபோதும் மகப்பேறு நிபுணர்களால் அறியவும் முடியாது; மேலும், அறியாத ஒன்றுக்கு அவர்கள் வைத்தியம் செய்வார்கள். அந்த வைத்தியத்தின் காரணமாக மேலும் கொடுமையான விளைவுகள் பல தலைதூக்கும். இன்னும் தாய் தந்தையின் வியாதிகள் அனைத்தும் அதே விதமாகவோ, அல்லது மாறுபட்ட விதமாகவோ அந்தக் குழந்தைகளிடத்தே நிலைத்து விடும்.

குழந்தைப் பேறு என்பது இறைவன் அளிக்கும் பாக்கியம். அதனை இந்த மகப்பேறு மருத்துவர்கள் அளிப்பார்கள் என்று கடவுளுக்கே இணையாகக் கருதி நீங்கள் அவசரப்படும் பொழுது மேலே சொன்ன உண்மைகளை சற்று சிந்தித்துப் பாருங்கள். இறைவனுடைய கருணைக்காக, அவன் புறமிருந்து கிடைக்கக்கூடிய ஒரு நல்லருளுக்காக, ஒரு பேரருட்கொடைக்காக நிச்சயமாக நீங்கள் எவ்வளவு காலம் காத்திருந்தாலும் தகும் என்பது புரியும். அதுவே சாலச் சிறந்தது என்ற சத்தியத்தின் மீதும் நீங்கள் பொறுமையைக் கடைப்பிடிப்பீர்கள்.

# 9) மருந்து, மாத்திரை, மருத்துவமனை - இவைகளுக்கு செல்லாமல் சுகப்பிரசவம் வேண்டுமா?

வாசகர்களே, இது உங்களுக்கு ஒரு மிக முக்கியமான உயிர்காக்கும் செய்தியாகும். இந்தச் செய்தி உங்கள் உயிருக்கு உயிரான குழந்தைகளைப் பற்றியதாகும். ஆங்கில மருத்துவத்தில் உங்கள் குழந்தைகள் பிரசவமாகும் பொழுது அந்த மகப்பேறு மருத்துவர்களின் அறிவு கெட்ட கைகளால் உருவாக்கக்கூடிய வினைகள் உங்கள் குழந்தையின் வாழ்நாள் முழுமைக்கும் பாதிக்கும் என்பதை அறிய வேண்டும்.

இப்பொழுது Stem cell therapy ஸ்டெம் செல் தெரபி என்று இம்மருத்துவம் கூறக்கூடிய ஒரு கேலிக் கூத்துக்கு ஸ்டெம் செல்களை எடுக்கக் கூடிய மிக முக்கியமான உறுப்பு தாயின் கர்ப்பப்பையுடன் இணைந்திருக்கும் குழந்தையின் தொப்புள் கொடியாகும். மகப்பேறு மருத்துவம் குழந்தையின் தொப்புள் கொடியைப் பற்றி எந்த உண்மையும் தெரியாத மருத்துவமாகும்.

தொப்புள் கொடியின் இரத்தத்தில்தான் ஸ்டெம் செல்கள்..

வாசகர்களே, நீங்கள் இப்போது மகப்பேறு மருத்துவர்கள் ஆக்கப்பட வேண்டும் என்பது இன்றைய விதி. எனவே, நீங்கள் விரும்புகிறீர்களோ, அல்லது விரும்பவில்லையோ அறிவிக்கப்பட வேண்டியதைத் தெளிவாக அறிவிக்க வேண்டியது மட்டுமே கடமையாக உணர்ந்து தெரிவிக்கின்றோம்.

குழந்தை, வயிற்றிலிருந்து சுகமான முறையில் இயற்கையாகத்தான் வெளியேற வேண்டும். அவ்விதமாக குழந்தை பிரசவிக்கும் பொழுது தாய்க்கு இயற்கையாக வலி இருக்கக்கூடாது. குழந்தை பிரசவித்து முடியும் வரையில் அது எந்த வைத்தியத்தை மேற்கொண்டாலும் சரி, பிரசவ வலி என்ற ஒன்று அந்தத் தாய் உணரக்கூடாது. அழகான பிரசவ உணர்வாக மட்டுமே இருக்க வேண்டும். பிரசவத்திற்குப் பிறகு பால் 'மள மள'வென்று சுரக்க வேண்டும். பிரசவம் முடிந்ததும் முன்பு எப்போதையும்விட சுகமாகவும், சுறுசுறுப்பாகவும் தாய் இயங்க வேண்டும். பிரசவத்திற்குப் பின் முதுகு வலி, இடுப்பு வலி, கை கால்கள் அசதி போன்றவை இருக்கக்கூடாது. ஒரு சில மாதங்கள் கழித்து தாய் உடல் குண்டாகுதல் கூடாது. இதனை நிகழ்த்தக்கூடிய ஒரு மருத்துவம் தானா ஆங்கில மருத்துவம்? சத்தியமாக இல்லை. இது ஒரு கொடுமையான மருத்துவம்; காட்டுமிராண்டித்தனமே நிரம்பியிருக்கும், பிரசவம் முடியும் வரையில்!

பிரசவம் முறையாக நடப்பதற்கு உதவுவதற்கு பதிலாக ஆங்கில மருத்துவத்தின்


டாக்டர். ஃபஸ்லுூர் ரஹ்மான்,
MBBS., MD., DV. Ph.D.

மகப்பேறு மருத்துவம் ஆக்ஸிடோஸின் Oxytocin என்ற ஊசியை வலியை உருவாக்குவதற்காகப் போடுவார்கள். இது மடத்தனமா? அல்லது அறிவார்ந்ததா? சிந்தித்து செயல்படுங்கள்; தேர்வு செய்யுங்கள். உங்கள் குழந்தை எப்படி பிறக்க வேண்டும் என்பதை இனி நீங்கள் முடிவு செய்யுங்கள்.

அடுத்து, மகப்பேறு மருத்துவத்தின் காட்டுமிராண்டித்தனம் கால்கள் இரண்டையும் அகற்றி வைத்து படுக்கச் செய்வது. இந்த நிலையில் குழந்தை முறையாகக் கீழிறங்காது. அவர்கள் சாதாரண நிலையில் சுகமானதோ, அந்த நிலையில்தான் படுத்திருக்க வேண்டும். குழந்தை வெளியேறும் பொழுது இயற்கையாக எந்த அளவுக்கு கால்கள் அகல வேண்டுமோ, அது தானாக அகலும். ஆனால், மகப்பேறு மருத்துவமனைக்கு நீங்கள் சென்றதும் கால்களை அகற்றிப் பிடிப்பதற்காக விசேஷமான கட்டிலையே வைத்திருப்பார்கள். இரண்டு கால்களையும் அகற்றி வைத்து, கட்டி விடுவார்கள். இனி சுகப் பிரசவம் நடந்த மாதிரிதான்.

அடுத்து, பிறப்பு உறுப்பை கீழிருந்து கத்திரிக்கோலால் 3, அல்லது 4 அங்குலம் நீளத்திற்கு வெட்டி விடுவார்கள். எனவே, சுகமான கர்ப்பப்பையின் இயக்கம் இனி இருக்காது. சுகமான கர்ப்பப்பையின் இயக்கமானது, கர்ப்பப்பையின் உச்சியில் ஆரம்பித்து பிறப்புறுப்பின் வெளிப்புற வாய் வரையில் அதனுடைய இயங்கும் அலை உணர்வுகள் பரவ வேண்டும். கர்ப்பப்பையின் உச்சியில் உருவாகக்கூடிய ஒரு சுருங்கி விரியும் அலையுணர்வு கர்ப்பப்பையின் வெளிப்புற வாய் வரையில் சுகமாக விரியும் தன்மையைக் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. மகப்பேறு மருத்துவர்கள் வாயின் வெளிப்புறத்தை கத்திரிக்கோலால் கிழித்துத் துண்டாடும் பொழுது கர்ப்பப்பை சுருங்கி, விரியும் தன்மை பாழடிக்கப் படுகின்றது. பெரும் பிரயத்தனத்தோடு, பெரும் வலியோடு கர்ப்பப்பையின் வாயிலிருந்து குழந்தை வெளியேறாமல் தாய் துடித்துக் கொண்டிருப்பாள். இதற்குக் காரணம், பிறப்புறுப்பின் வாயைக் கீறியதுதான். சுருங்கி, விரியும் கர்ப்பப்பையின் உணர்வலைகள் பிறப்புறுப்பின் வாயை அடைய விடாமல் கீறப்பட்ட பகுதி வரையில் வந்து அதற்கு மேல் சென்று விரிவடையச் செய்வதற்கு வழியில்லாமல் நின்று விடுகிறது. இந்த சுருங்கி, விரியும் உணர்வலைகள் இறுதி வாய்ப்பகுதி வரையில் பரவாவதனால் பின்புறமாக அதிர்வலைகள் பரவுகின்றன. இப்பொழுது கர்ப்பப்பையின் மேல்பாகத்திலிருந்து கீழிறங்கும். உணர்வலைகளும், பிறப்புறுப்பின் வாய் கீறப்பட்டு விட்டதன் காரணமாக எதிர் திசையில் கீழிருந்து மேலாக திரும்பும் உணர்வலைகளும் பிரசவ உணர்வை பெரும் வலிகளாக மாற்றி விடுகின்றன.

எனவே, குழந்தையானது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலாக இறங்குவது கர்ப்பப்பையின் வாய் அளவில் வந்து நின்று விடுகின்றது; அல்லது பிறப்புறுப்பின் வாய் அளவில் வந்து நின்று விடுகின்றது; இப்பொழுது கூட பொறுமையாக இருக்க மாட்டார்கள். நரம்பு ஊசிகளையும் எடுக்க மாட்டார்கள். போதாததற்கு சிலருக்கு இரத்தத்தையும் ஏற்றிக் கொண்டிருப்பார்கள். என்னென்ன அநியாயம் செய்ய

வேண்டிமோ அவ்வளவும் நடந்து கொண்டிருக்கும். குழந்தையானது பிறப்புறுப்பின் வாயில் மேலும் இறங்காமல் நின்று விட்டால், Foreceps எனக் கூடிய ஆயுதத்தை குழந்தையின் இரு காது புறமாகவும் பிறப்புறுப்பின் வாயின் வழியாக தாய்க்கு எந்த அளவுக்கு வேதனைக் கொடுக்க முடியுமோ, அந்த அளவுக்கு வேதனையைக் கொண்டு நுழைத்து, குழந்தையின் தலையை இறுக்கமாக நசுக்கிப் பிடித்து தலையை வெளியே இழுப்பார்கள்.

"இதைப் போன்ற ஒரு கொடூரத் தனத்தை பிரசவம் என்ற அழகான இயற்கையோடு ஒப்பிட்டால் அதனை ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்குத்தான் புரியும், பிரசவ வார்டுகளில் நடப்பது காட்டுமிராண்டித்தனத்தின் உச்சக்கட்டம் என்று". இவர்கள் காடுகளில் வாழும் மனிதர்களை 'காட்டு மனிதன்' என்று கூறுவார்கள். அவர்களில் ஒருவருக்குக் கூட சுகப்பிரசவம் அல்லாத ஒரு பிரசவம் நடைபெறுவதில்லை. பிரசவ வலியே இல்லாமல் அழகான உணர்வுடன் பெற்றுக் கொள்கிறார்கள்.

இவ்விதமாகவே ஆயுதம் போட்டு குழந்தையை வெளியில் எடுக்கும் பொழுது அந்தக் குழந்தையின் மூளை சிதறுகிறது. அந்தக் குழந்தையினுடைய அறியும் திறன் குறைகிறது. இப்பொழுது பிறக்கும் பெரும்பாலான குழந்தைகள் ஆடிஸம் Autism எனும் மூளை வளர்ச்சிக் குறைவு நோயால் பாதிக்கப்படுவதற்குக் காரணம் இவ்வகையிலான பிரசவமே ஆகும் (இதற்கு தடுப்பூசிகளும் ஒரு முக்கிய காரணி). இதற்கெல்லாம் நிச்சயமாக ஆங்கில மருத்துவத்தின் மகப்பேறு மருத்துவத் துறை முழுமையாகப் பொறுப்பேற்க வேண்டும். ஏனென்றால், இவர்கள் தான் தங்கள் தவறான மருத்துவத்தின் பக்கம் பொதுமக்களை நயவஞ்சகமாக விளம்பரங்களைக் கொண்டு இழுத்தவர்கள். 10 மாதங்களும் தாயையும், சேயையும் நாங்கள் தான் காப்பாற்றுவோம்; அப்பொழுது தான் பிரசவமும் பார்ப்போம்; ஊசிகளையும் போட்டுக் கொள்ள வேண்டும்; மருந்துகளையும் வேளாவேளைக்கு சாப்பிட வேண்டும் என்று ஒரு தாயின் இறுதி வேதனைக்கு பிரசவ தருணத்தின் கொடுமைக்கு ஆளாக்கியது, இம்மருத்துவத் துறையின் மருந்துகளும், அவற்றின் கேடான பக்கவிளைவுகளும்தான். எனவே, இவர்கள் முழுமையாக பொறுப்பேற்க வேண்டும்.

அடுத்து, பிறப்பு உறுப்பின் வாயில் வந்து நிற்காமல் அதற்கும் மேலாக கர்ப்பப்பையின் வாயின் அளவிலேயே குழந்தையின் இயக்கம் நின்று விடுமானால், உடனடியாக அந்தப் பெண்ணுக்கு உரியவரிடம் கையெழுத்து வாங்குவார்கள். ஆபரேஷன் செய்தே ஆக வேண்டும். அப்பொழுதுதான் தாயையும், சேயையும் காப்பாற்ற முடியும் என்று அவசரப்படுத்தி கையெழுத்து வாங்குவார்கள். அப்படி என்ன கையெழுத்து வாங்க இருக்கிறது? தாயையும், சேயையும் காப்பாற்றத் தானே உடனடியான ஆபரேஷன் என்றீர்கள்? பிறகு, ஏன் கையெழுத்து? அந்தக் கையெழுத்து எதற்கு என்றால், யார் அந்தத் தாய்க்கு

உரியவரோ, அவர் இவ்விதமாக மகப்பேறு மருத்துவருக்கு ஏழுதிக் கொடுக்கிறார்; என் மனைவியின் வயிற்றை நீங்கள் ஆபரேஷன் செய்யலாம்; அதன் பொழுது என் மனைவியோ, அல்லது என் குழந்தையோ இறந்து விட்டால், அல்லது இரண்டு பேருமே கூட இறந்து விட்டாலும், அதற்கு ஆபரேஷன் செய்த நீங்கள் பொறுப்பல்ல; உங்களை ஆபரேஷன் செய்ய அனுமதித்து விட்டு ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியே நின்று கொண்டிருந்த நான்தான் பொறுப்பு. ஆனால், இவற்றையெல்லாம் மீறி தாயோ, குழந்தையோ அல்லது இருவருமே பிழைத்துக் கொண்டால் அதற்கு நீங்கள்தான் முழுமையான பொறுப்பு. உங்களுக்கே எல்லாப் புகழும்" என்று கையெழுத்திட வேண்டும். என்ன அழகான மருத்துவம், மருத்துவர்கள் பார்த்தீர்களா?

இப்பொழுதும் அத்தாட்சிகள் நிறைய சுற்றிலுமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. ஆட்டோவில் உட்கார்ந்து சென்று கொண்டிருக்கும் பொழுது தாய் பிரசவித்திருக்கிறார். இது எப்படி சாத்தியம் என்பதை சிந்தித்துப் பாருங்கள். கால்கள் ஒடுக்கப்பட்டிருக்கின்றன, உட்கார்ந்திருப்பதன் காரணமாக பிரசவ வாய் மூடப்பட்டு இறுக்கமான நிலையில் இருக்கிறது. எப்படி குழந்தை பிறக்கிறது? இதுவல்லவா சுகப்பிரசவம்? அந்த குழந்தை சுகமாக பிறந்து கீழே விழுந்து அதன் காயத்தின் காரணமாக இறந்து விட்டிருக்கிறது. இதற்குக் காரணமும் ஆங்கில மருத்துவம்தான். இப்படியும் குழந்தை பிறக்கும் என்று ஆங்கில மருத்துவம் அறியாது. எனவே, அத்தகைய டாக்டர்களிடம் சென்று வரும் தாய்மார்களும் அறிய மாட்டார்கள். அந்த தாய் மட்டும் இப்படியும் குழந்தை பிறக்கும் என்று அறிந்திருந்தால்; அந்தக் குழந்தை பிறக்கும் பொழுது சுகமான உணர்வு இருக்குமே தவிர, வலியே இருக்காது என்பதையும் அறிந்திருப்பார்களேயானால், அந்தக் குழந்தையை அறியாத நிலையில் தன் கால்களுக்கிடையே இருந்து கீழே விழுந்து விடுவதைப் பற்றி எச்சரிக்கையாக இருந்திருப்பார்கள்; அந்தப் பச்சிளங் குழந்தையும் இறந்திருக்காது.

ஆங்கில மருத்துவத்தில் மகப்பேறு மருத்துவம் ஆதிவாசி மருத்துவத்தைக் கூட நெருங்க முடியாத அளவுக்கு கேடுகளும், கெட்ட அறிவும் மிஞ்சியதாக இருக்கிறது. ரயிலில் குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள்; விமானத்தில் குழந்தை பிறக்கிறது; பாத்ரூமுக்குச் சென்று குழந்தையைப் பெற்றெடுத்துக் கொண்டு வருகிறார்கள். அவ்வளவு சுகமான பாத்ரூம் போவதைப் போன்ற உணர்வுதான் பிரசவ உணர்வு என்பதை இப்பொழுதாவது ஆங்கில மருத்துவம் அறியுமா? நிச்சயமாக அறியாது. அவர்கள் கண்கள் குருடாக இல்லை; மாறாக, அவர்களுடைய இருதயங்கள் தான் விளங்காத தன்மை உடையதாக இருக்கின்றன என்பது தான் சத்தியம்.

ஆங்கில மருத்துவத்தின் மகப்பேறு மருத்துவத் துறைக்கு குழந்தையை வெளியே எடுத்ததும் அதன் தொப்புள் கொடியை என்ன செய்வது என்று தெரியாது.

குழந்தையை வெளியே எடுத்ததும் தொப்புள் கொடி தேவையில்லை என்று நினைக்கிறார்கள். உடனேயே தொப்புள் கொடியை அறுத்து விடுவார்கள். தாயையும், சேயையும் பிரித்து விடுவார்கள். தொப்புள் கொடியில் இருந்து குழந்தைக்கும், குழந்தையிடமிருந்து தாயின் கர்ப்பப்பைக்கும் இன்னும் இரத்த ஓட்டம் நடந்து கொண்டிருக்கிறது.

குழந்தை பிறந்ததும் தான் மிக முக்கியமான, மிக உறுதியான, குழந்தைக்குத் தேவையான நன்மைக்குரிய மாற்றத்தை நிகழ்த்தும் ஒரு செயல் நிகழ இருக்கிறது. அதாவது, குழந்தை வெளியே வந்து விட்டது; தொப்புள் கொடியானது கர்ப்பப்பையோடு இணைந்திருக்கிறது. வெளியிலே வந்து விட்ட குழந்தைக்கு, ஒரே பிடிமானம் அந்தத் தொப்புள் கொடிதான். அந்தக் குழந்தையினுடைய மனதின் தன்மை கர்ப்பப்பையின் தன்மையிலிருந்து வெளியுலகின் தன்மையுடன் இயல்படையும் வரையில், சிறிது நேரமாவது கர்ப்பப்பையினுடைய ஆதரவு தரக்கூடிய தொப்புள் கொடி குழந்தையோடு இணைந்திருக்க வேண்டும். இது குழந்தையின் நாளைய மன வலிமைக்கு மிக மிக முக்கியமானதாகும். ஆனால், இவர்களோ அதனை வெட்டி விடுகிறார்கள். அந்த நிமிடத்தில் தான் அந்தக் குழந்தையினுடைய மனதின் உறுதிக்கு பலத்த அடி விழுகிறது. மிகவும் பயந்த குழந்தையாக அது வளர ஆரம்பிக்கிறது. எந்த ஒரு புதிய சூழ்நிலைக்கும் விஷயத்திற்கும் அந்தக் குழந்தை வளர்ச்சியடையும் பொழுது, மிகுந்த தயக்கத்தைக் கொண்டே செயல்பட்டு வரும்.

அடுத்து, அந்தத் தொப்புள் கொடியானது தன்னகத்தே கொண்டிருக்கக்கூடிய இரத்தத்தில் ஸ்டெம் செல்கள் நிரப்பமாகக் கொண்டிருக்கின்றன. இந்த ஸ்டெம் செல்கள் தொப்புள் கொடியிலிருந்து படிப்படியாக முழுவதுமாக பிறந்த குழந்தையின் இரத்தத்தை அடைகின்றன. இந்த இரத்தம் முழுமையுமாக தொப்புள் கொடியிலிருந்து குழந்தையின் இரத்தத்தில் இறங்கி வடிந்து விடும் வரையில் கர்ப்பப்பையின் உட்புறத்திலிருந்து தொப்புள் கொடி விலகாது. எனவே பொறுத்திருக்க வேண்டும். குழந்தை பிறந்ததும் குறைந்த பட்சம் 15 நிமிடங்களிலிருந்து, 1 மணி நேரத்திற்குள்ளாக தொப்புள் கொடியில் உள்ள இரத்தம் முழுமையுமாக வடிந்து, குழந்தையின் இரத்தத்தோடு கலந்து விடும். பின்னர்தான் தொப்புள் கொடியானது கர்ப்பப்பையை விட்டும் விலகும். குழந்தையின் தொப்புள் கொடியின் ஸ்டெம் செல்கள் அனைத்தும் குழந்தையின் இரத்தத்தோடு கலக்கும் பொழுது அந்தக் குழந்தை வாழ்நாள் முழுமைக்கும் எந்தவிதமான நாட்பட்ட நோய்களாலும் பாதிக்கப்படாது.

மேலும், சிறுநீரகங்கள் செயலிழப்பு, மூளைச் செயலிழப்பு, கல்லீரல் செயலிழப்பு, பான்க்ரியாஸ் செயலிழப்பு போன்ற உறுப்புக்களின் செயலிழப்பின் காரணமாகவும் ஒருபோதும் பாதிக்கப்படாமல் அந்தக் குழந்தைகள் வளரும். காரணம், உயிருக்கும், உயிரின் சேதத்திற்கும், உறுப்புக்களின் சேதத்திற்கும் உடனடியான உயிரோட்டத்தையும், மீண்டும் உறுதியான வளர்ச்சியையும், உடல் – மன

ஆரோக்கியத்தையும் ஈடு செய்யக்கூடிய ஸ்டெம் செல்கள், அதனோடு கலந்துள்ள தொப்புள் கொடி இரத்தம் முழுமையாக குழந்தையுடன் சேர்ந்து விட்டதன் காரணமாக இவ்விதமான பாதங்களிலிருந்து அந்தக் குழந்தை தன் வாழ்நாள் முழுவதும் பாதுகாக்கப்படும்.

எனவே, குழந்தை பிறந்ததும் தொப்புள் கொடியை அறுக்கும் காட்டுமிராண்டித் தனத்தை மகப்பேறு மருத்துவம் இனியும் நிகழ்த்தக் கூடாது. புரியவில்லையென்றால், ஏதேனும் காட்டுக்குப் போய் ஆதிவாசிகளிடமாவது பிரசவம் எப்படி பார்ப்பது என கற்றுக்கொண்டு வந்து, பிறகு தொழில் செய்ய வேண்டும். இதையெல்லாம் அறியாமல் மகப்பேறு மருத்துவர்கள் என்று சிறப்பு மருத்துவப் பட்டம் படித்தவர்கள் என்று கூறிக்கொண்டு திரியக் கூடிய ஆங்கில மருத்துவம் வெட்கித்தலை குனிய வேண்டும். ஆங்கில மருத்துவர்களே, நீங்கள் செய்யக்கூடிய கெட்ட காரியத்தை அதுவும் குழந்தைகளிடத்தே செய்யக்கூடிய இந்தக் கொடூரத்தை சற்று சிந்தித்துப் பாருங்கள். இப்பொழுது ஸ்டெம் செல்கள் என்று கூறுகிறீர்களே, உறுப்புக்களையெல்லாம் பாழடித்த பிறகு தொப்புள் கொடியிலிருந்து ஸ்டெம் செல்களை எடுத்து காப்பாற்றப் போகிறோம் என்று கூறுகிறீர்களே, இந்தக் கோமாளித்தனம் தேவைதானா? நீங்கள் கோமாளிகளா? அல்லது அறிவுள்ளவர்களா? அல்லது அறியாமையின் உச்சக்கட்டத்தில் அகம்பாவம் கொண்டு திரிபவர்களா? நீங்கள் யார்? குழந்தையின் தொப்புள் கொடியில் இருக்கக்கூடிய அந்த ஸ்டெம் செல்கள் குழந்தைக்கு முழுவதுமாக வடிந்து, தானாக தொப்புள் கொடி கழன்று வெளியே வந்து விழும் வரையில் அதனை வெட்டாதீர்கள்; குழந்தையை குற்றுயிராக இருக்கும் படி பிரித்து விடாதீர்கள்.

தொப்புள் கொடி வெளியில் வருவது பிரசவத்தினுடைய இரண்டாவது பகுதியாகும். அதையாவது இயற்கையாகப் பிரசவிப்பதற்கு அனுமதியுங்கள். ஏதேனும் ஒன்றையாவது சுயமாகக் கற்றுக் கொள்ளுங்கள். எல்லாவற்றுக்கும் வெள்ளைத்தோல் என்ன சொல்கிறதோ, அப்படியே அடிமைகளைப் போன்று பின்பற்றாதீர்கள். இனி நீங்கள் ஆங்கில மருத்துவர்களாக இருக்க வேண்டாம். இந்திய மருத்துவர்களாக மாறுங்கள். இந்திய மருத்துவ முறைகளை பிரதானமாகக் கற்றுத் தேறுங்கள். ஆங்கில மருத்துவத்தைத் தவிர வேறு எந்த மருத்துவத்தைப் படித்தாலும், கற்றுக் கொண்டாலும் நீங்களும் உருப்படுவீர்கள்; நாடும் உருப்புடும், உலகம் எக்கேடு கெடட்டும், நமக்குக் கவலையில்லை; நம் தாய்நாடு சிறக்கட்டும், அது முக்கியம்; அது மட்டுமே முக்கியம்.

மற்றுமொரு விஷயம், நீங்கள் தொப்புள் கொடியை அது கர்ப்பப்பையிலிருந்து நீங்குவதற்கு முன்பாகவே முரட்டுத்தனமாக பிடித்து இழுக்கிறீர்கள். இது நாளைய கர்ப்பப்பை சம்பந்தமான மாதப் போக்குகள் முறையற்ற தன்மைக்கும், அதிகப்படியான உதிரப்போக்கும், அல்லது மாதப் போக்கின் போது கடுமையான



டாக்டர். ஃபஸ்லூர் ரஹ்மான்,
MBBS., MD., DV. Ph.D.

வயிற்று வலி ஏற்படுவதற்கும், இன்னும் வாந்தி, மயக்கத்திற்கும் இன்று நீங்கள் பிரசவத்தின் போது தொப்புள் கொடியை முரட்டுத்தனமாக இழுத்து வெளியாக்கிய போது கர்ப்பப்பையின் தசை நார்களையும் நிச்சயமாக வாழ்நாள் முழுமையிலும் கஷ்டங்களை ஏற்படுத்தி பெரும் பாடு படுத்தும் என்பதையும் உணருங்கள். இன்று குழந்தை பெற்றெடுத்த தாய்மார்களின் அவ்வளவு கர்ப்பப்பைக் கோளாறுகளுக்கும் ஆங்கில மருத்துவத்தின் மகப்பேறு மருத்துவ முறையின் அறிவு கெட்ட தனத்தின் விளைவே என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

# 10) பிரசவத்தின் போது இறப்பைத் தடுக்க...

கருவுற்ற பெண்கள் பலர் பிரசவத்தின் போது மரணத்தின் விளிம்பிற்கே சென்று விடுகிறார்கள். அவர்கள் பிழைத்து வருவது மறு பிழைப்பு போன்று ஆகி விடுகிறது. முற்காலத்திலும் பிரசவம் என்பது மறு பிழைப்பு என்ற ஒரு பயம் இருந்து வந்தது. நவீன காலத்திலும் இது தொடர்ந்து கொண்டிருக்கிறது. இதில் எத்தகைய வித்தியாசமும் கிடையாது. ஆனால், சமீப காலமாக பிரவத்திற்கு பிறகு இரத்தம் அதிகமாகப் போவதன் காரணமாக தாய்மார்கள் இறந்து வருகிறார்கள். இதற்காக இரத்தப் போக்கை நிறுத்த வேண்டும் என்ற அடிப்படையில் கழுத்து முதல் கால் வரை இருக்கிப் பிடிக்கக்கூடிய எலாஸ்டிக் உறை ஒன்றை உடையைப் போன்று தயார் செய்திருக்கிறார்கள். பிரசவத்திற்குப் பிறகு தாய்மார்கள் இதனைப் போட்டுக் கொண்டால் உடல் முழுமையையும் இறுக்கிப் பிடிப்பதன் காரணமாக இரத்தப் போக்கு நின்று விடுமாம்.

இந்த ஆங்கில மருத்துவத்திற்கு ஏன் அறிவு இவ்வளவு மட்டமாகப் போய்க் கொண்டிருக்கிறது? கழுத்து முதல் கால் வரை எலாஸ்டிக் உறை அணிவதன் காரணமாக சுத்தமான வெளிக் காற்றும், தட்பவெட்ப நிலையின் சுகமும் தோல்களை அடைய முடியாது. எனவே, புத்துயிர் ஊட்டப்படுதல், புத்துணர்வு அளிக்கப்படுதல் போன்றவை நிகழாது. உடல் பலவீனமடையும், சுகவீனம் உறுதிப்படுத்தப்படும். உடல் உள்ளுறுப்புக்களின் சுகாதாரச் சூழ்நிலை கெடும். உடல் உள்ளுறுப்புக்களில் ஒன்று கர்ப்பப்பை, கர்ப்பப்பையின் சுகாதாரம் கெட்டு, அதன் உறுதி பலவீனப்படுத்தப்படும் பொழுது, கர்ப்பப்பை விரிவடைந்து அதனுடைய இரத்தப் போக்கு அதிகமாகும்.

இந்த மகப்பேறு உறையை இறுக்கமாக அணிவதன் காரணமாக உடல் உள்ளுறுப்புக்களுக்குள் இரத்த அழுத்தம் மிகவும் அதிகமாகும். எனவே, மிகப்பெரும் கேடுகள், எதிர்பார்க்காத கெட்ட விளைவுகள் தாய்மார்களின் உடல்நிலையை சீரழித்து விடும். ஆங்கில மருத்துவத்தையும், அதனுடைய போக்கையும், அவற்றின் கண்டுபிடிப்புகளையும் எச்சரிக்கையோடு கவனித்து அறிந்து, அவற்றை விட்டும் விலகுங்கள். ஒவ்வொரு விஷயத்தையும் சிந்தனையோடு சீர்தூக்கிப் பாருங்கள். மனிதர்களின் மொழிகளை கடந்து நிற்கும் அந்த சிந்தனை உங்களை தெளிவான சுகத்தின் பால் ஈடேற்றும். உங்கள் வாழ்க்கையும் வளம் பெறும்.

# 11) இனிய சுகப்பிரசவத்திற்கு..!

உங்கள் குழந்தைகள் நல்ல சதைப்பிடிப்போடு இருப்பது போன்று உங்களுக்குத் தோன்றுகிறது. ஓரளவுக்கு உங்கள் திருப்திக்கேற்ப 3 வேலைகளும் சாப்பிடுகிறார்கள் என்றும் தெரிகிறது. ஆனாலும் உங்களுக்குள் ஒரு கவலை, பார்வையில் எந்த அளவுக்கு தோற்றமளிக்கிறார்களோ அந்த அளவுக்கு உடல் ஆரோக்கியமாக இல்லை; அதிகமான சோர்வு அவர்களிடம் இருக்கிறது.

இரத்தச் சோகை காரணமாக அவர்கள் கால்களும் பலமிழந்து எலும்புகளும் உறுதியிழந்து இருக்கின்றன. களைப்பு மிகுதியும், தூக்கம் மிகுதியும் காணப்படும். இன்னும் சில குழந்தைகள் சதைப்பிடிப்பே இல்லாமலும் இத்தகைய குறைபாடுகளுக்கு உள்ளாகிறார்கள். இரத்த சோகையின் காரணமாக கைகளும், கால்களும் வெப்பசக்தி குறைந்து ஜில்லென்று இருக்கும். கொஞ்சம் வேலை செய்தாலும் ஓடியாடி விளையாடினாலும் வியர்வை அதிகமாக இருக்கும். மேல்மூச்சு வாங்குதலும் அவர்களுக்கு அதிகமாக இருக்கும். இது அந்தக் குழந்தைகளுடைய ஒட்டுமொத்த பலவீனமாகும்.

தாய்மார்களே, உங்கள் குழந்தைகளுக்கு ஏன் இந்த நிலை என்பதை மகப்பேறு சிறப்பு மருத்துவர்கள் உங்களுக்கு அறிவிக்க போதிய மருத்துவ அறிவு பெற மாட்டார்கள். உங்களுடைய குழந்தைகளின் இந்த நிலைக்கு ஒரே காரணம் நீங்கள் கர்ப்ப காலத்தின் போது உங்களுக்குக் கொடுக்கப்பட்ட இரும்புச் சத்து மாத்திரைகள்தான். இது உங்களுடைய இரத்த சோகையை நீக்குவதற்கு குழந்தையின் ஆரோக்கியத்திற்கு என்று சொல்லிக் கொடுப்பார்கள். இவை இரும்புச் சத்துக்கள் அல்ல. உங்களுடைய இரத்த உற்பத்தியை விளைவிக்கக் கூடிய எலும்பு மஜ்ஜைகளை பாதிக்கிறது. சிறுநீரகங்களையும் பாதிக்கிறது. இதன் காரணமாகவே இரத்த சோகை ஏற்படும். கர்ப்ப காலத்தில் நீங்கள் உட்கொண்ட இரும்புச் சத்து மாத்திரைகள் என்று கொடுக்கப்பட்டவை உண்மையில் இரும்பு என்ற உலோகத்தின் தன்மையைக் கொண்டிருக்கக்கூடிய பகிரங்கமான விஷம் ஆகும்.

நீங்கள் மகப்பேறு மருத்துவ நிபுணரிடம் சென்றதும் உங்கள் கண்களைப் பிதுக்கி பார்த்துவிட்டு உங்களுக்கு அனிமியா என்று கூறி, இரும்புச் சத்து மாத்திரைகளைக் கொடுப்பார்கள். இது தாயினுடைய இரத்த சோகை மேலும் அதிகரிக்கக் கூடிய பாதையில் அந்தத் தாயை சீரழிப்பதற்கு ஒப்பான செயலாகும். கர்ப்பகாலம் முதிர்ச்சியடையும் தருவாயில் ஏழாவது, எட்டாவது மாதங்களில் எலும்புகளின் பலவீனத்தால் பெரும் சோர்வையும், களைப்பையும் உணர்வார்கள். குறிப்பாக, அடிமுதுகு, இடுப்பு எலும்புகள் அதிகமாக வலியும், உளைச்சலும் கொள்ள ஆரம்பிக்கும். சிறு வேலைகள் செய்தாலும் மேல் மூச்சு வாங்கும். சிறுநீர்



டாக்டர். ஃபஸ்லூர் ரஹ்மான்,
MBBS., MD., DV. Ph.D.

பிரிவதில் தடை ஏற்படும். கால்களில் வீக்கமும் உண்டாகும். அடிக்கடி சிறுநீர் கழிதலும், சிறுநீர் பிரிதலின் போது எரிச்சலும் இரும்புச் சத்து மாத்திரை என்ற விஷத்தின் காரணமாக வாழ்க்கையின் பிற்பகுதியில் எந்தக் காலத்திலும் எந்தத் தருணத்திலும் ஆரம்பமாகலாம். இந்த கஷ்டங்கள் நிலைத்து விடலாம். இது எந்த அளவுக்கு கர்ப்பகாலத்தில் நீங்கள் உட்கொண்ட இரும்பு மாத்திரை சிறுநீரகங்களைப் பாதித்திருக்கிறது என்பதைப் பொறுத்தது.

சிறுநீரகங்களில் ஒரு சிறு பாதிப்பு ஏற்பட்டாலும் முறையான இரத்த அணுக்களின் உற்பத்தியையும் அவற்றின் செயல்பாட்டையும் நிச்சயமாகப் படிப்படியாகப் பாதிக்கும். சிறுநீரகங்களின் உறுதித்தன்மை இரும்பு இரசாயனம் கொண்ட மருந்துகளால் தன் செயல்திறன் தன்மையில் பாதிக்கப்படும் பொழுதுதான் கர்ப்பப்பையின் பலவீனம் ஆரம்பமாகிறது. கர்ப்பப்பை தளர்ந்து, பெருக்க ஆரம்பிக்கிறது. எந்த அளவுக்கு வயிற்றின் அளவு கர்ப்ப காலத்தில் அதிகமாக பெருக்க ஆரம்பிக்கிறதோ, அந்த அளவுக்கு கர்ப்பப்பையினுள் நீர்க்கோப்பு அதிகமாக இருக்கிறது. பனிக்குடம் பெருக்கிறது. வளரும் சிசுவானது மிக அதிகமாக உருளுகிறது. ஆனால் இன்னும் சில கர்ப்பவதிகளைப் பார்த்தீர்களானால் ஒன்பதாவது மாதம் முடியும் தருவாயிலும் கர்ப்பம் இருக்கிறதா என்று சந்தேகம் கொள்ளும் அளவுக்குத்தான் அவர்கள் வயிற்றின் வீக்கம் காணப்படும். இதுவே முறையானதும், சரியானதுமான கர்ப்பப்பையின் வளர்ச்சியாகும். நிச்சயமாக இவ்வகையிலான உறுதியான கர்ப்பப்பையின் நிலையைக் கொண்டிருக்கும் தாய்மார்களுக்கு உறுதியாக சுகப்பிரசவம்தான்.

தாய்மார்களே, எப்பொழுது உங்களுடைய வயிறு கர்ப்ப காலத்தின் போது அதிகமாக அளவுக்கு மீறி பெரிதாக ஆகிக் கொண்டிருக்கிறது என்பதை நீங்கள் பார்த்தீர்களோ, அது உங்களுக்கு உறுதியான அறிவைத் தர வேண்டும். உங்களது கர்ப்பப்பை பலவீனமாகிக் கொண்டிருக்கிறது! இது சுகப்பிரசவத்திற்கு வழியே இல்லாத நிலைக்குத் தள்ளி விடும். ஆனால், ஆங்கில மருத்துவ அறிவின் போதாத் தன்மை என்னவென்றால், மகப்பேறு மருத்துவ நிபுணர்கள் வயிற்றை உருட்டி, உருட்டித் தடவிப் பார்ப்பார்கள். குழந்தை உயிருடன் இருக்கிறதா என்று வயிற்றின் மீது காதை வைத்தும் பார்ப்பார்கள். பிறகு, ஏதேதோ செய்வார்கள். குழந்தை நன்றாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்று கூறுவார்கள்.

அறிந்து கொள்ளுங்கள், உண்மையான ஞானங்களுக்கும், ஆங்கிலேய மருத்துவமான மகப்பேறு மருத்துவ அறிவுக்கும் இடையே எவ்வளவு தூரம். இந்த மருத்துவத்திற்குத் தாயைப் பற்றியும் தெரியாது; குழந்தையைப் பற்றியும் தெரியாது. வயிறு வீங்கி, பெரிதாகிக் கொண்டிருக்கும் தாய்மார்கள் எந்த வேலையையும் செய்ய சக்தி பெற மாட்டார்கள். அதிகமாக மேல்மூச்சு வாங்கும். மிகுதியான சிரமத்துடனேயன்றி அவர்களால் வீட்டு வேலைகளில் ஈடுபட முடியாது. கர்ப்ப காலத்தின் ஏழாவது மாதத்தில் இன்ஜெக்ஷன் TT ஜன்னி தடுப்பு ஊசி என்று சொல்லிக் கொள்ள(கொல்ல)க் கூடிய ஒன்றைப் போடுவார்கள். இது

எந்த வித ஜன்னியையும் தடுக்காது. இதனைப் போடாமல் தவிர்த்து விடுவதன் காரணமாக ஜன்னி ஏற்படப்போவதுமில்லை. ஆனால், இந்தத் தடுப்பு ஊசியினுடைய பக்கவிளைவுகளோ மிக மிக மெதுவாக வாழ்நாள் முழுமையும் துன்பப்படக் கூடிய ஆங்கில மருத்துவம் இனம் காண முடியாத துயரங்களாக உருவாகும். பிறகு, இந்த நோய்களுக்கு Auto immune disease என்றும் பெயர் இடுவார்கள். இதனுடைய பொருள், இந்த நோய்கள் பற்றி எங்களுக்கு எதுவுமே தெரியாது என்று அந்த போலி மருத்துவர்களைப் பற்றிய உண்மை நிலையை அறிவிக்கும் ஒரு யோக்னஸிஸ் ஆகும்.

ஆனாலும் ஆட்டோ இம்யூன் டிசீஸ் என்று கூறுவதன் காரணமாக தாங்கள் ஒரு பெரிய நோயை நவீன உபகரணங்களைக் கொண்டு திறமையாகக் கண்டுபிடித்து விட்டார்கள் என்று போலித்தனமாக பாமர மக்களை நம்ப வைக்கும் படு நயவஞ்சகமான மருத்துவமாகும். இப்பொழுது இன்னும் புதிய புதிய விஷத்தன்மை கொண்ட மருந்துகளைக் கொடுப்பார்கள். தாய்மார்களே, இது உங்களையும், உங்களுடைய வயிற்றில் இருக்கும் குழந்தையையும் வாழ்நாள் முழுமைக்கும் ஆங்கில மருத்துவத்திடமிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டிய தருணமிது. உங்களுடைய வயிற்றின் வீக்கம் குறைய வேண்டும். கர்ப்ப காலம் அதிகரிக்க அதிகரிக்க அதாவது பிரசவ நேரம் நெருங்க நெருங்க ஒவ்வொரு நாளும் புதுப்புது தெம்புடனும், புதுப் பொலிவுடனும், புது உற்சாகத்திடனும் உங்களுடைய உயிரோட்டத்தினுடைய நிலை அதிகரிக்க வேண்டும். இதுதான் உங்களுடைய நாளைய வாழ்க்கையினுடைய வளமைக்கும், பிறக்கப் போகும் குழந்தையின் அனைத்து இயற்கையின் ஆற்றலையும் கொண்டு பிரசவிக்கவிருக்கும் பேரருட்கொடையை உங்களுக்கு நெருக்கமாகிக் கொண்டு வருவதை உங்களுக்கு உணர்த்துவதாக அமையும்.

எனவே, பிரசவகாலம் நெருங்க நெருங்க வயிற்றின் கனம் குறைய வேண்டும். அந்த அளவுக்கு உங்கள் உடலின் இயக்க சக்தி பெருக வேண்டும். உங்களுடைய குழந்தை பிரசவ காலம் நெருங்கும் பொழுது தலைகீழாக மாறி படிப்படியாக இறங்கும். பனிக்குடத்தில் தண்ணீர் அளவோடு இருந்தால்தான் கர்ப்பப்பையினுள் உள்ள சிசுவானது அளவுக்கு மீறி சுழலாமல் இருக்கும். மாறாக, பனிக்குடத்தில் அளவுக்கு மீறி தண்ணீர் இருக்குமானால் சிசுவின் அசைவுகள் பனிக்குடத்தில் அதிகமாக இருக்கும். இந்த சுழற்சியில் மிதந்து கொண்டிருக்கும் சிசுவின் தலை நன்றாகக் கவிழ்ந்து நெஞ்சோடு ஒட்டி இருப்பதற்கு பதிலாக நீரில் தலை மிதந்து கழுத்து நீண்டு வர ஆரம்பிக்கிறது. இந்த நிலையின் போதுதான் தொப்புள் கொடி சிசுவின் கழுத்தில் சுற்றிக் கொள்கிறது. எனவே, இயற்கையின் பாதுகாப்பு என்னவென்றால் குழந்தை இறங்குவதற்கு இரண்டு மூன்று நாட்களுக்கு முன்பாகவே பனிக்குடம் உடைகிறது. பெரும்பாலான நீர் வெளியேறுகிறது. தொப்புள்கொடி கர்ப்பப்பையின் சுவற்றோடு ஒட்டிக் கொள்கிறது. உள்ளே சிசுவின் இயக்கம் முறையான இயக்கத்திற்குத் திரும்புகிறது. மீண்டும் கழுத்துப்

பகுதியானது வளைந்து, தலையானது நெஞ்சுப் பகுதியோடு ஒட்டுகிறது. குழந்தை கீழிறங்க ஆரம்பிக்கிறது.

எனவே, தாய்மார்களே, பனிக்குடம் உடைந்து விட்டது என்றவுடன் ஆஸ்பத்திரிக்கு உடனே எடுத்துச் செல்ல வேண்டும் என்ற தவறான போக்கைக் கைவிடுங்கள். உடனே ஆஸ்பத்திரிக்கு செல்ல வேண்டும் என்று ஆங்கில மருத்துவம் கூறும். ஆங்கில மருத்துவம் ஏதுமறியாத பாமரத்தனமான மருத்துவம் என்பதை இதுவரை நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்கள். பிரசவ வலி முறையாக ஏற்பட ஆரம்பிக்கவே ஆகக் குறைந்தபட்சம் ஓரிரண்டு நாட்களாவது ஆகும். பிரசவ வலி எப்போது ஆரம்பமாகிறது என்பதையும் நீங்கள் அறிய வேண்டும். கீழே இறங்கிக் கொண்டிருக்கும் சிசுவின் தலையானது கர்ப்பப்பையின் வாசலில் தலை தட்டும் பொழுது இலேசான ஒரு அடிவயிற்று வலி ஆரம்பமாகும். தலை இறங்க இறங்க கர்ப்பப்பை வாசல் படிப்படியாக விரிகிறது.

அவ்விதமாக, விரிவடையும் பொழுது முன் அடிவயிற்றிலும், அடிவயிற்றின் பக்கங்களிலும் வலி பரவுகிறது. கர்ப்பப்பையின் வாசல் என்பது ஒரு சிறிய குழல் போன்றது. வெளிப்புறம் ஒரு வாயிலும், கர்ப்பப்பையின் உட்புறமாக ஒருவாயிலும் இருக்கிறது. சிசுவின் தலையானது கர்ப்பப்பையின் உட்புற வாயில் வழியாக வெளிப்புற வாயிலுக்கு நெருங்கி வரும் பொழுதுதான் விலாப்புறங்களில் வலியும், அடிமுதுகில் வலியும் தெரிய ஆரம்பிக்கும். இந்த வலி உணர்வு இருக்கும் நேரமெல்லாம் சிசுவானது இறங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அறிய வேண்டும். எந்தத் தருணத்திலும் வீட்டிலேயே குழந்தை சுகமாகப் பிரசவித்து விடலாம் என்பதை நம்புங்கள். ஆஸ்பத்திரிக்குச் சென்று அங்குள்ள கெட்ட வாசனையையும், துர்வாசனையையும், இன்னும் மருந்துகளின் நெடியையும், நச்சுத் தன்மை கலந்த அந்த பிரசவ வார்டுகளில் உள்ள வாயுக்களையும் உங்களுக்குப் பிறக்க இருக்கும் குழந்தை முதல் மூச்சாக சுவாசிக்க வேண்டும் என்று ஒருபோதும் விரும்பாதீர்கள்.

முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது போன்று குழந்தையின் முதல் சுவாசமே கேடு கெட்ட சுவாசமாகி விடும். வலி ஏற்படும் வரை காத்திருங்கள். பனிக்குடம் உடைந்து விட்டதே என்று பதட்டப்படாதீர்கள். நாள் கணக்கையும், நேரக் கணக்கையும் மறந்து விடுங்கள். வலி ஏற்பட்டு விட்டால், வலி முடிவாக, பிரசவமாக முடிவுறும் வரை காத்திருங்கள். உங்கள் வீடுகளிலேயே சுகாதாரமான சூழ்நிலையில் உங்கள் குடும்ப உறவினர்களிடத்தே சகஜமாகப் பேசிக் கொண்டிருக்கும் நிலையிலேயே சுகமான பிரசவம் இனிதே நிறைவேறும்.

# 12) ஆறு மாத கர்ப்பிணி சிசுவின் இருதயம் துடிக்கவில்லை! கர்ப்பம் தரித்ததன் முதலாக கால்ஷியம் மருந்துகள் கொடுத்ததன் விளைவு!

மகாராஷ்டிராவைச் சார்ந்த ஆறு மாத கர்ப்பிணியான நிகேதா மேத்தா தனது கணவருடன் குடும்ப டாக்டரிடம் பரிசோதனை செய்து கொள்ள சென்றார். பரிசோதித்த மகப்பேறு மருத்துவ நிபுணர், “வயிற்றில் வளரும் குழந்தையின் இருதயத்தில் அடைப்பு இருக்கிறது” என்று கூறியிருக்கிறார். மேலும், “குழந்தை பிறந்தால் மாரடைப்பு நோயோடுதான் பிறக்கும். இருதய அறுவை சிகிச்சை செய்ய வேண்டியிருக்கும். ‘பேஸ் மேக்கர்’ கருவியைப் பொருத்தினால்தான் வாழ முடியும். அதுவும் 5 வருடங்களுக்குத்தான் வேலை செய்யும். பிறகு வேறு ஆபரேஷன் செய்து திரும்பவும் பேஸ் மேக்கர் பொறுத்த வேண்டும். ஒவ்வொரு முறையும் பேஸ் மேக்கர் பொறுத்துவதற்கு ஒரு லட்சத்திற்கு மேலாக செலவாகும்” என்று ஆருடம் கூறியிருக்கிறது ஆங்கில மருத்துவம்.

நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்த அந்தத் தம்பதியினரால் இந்தப் பேரதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவர்களுடைய இருதயமே நின்று போய் விடும் போல் ஒரு குண்டைப் போட்டு விட்டனர், மகப்பேறு நிபுணர்கள். எனவே, இப்படி ஒரு நஷ்டத்தை பொருளாதார ரீதியிலும் தாங்கிக் கொள்ள முடியாது. பிறந்த குழந்தைக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து ஒவ்வொரு ஐந்தாண்டும் மறுமுறை, மறுமுறை என்று செய்யக்கூடிய சிகிச்சை என்ற அந்த நரக வேதனையைத் தாங்கிக் கொள்ள முடியாது. இந்தக் குழந்தை தனக்கு வேண்டாம் என்று முடிவு செய்து, உயர்நீதி மன்றத்தில் வழக்குப் போட்டனர். அங்கும் நீதிபதிகள், 3 டாக்டர்கள் கொண்ட கமிட்டியை அமைத்து விசாரித்ததில் அந்த டாக்டர்கள் கூறியிருக்கிறார்கள், “சந்தேகம்தான் இருக்கிறதே தவிர, உண்மையில் அதுதானா என்று திட்டவட்டமாகக் கூற முடியாது” என்று கூறியிருக்கின்றனர்.

எனவே, நீதிபதிகள் டாக்டர்கள் சந்தேகம்தான் கொள்கின்றனர் என்ற அடிப்படையிலும், மேலும் சட்ட ரீதியாக 6 மாதம் முடிவடைந்து விட்ட சிசுவை கலக்கச் சொல்வதற்கு நீதிபதிகளுக்கு அதிகாரம் இல்லையென்றும், பாராளுமன்றம்தான் முடிவு எடுத்து உங்களுக்கு அனுமதி அளிக்க முடியும் என்றும் கை விரித்து விட்டனர். ஆகவே, நீதிபதிகளாலும் நீதி செய்ய முடியவில்லை. எனவே, இருதலைக்கொள்ளி எறும்பு போன்று மாட்டிக் கொண்டனர் நிகேதா தம்பதியினர். நீதிபதியிடமிருந்து நீதி இல்லை; மருத்துவர்களிடமிருந்து சந்தேகமும், பொய்யும். திருமதி நிகேதா அவர்கள் என்ன

செய்ய முடியும்? இறைவன் விட்ட வழிதான் என்று இருக்க முடியுமா? முடியாது. ஏனென்றால், 21வது நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாமெல்லாம் படித்தவர்கள். இறைவனை நம்புவது என்பது வேடிக்கையும், கேலி கூத்துமாகும். விஞ்ஞான உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் கடவுள், தெய்வம் என்றெல்லாம் நம்பலாமா என்று ஒருபுறம். மற்றொரு புறம், 21ம் நூற்றாண்டின் மருத்துவத்தை நம்பினால் குழந்தை குற்றுயிரும், குலையுயிருமாக ஆக்கப்பட்டு, நவீன டாக்டர்களிடம் மாட்டிக்கொண்டு சித்திரவதைகுள்ளாகி, நரக வேதனையை அனுபவித்து, மீள முடியாத துயரத்தில் ஆகி விட வேண்டுமே என்று மறுபுறமும் மனம் புண்பட்டு நிம்மதியும், அமைதியும் இழந்து விட்டது. இது அந்தத் தாயின் மனநிலை.

திருமதி நிகிதாவின் இந்த நிலை கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஒரு பாடமாக அமையும் என்று மட்டும் கூற முடியும்.

## 13) சில கேள்விகள் ஆங்கில மருத்துவர்களுக்கு ....!

1. கர்ப்பம் தரித்த நாள் முதலாக உங்களிடம் முறையாக 15 நாட்களுக்கு ஒருமுறை அல்லது மாதம் ஒருமுறை வந்து தவறாமல் செக்கப் செய்து கொள்ள வேண்டும்.

2. நீங்கள் மாத்திரைகளைக் கொடுப்பீர்கள். மருந்துகளையும், ஊசிகளையும் போடுவீர்கள். எதற்காக என்று உங்களுக்குத் தெரியாது. ஆனால், தாய்மார்களிடம்.

3. கண்டிப்பாக இந்த மருந்து, மாத்திரைகளை உட்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் குழந்தை நல்ல முறையில் வளரும் என்று பொய் கூறுவீர்கள்.

4. அது உண்மையென்றால் நிகேதா உங்களை நம்பி அந்த மருந்துகளைச் சாப்பிட்டார். தானும், தனக்குப் பிறக்கப் போகும் குழந்தையையும் எந்தக் குறையும் இல்லாமல் வாழ்நாள் முழுமையும் கணவன், மனைவி, பிள்ளை என்று குடும்ப சகிதமாக வாழப் போகிறோம் என்று. அந்த நம்பிக்கையின் மீது மண்ணை வாரிப் போட்டிருக்கிறீர்கள்.

5. எப்படி இது சாத்தியம்? தாயையும், சேயையும் நீங்கள் கொடுக்கக்கூடிய மருந்துகளும், மாத்திரைகளும் நலமாக்கும் என்பது பொய்தானே? நீங்களா படைப்பவர்கள்? நீங்களா கருவை உருவாக்கியவர்கள். நீங்களா ஆண் கருவையும், பெண் முட்டையையும் படைத்தவர்கள்? அதனை உங்களால் உருவாக்க முடியுமா?

6. ஒரு ஆண் அணு உருவாவது என்றால், அதற்கு தேவையானவை என்னென்ன என்பது உங்களுக்குத் தெரியுமா? அல்லது தெரியாததை கற்பனைகளாக உளறுகின்றீர்களா?

7. ஏதோ இரண்டு மூன்று கிறுக்குத்தனமான மாத்திரைகளை வைத்துக்கொண்டு விஷத்தையும், நச்சுக்களையும் கொண்டிருக்கக்கூடிய கால்ஷியம், இரும்பு மாத்திரை, ஃபோலிக் ஆஸிட், வைட்டமின்கள் இவற்றைக் கொடுத்து விட்டால் ஆண் அணு உருவாகி விடும். உங்களுக்கே இது வேடிக்கையாக இல்லை?

8. சரி ஒரு பெண் அணுவாகிய முட்டையை உங்களுடைய இந்த மருந்துகளைக் கொடுத்து தயாரித்து விடுவீர்களா?

9. ஒரு ஆண் அணுவும், பெண் முட்டையும் ஒரு சிசுவாக மாறி, ஒரு குழந்தையாக உருவெடுத்து, பின்னர் அது வெளியேறி, உடலில் பிரசவித்து அந்தக் குழந்தை 90

வயது வாழக்கூடிய அவ்வளவு சக்தியும் படைத்திருக்கிறது. தன்னுள் அடக்கியிருக்கிறது அந்த ஆண் அணுவும், பெண் அணுவாகிய முட்டையும்.

10. இப்பொழுது நீங்கள் தாயையும், சேயையும் காப்பாற்றப் போகிறோம் என்று கூறுகிறீர்களே, இந்த ஆணவத்திற்கும், அழிச்சாட்டியத்திற்கும் முற்றுப்புள்ளி வைப்பது போன்ற கேள்வி, ஒரு சவால்;

11.உங்களுடைய அறிவு கெட்ட ஆங்கில மருத்துவம் சொல்லக்கூடிய மேற்சொன்ன மாத்திரைகளையும், மருந்துகளையும், இன்னும் என்னென்ன ரசாயனங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவையும் எடுத்துக் கொள்ளுங்கள். ஒரு ஆண் அணுவையும், முட்டையையும் உங்களுடைய கேடு கெட்ட பரிசோதனைக் கூடங்களில் வைத்து முடிந்தால் உற்பத்தி செய்து காட்டுங்கள். வக்கில்லைதானே .???

12. பின்னர் எப்படி உங்களுடைய நச்சு மருந்துகளைக் கொண்டு, விஷங்களைக் கொண்டு தாயையும், சேயையும் காப்பாற்றிக்கொள்ள மேற்சொன்ன விளக்குமாற்று மருந்துகளுக்கு சக்தியிருகிறது என்பதை நம்புகிறீர்கள்?

13. கால்ஷியம் மாத்திரைகளை நீங்கள் கொடுக்கிறீர்கள். அந்த கால்ஷியம் மாத்திரைகள் உயிருள்ளவையா? அல்லது உயிரற்றவையா? உங்களுக்குப் புரியும்படியே கேட்கிறேன். அந்த கால்ஷியம் மாத்திரைகள் ரசாயனங்களா? அல்லது இயற்கையான ஊட்டப் பொருளா? ரசாயனங்கள் என்பது உங்களுக்குத் தெரியும். அது ஊட்டப் பொருள் அல்ல என்பதும் இப்பொழுது உங்களுக்குப் புரிய வேண்டும்.

14. ஒரு ரசாயனப் பொருள், அல்லது நச்சுப்பொருள் உதாரணமாக கால்ஷியம் அது உயிரை வாங்குமா? அல்லது உயிரைக் கொடுக்குமா?

15. கால்ஷியம் என்ற இந்த ரசாயனப் பொருள், ரசாயனமாக இருப்பதன் காரணமாக உடல் இயற்கை கால்ஷியம் என்ற நச்சுப்பொருள் அதனை நிராகரிக்கும். எனவே உடலின் பல்வேறு திசுக்களில் அவை தங்கி விடுகின்றன.

16. தசைநார்களிலும் குறிப்பாக இருதய தசைநார்களின் வெளிப்புறங்களில் தேங்குகின்றன, கால்ஷியம் என்ற ரசாயனப் பொருள். இந்த கால்ஷியம் அதிகமாகும் பொழுது இருதய அடைப்பு உருவாகிறது. அல்லது இருதயத் துடிப்பு வெகுவாக சீர்குலைகிறது. இதனை உங்களுடைய மருத்துவப் புத்தகங்கள் பக்கவிளைவுகளாக அமையும் அபாயம் என்று எழுதியிருப்பது உங்களுக்குத் தெரியுமா? அல்லது தெரியாதா? உங்களுடைய மருத்துவப் புத்தகங்களைப் புரட்டிப் பாருங்கள். தெரிந்து கொள்ளுங்கள். கால்ஷியம் மாத்திரைகள் மிக மிக அபாயகரமானவை.

17. இந்த கால்ஷியம் மாத்திரைகள் காரணமாகத்தான் கர்ப்பத் தசைகளின் பிரசவ நேரத்தின் போது நிகழும் தாறுமாறான இயக்கத்திற்கு காரணமாக அமைந்து விடுகின்றன.

18. பிரசவ நேரத்தின் போது உயிர் போகக்கூடிய அளவுக்கு கடுமையான வலி ஏற்படுவதற்குக் காரணம் இந்த கால்ஷியம் மாத்திரைகள்தான்.

19. சுகப் பிரசவத்திற்கு எதிராக அமைவதும் இந்த கால்ஷியம் மாத்திரைகள்தான்.

20. சற்று சிந்தித்துப் பார்த்திருப்பீர்களா? தாய்க்கும், சேய்க்கும் நலத்தைக் கொடுக்கிறோம் என்று கர்ப்பிணித் தாய்மார்களை ஏமாற்றி, நயவஞ்சகம் செய்து, இறுதியாக 10 மாதங்கள் கழித்து சுகப் பிரசவம் நடக்குமா? நடக்காதா என்பது கூட தெரியாத அளவுக்குத்தான் மகப்பேறு மருத்துவ அறிவிலிகளை ஆங்கிலேய மருத்துவம் தயாரித்து உலக அளவிலும் அனுப்பிக் கொண்டிருக்கிறது.

21. ஒரு சுகப் பிரசவத்திற்கு கூட வக்கிலாத இந்த ஆங்கில மருத்துவமா தாயையும், சேயையும் காப்பாற்றும்???

தாய்மார்களே, மேலே சொன்ன 21 கேள்விகளும் விஷயங்களும் உங்களுக்கு கர்ப்பம் தரித்த நாளிலிருந்து சிசுவையும், உங்களையும் பாதுகாக்க ஆங்கில மருந்துகளின் பக்கம் செல்லக் கூடாது என்பதைத் தெளிவாக அறிவிக்கக் கூடிய போதுமான எச்சரிக்கையாக இருக்கின்றன, நீங்கள் இந்த சத்தியத்தை ஏற்றுக் கொள்வதும், அல்லது புறக்கணிப்பதும் இறைவனுடைய நாட்டம் உங்கள் மீது இருக்கிறதா? இல்லையா என்பதைப் பொறுத்துத்தான்.

முதல் பிரசவம் என்பது செத்துப் பிழைப்பது போல் என்று கூறுவார்கள். அவ்வாறல்ல, எப்பொழுதுமே பிரசவம் சுகப்பிரசவம்தான். இறைவனுடைய நாட்டப்படி சிந்தித்துணர்ந்து மருந்துகளையும், மாத்திரைகளையும் கொண்டு சிசுவை நச்சுப்பொருளாக ஆக்காமல் அதனை ஒரு உயிரோட்டமுள்ள ஆன்மீகக் குழந்தையாக தாய்க்கும் சுகத்தைக் கொடுத்து தானும் சுகமான வெளியேற்றத்தில் பிரசவிக்கக் கூடிய ஒரு அருட்பெரும் கொடையாக உங்கள் மடிகளில் விழ வேண்டும்.

ஆங்கிலேயர்களின் மகப்பேறு மருத்துவம் ஒரு குட்டிச்சுவர். சுகப் பிரசவமும் கிடையாது, நிகழவும் நிகழாது. குழந்தை பிறந்து விட்டால், குழந்தைக்கு தாயிடமிருந்து பால் கிடைக்கக்கூட வகையறியாத மருத்துவம்தான் மகப்பேறு மருத்துவம். குழந்தைக்கு பால் இல்லையென்றால் பவுடர் பால் கொடுங்கள் என்று வெட்கமில்லாமல் கூறிக் கொண்டிருக்கிறது இந்த ஆங்கில மருத்துவம். இதற்கு மேலும் இந்த ஆங்கில மருத்துவத்தை நீங்கள் பின்பற்றுவீர்களானால், சொல்ல வேண்டியது மட்டும்தான் கடமையாகிறது. நிர்பந்திப்பதோ, கண்காணிப்பதோ நம்மைப் படைத்த இறைவனுக்கு கூட தேவையில்லாதது.

மேற்சொன்ன நிகேதா மேத்தா தம்பதியினர் இன்று முதலாக கொடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய பிரசவத்தின் ஆங்கில மருத்துவம் கொடுத்த அத்தனையும் நிறுத்த வேண்டும். இன்னும் அவர்கள் மனதிலும் உறுதி கொள்ளட்டும். நிச்சயமாக இனி அடுத்து அவர்களுக்கு நல்ல குழந்தை இருக்கிறது, சுகப்பிரசவமும் ஏற்படும். தாயையும், சேயையும் பாதுகாக்கின்றேன் என்று கூறி அகம்பாவத்துடனும், அழிச்சாட்டியத்துடனும் செயல்பட்ட இந்தக் குருட்டு ஆங்கில மருத்துவத்தை கை விடுவது அவர்களுடைய தசைநார்களில், கர்ப்பப்பைகளின் தசைநார்களில், குழந்தையினுடைய இருதயத்தின் தசைநார்களில் தேங்கியிருக்கக் கூடிய அனைத்து நச்சுக்களையும் விரைவாக வளர்ந்து வரும் உடல் இயற்கை நிச்சயமாக நீக்கும். இறைவனுக்கு இணையாக எந்தவொரு மருத்துவத்தையும், எந்தக் கபோதியையும் இனி ஒருக்காலும் துணையாக்கிக் கொள்ளாமல் இருப்பது நிச்சயமாக இறைவனுடைய மன்னிப்பையும், அவனிடத்திலிருந்தும் உள்ள ஆசீர்வாதத்தையும், அனுகிரகத்தையும் பெற்றுத் தரும். இருதயம் துடிப்போடு இயங்கவும் ஆரம்பிக்கும்.

இதைத் தவிர்த்து ஆங்கில மருத்துவத்தின் அநியாயத்தை மேலும் மேலும் உடலில் சாட்டிக்கொண்டு இறைவனைப் பிரார்த்திக்கின்றேன் என்று வெட்டித்தனமான பிரார்த்தனை ஒருபோதும் செல்லாது. இறைவனுக்கு எந்தவொரு படைப்பையும் இணையாக்கக் கூடாது. படைப்பு என்பது இறைவனுக்கு மட்டுமே சொந்தம். நானும் படைப்பேன் என்று தன்னையே கடவுளாக்கிக் கொண்டிருக்கக்கூடிய ஆங்கில மருத்துவம், அது ஒரு செத்தப்பிணம். சிசுவை நிச்சயமாக சாகடித்து விடுவார்கள். எனவே, ஆங்கில மருத்துவத்தை விட்டும் விலகுங்கள். நிச்சயமாக உங்கள் செயலைப் பற்றி இறைவன் திருப்தியடைவான். இதுவே செயல் பூர்வமான சிறந்த பிரார்த்தனை....

# 14) பின் இணைப்பு

**நோயின்றி வாழ புரிந்துகொண்டு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்**

**உணவு [ மண் ]**

- பசி இல்லாதபோது சாப்பிடக்கூடாது. [ வாயு தொந்தரவு , அஜீரணம் , வயிற்று வலி , சுகர் நீரிழிவு போன்ற தொந்தரவுகளுக்கு அடிப்படை காரணமே / பசி இல்லாதபோது சாப்பிடுவது தான் [
- உணவில் ஆறு சுவைகள் ]இனிப்பு, கசப்பு, துவர்ப்பு, புளிப்பு, உப்பு, காரம் இருக்க [ .வேண்டும் சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் - இனிப்பு சாப்பிட வேண்டும்.
- நாக்கால் சுவையை ருசித்த பின்னரே விழுங்க வேண்டும்ஆறு சுவையையும் திகட்டும் . .வரை உண்ண வேண்டும்
- சாப்பிடும்பொழுது கண்களை மூடி, உதட்டை மூடி, உதட்டை பிரிக்காமல் மென்று கூழ் போல் அரைத்துப் பின் விழுங்க வேண்டும். ஏனென்றால் காற்று நம் ஜீரணத்திற்கு எதிரி.
- முடிந்தவரை சாப்பிடுவதற்கு 1/2 மணிநேரம் முன்பும் .பின்பும் நீர் அருந்தக் கூடாது - தேவை ஏற்பட்டால் சிறிதளவு குடித்துக் கொள்ளலாம்ஏனென .்றால் நீர் நம் ஜீரணத்திற்கு எதிரி.
- சாப்பிடுவதற்கு முன்பும் பின்பும் மூன்று முறை உள்ளங்கையில் நீரை உறிஞ்சிக் குடிக்க வேண்டும்.
- குளித்த பின் 45 நிமிடத்திற்குப் பிறகு மட்டுமே சாப்பிட வேண்டும்சாப்பிட்ட . பிறகு 2 1/2 மணி நேரத்திற்குக் குளிக்க கூடாது. அப்படி குளித்தால் நம் உடம்பானது உணவை ஜீரணிபதர்க்கு பதிலாக உடலை வெப்பத்தை சமநிலை படுத்துவதற்கே முன்னுரிமை கொடுக்கும்.
- சாப்பிடும் முன் கை, கால், முகம் கழுவ வேண்டும்.
- பேசிக் கொண்டோ, புத்தகம் படித்துக் கொண்டோ, டிவி பார்த்துக்கொண்டோ சாப்பிடக்கூடாது கவனம் சிதறாமல் இர ]ுக்க [
- கால்களைத் தொங்க வைத்து அமர்ந்து சாப்பிடக்கூடாது.
- முதல் ஏப்பம் வந்த உடனோ அல்லது உணவின் சுவை குறைந்து விட்டாலோ அல்லது போதும் என்ற உணர்வு வந்துவிட்டாலோ சாப்பிடுவதை நிறுத்தி விட வேண்டும்அது . .தான் நாம் சாப்பிட வேண்டிய அளவு

**குடி தண்ணீர் [நீர்]**

- தண்ணீரைக் கொதிக்க வைத்தோ அல்லது நீரை வடிகட்டியோ குடிபதால் அதில் உள்ள தாது உப்புக்களை இழக்க நேரிடும். அந்த தாது உப்புக்களுகாக தான் நாம் நீரையே அருந்துகிறோம் அதற்க்கு பதிலாக . நீரை மண்பானையில் 2 மணிநேரம் வைத்தபின் பயன்படுத்தலாம்பின்னர் செம்பு குடத்தில் வைத்து . நீரை அருந்தலாம்.
- தாகம் எடுத்தால் உடனே தேவையான அளவு மெதுவாக வாய்வைத்து சப்பிக் குடிக்க வேண்டும்.
- மினரல் வாட்டர் பயன்படுத்தக் கூடாதுஅப்படி குடித்தால் உணவில் நீர் சத்து உள்ள . உணவுகளை அதிக அளவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் அல்லது மோர், இளநீர், பதநீர்,.. போன்றவற்றை பருகலாம் . .
- தாகம் இல்லாமல் தண்ணீர் குடிக்கக் கூடாது.
- சிறுநீர் கழித்தால் உடனே நீர் அருந்த வேண்டும்.

- நீரை அன்னாந்து குடிக்கக் கூடாது அப்படி குடித்தால் தைக்கு அதிகமாக ] .மெதுவாக வாய்வைத்து சப்பிக் குடிக்க வேண்டும் . [ குடிதுவிடுவோம்

**ஓய்வு [தூக்கம்] [ஆகாயம்]**

- வடக்கே தலை வைத்துப் படுக்கக் கூடாது.
- டீ, காபி குடிக்கக் கூடாது .
- வெறும் தரையில் படுக்கக் கூடாது.
- உடல் உழைப்பு உள்ளவர்கள் குறைந்தது 6 மணிநேரம் தூங்க வேண்டும்மனதுக்கும் . புத்திக்கும் வேலை கொடுப்பவர்கள் குறைந்தபட்சம் 6 மணிநேரம் ஓய்வு எடுக்க வேண்டும்.
- இரவில் பல் விலக்கிப் படுத்தால் நன்றாகத் தூக்கம் வரும்.
- தாடைக்குக் கீழ் தடவிக் கொடுத்தால் நன்றாகத் தூக்கம் வரும்.
- தலையில் உச்சிக்கும் சுழிக்கும் நடுவில் மசாஜ் செய்தால் நன்றாகத் தூக்கம் வரும்.

**காற்று [வாயு]**

- கொசுவர்த்தி முதலியவற்றைப் பயன்படுத்தக் கூடாது ]விஷவாயுவை சுவாசிக்காமல் இருக்க [
- வீடு, அலுவலகம், தொழிற்சாலை, படுக்கை அறை எங்கும் எப்பொழுதும் காற்றோட்டம் நன்றாக இருக்க வேண்டும்.
- தூங்கும் பொழுது A/C ஐ பயன்படுத்தினாலும் ஜன்னல்களை அடைத்து வைக்கக் கூடாது நாம் சுவாசித்த காற்றயே ] மறுபடியும் சுவாசிக்காமல் இருக்க [
- தலையை போர்த்தி கொண்டு தூங்க கூடாது [ நாம் சுவாசித்த காற்றயே சுவாசிக்காமல் இருக்க [
- மரங்கள் தான் காற்றை உருவாக்குகிறது மின்விசிறியோ குளிர்சாதனமோ அல்ல / அதனால் குளிசாதனத்தில் தூங்கினாலும் ஜன்னலை .என்பதை புரிந்து கொள்ளுங்கள் .திறந்து வைத்து தூங்குங்கள்

**உழைப்பு [நெருப்பு]**

- பசித்தால் மட்டுமே சாப்பிட வேண்டும்.
- உழைப்புக்கேற்ற உணவு .உணவுக்கேற்ற உழைப்பு வேண்டும் (அ)
- தினமும் உடலில் உள்ள அனைத்து இணைப்புகளுக்கும் வேலை கொடுக்க வேண்டும்.
- இரத்தம் ஓட இருதயம் உதவும்ஆனால் நிண .நீர் ஓட உடல் உழைப்பு மட்டுமே உதவும்.
- உடல் உழைப்பு இல்லாதவர்களுக்கு நிணநீர் ஓட்டம் நன்றாக இருக்காதுஇதுதான் பல . .நோய்களுக்கு காரணம்